ம
ஞ்
ச
ரி

விஜய - ஐப்பசி
அக்டோபர் - 1953

-6-
அணா

இறைவனை அடையும் வழி

இறைவனை உண்மையாகக் காண நாம் விரும்பினு அதற்கு ஒரே வழி உண்டு: அது அன்பு அல்லது அஹிம்ஸை நம் நோக்கமும் அதை அடையும் மார்க்கமும் தனித் தன யானவை என்று கருதாமல் நாம் நடந்தொழுகவேண்டும் அன்பு, உண்மை இவற்றின் வடிவே இறைவன் என்பது அ போது விளங்கும்.

—மகாத்மா காந்தி

மஞ்சரி

ஆசிரியர், பதிப்பாளர்: என். ராமரத்தினம்

நிர்வாக ஆசிரியர்: தி. ஜ. ரங்கநாதன்

பாஷை ஆசிரியர்கள்:

கி. வா. ஜகந்நாதன்
த. நா. ஸேனபதி
வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி
சீதா தேவி
கௌரி அம்மாள்
கா. ஸ்ரீ. ஸ்ரீ.
கி. தாமோதரன்
கி. சாவித்திரி அம்மாள்
'ஆர்வி'
மோ. ஸ்ரீ. செல்லம்

ஓவியர்கள்: ஸாமி, மகான், சுசி, சுப்பு.

மஞ்சரி, தபால் பெட்டி நெ. 604, மயிலாப்பூர், சென்னை 4. பிரதி மாதமும் முதல் தேதி வெளிவரும். தனிப் பிரதி விலை 6 அணு. வருஷ சந்தா ரூ. 4/8. கலைமகள் சந்தாதார்களுக்கு மட்டும் ரூ. 4/-. சந்தாத் தொகையை 'ஸர்க்குலேஷன் மானேஜர்' என்ற விலாசமிட்டு அனுப்புக. விலாச மாற்றங்களைத் தங்கள் பழைய விலாசத்துடன் சந்தா எண்ணையும் குறிப்பிட்டுத் தெரிவியுங்கள். மஞ்சரியிலுள்ள எல்லாக் கட்டுரைகளு கதைகளும் பதிப்புரிமை பெற்றவை.

ஆண்டு 6] விஜய-ஐப்பசி :: :: அக்டோபர் 1953 [இதழ் 11

மஞ்சரி

மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

ஊரும் உலகமும்

★

ஆந்திரரின் ஆசைக் கனவு, அக்டோபர் முதல் தேதி பூர்த்தியாகிறது. ஆந்திர ராஜ்யம் ஸ்தாபிதமாகிற நாள் அது. புது ராஜ்யம் ஒன்று அமைகிறபோது அதற்குப் பிரத்தியேகமான சில பிரச்னைகளும் சிரமங்களும் ஏற்படுவது இயல்பு. அரசியல் கட்சி ரீதியான வேற்றுமைகளைக் கொஞ்ச காலத்துக்கு ஒதுக்கி வைத்துவிட்டு, எல்லாரும் ஒற்றுமையாய் உழைத்தால்தான் புதிய ராஜ்யத்தைச் சிறந்த அஸ்திவாரத்தின் மீது அமைக்க முடியும். நிலைத்த சர்க்கார் ஒன்று ஆரம்பத்தில் அமைவது அவசியம். ஆந்திர தேசபக்தர்கள் இந்தச் சமயம் ஒன்றுபட்டு உழைப்பார்கள் என்று நம்புவோம். ஆந்திர சகோதரர் என்ன நினைத்தாலும் சரி; தமிழ் நாட்டின் ஆசியும் அன்பும் ஆந்திரத்துக்கு உண்டு. இந்தத் தனி ராஜ்யம் அமைவது ஆந்திரருக்கு எவ்வளவு மகிழ்ச்சியோ அவ்வளவு தமிழருக்கும் மகிழ்ச்சி. ஏனென்றால், தமிழர் ராஜ்யமும் தனி ராஜ்யமாகிறதல்லவா?

*　　*　　*

இன்று கொரியாச் சச்சரவில் போர் நிறுத்தமும் சமாதான நம்பிக்கையும் ஏற்பட்டிருப்பதற்கு ஓரளவு பெருமை இந்தியாவையே சாரும். கொரியாவில் யுத்தக் கைதிகள் விஷயத்தைக் கவனித்துக்கொள்வதில் பிரதானமான பொறுப்பை ஏற்று, மிகவும் சிரமமான அந்தப் பணியைச் சிறப்புடன் ஆற்றி வருவது இந்தியாவே. இப்படியெல்லாம் இருந்தும், கொரியா சமாதான அரசியல் மகாநாட்டில் அது அங்கம் வகிக்க இடமில்லை! ஐக்கிய நாடுகளின் சபையைச் சேர்ந்த மிகப் பெரும்பாலான நாடுகள் விரும்பியும் அமெரிக்க நாடுகள் மட்டும் இந்தியாவுக்கு இடமளிக்க இணங்கவில்லை. இந்தியாவைப் போன்ற நடுநிலைமை நாடுகள் அந்தச் சமாதான மகாநாட்டில்

இடம் பெறுவது அவசியம் என்று சீனாவும் ஸோவியத் ருஷியாவும் பெரிதும் விரும்புகின்றன.

இதனால் மகாநாடு கூடுவதற்கே முட்டுக்கட்டை நேரிட்டுவிடுமோ என்று அஞ்சவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. ஸிங்மன் ரீ என்ற தென்கொரிய விபரீத மனிதருக்காக, அமெரிக்கா இந்த விஷயத்தில் இப்படிப் பிடிவாதம் காட்டுவது கொஞ்சமும் சரியல்ல.

* * *

ஐக்கிய நாடுகள் பொது அஸெம்பிளியின் தலைமைப் பீடத்தை இந்தத் தடவை ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் பெற்றது இந்தியாவுக்குத் தனிப் பெருமை அளிப்பதாகும். அது மாத்திரம் அல்ல; முதல் முதலாக உலக அரங்கு ஒன்றில் இவ்வளவு பெரிய அந்தஸ்தை ஒரு பெண்மணி பெறுவதும் இதுவே முதல் தடவையாகும். ஆகவே, பெண்கள்-முக்கியமாகப் பாரதப் பெண்கள் - பெருமைப்பட வேண்டும். ஜவாஹர்லால் நேருவின் சகோதரி ஸ்ரீமதி விஜயலட்சுமி. ஆனால், தனித்துச் சொந்த முறையில் தேச சுதந்தரப் போரில் பங்கெடுத்துக்கொண்டு பெருந் தியாகம் செய்தவள். எத்தனையோ வருஷங்களாய்த் தேச சேவை புரிந்து வருபவள். சர்வதேச மகாநாடுகளில் இந்திய சர்க்காரின் பிரதிநிதியாக மட்டும் அல்ல, தேசிய இந்தியாவின் பிரதிநிதியாகவும் பலமுறை வெளி நாடுகளுக்குச் சென்று திறம்படப் பணி புரிந்தவள். ஸ்ரீமதி விஜயலட்சுமி தலைமை வகிக்கும் ஐ. நா. அசெம்பிளியின் இந்தக் கூட்ட நிகழ்ச்சிகள் உலக அமைதிக்குச் சிறந்த அஸ்திவாரமாக அமைய வேண்டும் என்று வாழ்த்துகிறோம்.

* * *

தமிழ்ப் பெரியார் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் காலமானது தமிழ் நாட்டுக்கே பெரிய நஷ்டமாகும். 'தேச பக்தன்' பத்திரிகையின் ஆசிரியராயிருந்து அவர் பணியாற்றத் தொடங்கிய காலம் முதல் கடைசிவரையில் அவருடைய நாட்டுப் பற்றும் மக்கள் பற்றும் கலை இலக்கியப் பற்றும் அபரிமிதமாயிருந்தன. புலமை மணத்தோடு எளிமை சார்ந்த புதிய தமிழ் நடை ஒன்றை எழுதித் தமிழ் எழுத்தாளர்களுக்கு வழி காட்டிய முதல்வர் அவர்; தொழிலாளர் இயக்கத்துக்குத் தமிழ் நாட்டில் விதை ஊன்றிய ஒருவர்; தேசிய இயக்கத்துக்குப் பத்திரிகை, பேச்சு இவற்றின் மூலம் பெருந் தொண்டாற்றிய பழந் தலைவர். பலப் பல தமிழ் நூல்கள் எழுதியுள்ள ஆசிரியர். சென்ற ஒன்றிரண்டு வருஷங்களாக அநேகமாய்ப் படுத்த படுக்கையாக இருந்தாலும், அவருடைய நினைப்பும் பேச்சுமெல்லாம் அரசியல், கலை, இலக்கியம், சமயம் இவைபற்றியே சென்றன.

அவருக்கு முற்போக்கு வேண்டும். ஆனால் இலக்கியத்தையும், கலையையும், பண்பாட்டையும், சமயத்தையும் அவதூறு செய்யும் எதுவும் அவருக்குப் பிடிக்காது. அவருடைய குடும்பத்தினருக்கும் எண்ணிறந்த நண்பர்களுக்கும் நம்முடைய மனப்பூர்வமான அநுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

பழைய இந்திய மக்களோடு பல
விதத்தில் தொடர்பு கொண்டது -

கலை நிறைந்த கம்போடியா

தாரா பாய்

ஆசியாவில் உள்ள மக்களைத் தங்கள் கட்சியில் எப்படியாவது சேர்த்துவிட வேண்டும் என்ற எண்ணம் இரண்டு பெரிய வல்லரசுகளுக்கு இருக்கிறது. முதல் உலக யுத்தம் ஆசியாவை அதிகமாகப் பாதித்துவிடவில்லை. இரண்டாவது உலக யுத்தமோ உறங்கிக் கிடந்த ஆசிய மக்களைத் தட்டி எழுப்பிவிட்டது. குழப்பங்களுக்கிடையிலேயே ஆசியாவில் இன்று பல குடியரசு நாடுகள் தோன்றியிருக்கின்றன. ஆனால் உள்நாட்டில் ஒற்றுமைக் குறைவாலும் வெளிநாட்டு ஆதிக்க வன்மையாலும் இந்தோ - சீனா மட்டும் இன்னும் பூரண சுதந்தரம் பெறவில்லை.

இந்தோ - சீனாவில் 5 தனித் தனி ராஜ்யங்கள் அடங்கியிருக்கின்றன. கம்போடியா, அன்னாம், கொச்சின்-சீனா, லாவோஸ், டாங்கிஸ் ஆகிய இந்தச் சிறு பகுதிகள் பிரெஞ்சு ஆதிக்கத்துக்கு உட்பட்டவை. பெயரளவுக்குத்தான் இங்கே பிரெஞ்சு ஆதிக்கம் இருக்கிறது; உண்மையில் அவர்கள் ஆதிக்கத்துக்கும் தேசியக் கட்சிகளுக்கும் இடைவிடாமல் போராட்டம் நடந்துகொண்டே இருக்கிறது.

இந்தோ-சீனாவின் கிழக்குப் பாகத்தில் இருக்கும் கம்போடியாவில் இந்தியக் கலாசாரத்தின் சின்னங்களை அதிகமாகப் பார்க்கலாம். இன்றும் கம்போடியாவின் பழைய தலைநகரமாக இருந்த அங்கோர்வாட்டின் அருகில் இந்தியச் சிற்பங்களும் சிலைகளும் நிறைய இருக்கின்றன. கம்போடியா மக்களின் தினசரி சமூக வாழ்க்கையிலும் இந்தியக் கலாசாரமே பிரதிபலிக்கிறது.

கம்போடியாவின் வடக்கேயும்



காப்பிரைட்: பம்பாய்க் கிராணிக்கிள் (ஆங்கிலம்: 6-9-'53), பம்பாய்.

பழைய நாக அரசர்களின் சிற்பம்

மேற்கேயும் தாய்லந்து, தெற்கே கொச்சின்-சீனா, கிழக்கே லாவோஸ், அன்னம் இவை எல்லைகளாக அமைந்துள்ளன. இந்த நாட்டின் மொத்த விஸ்தீர்ணம் 67,550 சதுர மைல்; ஜனத்தொகை 35 லட்சம். எப்பொழுதும் சீதோஷ்ணம் மிதமாகவே இருக்கும். இடைவிடாத பருவக் காற்றுக்களால் மழை மிகுதி. இங்கே குளிர்காலம், கோடைக் காலம் ஆகிய இரண்டே காலந்தான்.

மழைக்காலத்தில் கம்போடியாவின் முக்கிய நதியான மீகாங் வெள்ளப் பெருக்கெடுத்தோடும். அதனால் இதன் இரு புறமும் உள்ள நிலங்களில் ஏராளமாக வண்டல் மண் படிந்து மிகுதியான வளப்பம் ஏற்படுகிறது. இங்கே நெல் விளைச்சல் அதிகம். இந்த விளை நிலங்களுக்கு அப்பால் சதுப்பு நிலங்களும் அதற்குப் பின்னால் மலையும் காடுகளும் அமைந்திருக்கின்றன. 120 மைல் நீளமும் 16மைல் அகலமும் உள்ள இந்த நாட்டின் மிகப் பெரிய ஏரி மழைக்காலத்தில் முற்றும் நிரம்பி வழிந்துவிடுகிறது. வாய்க்கால்களிலெல்லாம் நீர் பாய்ச்சி விவசாயத்துக்குப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். மார்ச் மாதத்தில் கோடையில் ஏரி வற்ற ஆரம்பிக்கும்பொழுது ஏராளமாக மீன் பிடிப்பார்கள். உப்பிட்ட மீன் கம்போடியாவிலிருந்து வெளிநாடுகளுக்கு அதிகமாக ஏற்றுமதியாகிறது.

கம்போடியாவின் தலைநகரான நாம்-பேனைத் தவிர, காமபீட், உடாங், சீம்ரீப், அங்கோர் ஆகிய நகரங்களும் பிரசித்தி பெற்றவை. நாம்-பேனுக்குத் தென் மேற்கே உள்ள உடாங்கும் ஒரு காலத்தில் கம்போடியாவின் தலைநகரமாக இருந்திருக்கிறது. பாடம்-பாங் ஜில்லா விவசாயத்தில் நல்ல பெயர் பெற்றிருக்கிறது; இங்கே கிராம்புத் தோட்டங்கள் அதிகம். அங்கோர்வாட் சிற்பங்களைப் பார்ப்பதற்குச் செல்பவர்கள் முதலில் சீம்ரீப்பில்தான் தங்குகிறார்கள்.

நாம்-பேன் நகரத்தின் நடுவில் நாம் என்ற பெயருள்ள ஒரு மலை இருக்கிறது. இதனால்தான் இந்த நகரத்துக்கும் இந்தப் பெயர் வந்தது. இந்த மலையின் மேலேதான் புகழ்பெற்ற கேமர் பகோடா என்ற கோயில் இருக்கிறது. தலைநகரத்தின் மொத்த ஜனத்தொகை 1,50,000. இங்கேதான் கம்

போடிய மன்னர் வசிக்கிறார். இவருக்கு அரசியல் ஆலோசனை சொல்லும் பிரெஞ்சு ரெவிடண்டும் இங்கேயே இருக்கிறார். மீகாங் நதியின் கிளைகளுக்கிடையே நாம் - பேன் அமைந்திருப்பதால் வர்த்தகம் இங்கே நன்றாக அபிவிருத்தி அடைந்திருக்கிறது. மன்னரின் மாளிகையும் வெள்ளிக் கோயிலுமே இந்த நகரின் புகழுக்கு முக்கிய காரணம்.

கம்போடியப் பாடகிகள்

கம்போடியாவின் பழம் பெருமையையே தனிக் கதையாகச் சொல்லலாம். 1,000 வருஷங்களுக்கு முன்பு, வங்கத்திலிருந்து சீனக் கடல்வரை பரந்திருந்த இந்து சாம்ராஜ்யத்தின் நடு மையமாகக் கம்போடியா விளங்கியது. அன்று கம்போடியா செல்வம் கொழிக்கும் நாடு. இயல்பிலேயே சங்கீதம், சிற்பம், கலைநுணுக்கம் இவற்றில் நாட்டம் மிகுந்த கம்போடிய மக்கள் நாடு முழுவதும் மகோன்னதமான கோயில்களையும் மாளிகைகளையும் நிர்மாணம் செய்திருக்கிறார்கள். இவற்றின் பெருமையையும் வேலைத்திறனையும் அழகையும் கண்டு வியக்காதவர்களே இல்லை.

9-ஆம் நூற்றாண்டில் கம்போடியா சுதந்தர நாடாக இருந்தது. ஜயவர்மன், இந்திரவர்மன் போன்ற மன்னர்களின் காலத்தில் நாடெங்கும் நல்ல பாதைகள் ஏற்பட்டன. ஆனால் அவர்கள் வாழ்ந்த பிரதேசம் இன்று காடு சூழ்ந்து இருள் மண்டிக் கிடக்கிறது. புகழ் பெற்ற இந்த மன்னர்கள் காலத்தில்தான் அங்கோர் தலை நகரமாக விளங்கியது. அப்பொழுது இங்கே 10 லட்சம் மக்கள் வாழ்ந்து வந்தார்கள். எதிர்பாராத விதமாக இந்தப் பரந்த சாம்ராஜ்யத்தின் மாகாணங்கள் ஒவ்வொன்றாகப் பிரிந்து போய்விட்டன. சீனாவில் ஆட்சி செலுத்திவந்த மங்கோலியர்கள், திபேத்தியர்கள் இவர்களுடைய படையெடுப்பாலேயே இந்தச் சாம்ராஜ்யம் வீழ்ச்சி அடைந்தது. இதனால் பல பழைய கட்டிடங்களின் சிற்பவேலைகள் பாதியிலே நின்றுவிட்டன.

இந்தியாவுக்குத் தாஜ்மகல் புகழைத் தருவதுபோல் கம்போடியாவுக்கு அங்கோர் வாட் பெருமை அளிக்கிறது. இங்கே உள்ள அற்புதச் சிற்பங்கள் எழாவது ஜயவர்மன் ஆட்சியில் உருவாயின. இங்கே இருக்கும் கோவிலின் நீளம் 270 கஜம், அகலம் 220 கஜம் என்றால் பாருங்கள்! ஒன்றன்மேல் ஒன்றாக

அமைந்த அடுக்குகளுடன் விளங்கும் இந்தக் கோவிலில் 5 கோபுரங்கள் இருக்கின்றன. ஒரு கோபுரத்தின் உயரம் மட்டும் சுமார் 125 அடி. கோபுரம் முழுவதும் சின்னச் சின்ன பாகங்கள் உள்படச் சிற்ப நுணுக்கத்தைக் காணலாம்.

கோவிலைச்சுற்றிலும் உடைந்த சிற்பங்களும் கட்டிடங்களும் பரவி இருக்கின்றன; சுற்றிலும் பல குளங்களையும் காணலாம். கோவிலின் மேல் அடுக்கு முழுவதும் உயிருள்ளவை போலப் பெரிய அளவில் யானைகளைச் செதுக்கியிருக்கிறார்கள். அங்கோர் வாட் நகரத்தின் 5 பிரதான வாசல்களிலும் தாமரைக் கொடியைப் பறித்துக் கொண்டிருக்கும் மாதிரியில் யானைகளின் சிற்பங்கள் அமைந்திருக்கின்றன. இங்குள்ள நாட்டியமாடும் மங்கையர், தேவதைகள் இவர்களின் சிற்பங்கள் மிகவும் கலை நுணுக்கம் பெற்றுக் கவர்ச்சியுடன் விளங்குகின்றன. இந்தச் சிற்பங்களின் தோற்றமும் அமைப்பும் பிரமிப்பூட்டுகின்றன. இவற்றின் உடை, பாவனைகளை கம்போடிய மக்களின் இன்றைய சடங்குகளிலும் நாட்டியங்களிலும் காணலாம். அங்கோர் வாட்டின் சிற்பப் பெருமையையும் கட்டிடச் சிறப்பையும் பல மேல்நாட்டு அறிஞர்களும் கலை நிபுணர்களும் பாராட்டியிருக்கிறார்கள். கம்போடியாவின் மீது இந்திய மன்னர்கள் பலதரம் படையெடுத்திருக்கிறார்கள். அந்தக் காலத்தில் கம்போடியாவுக்குக் ‘காம்போஜம்’ என்று பெயர். இந்தியாவிலிருந்து காம்போஜத்துக்குச் சென்ற பல புத்த பிட்சுக்கள் பல இடங்களிலும் சம்ஸ்கிருத வித்தியா பீடங்களை நிறுவியிருந்தார்கள். அத்தகைய வித்தியா பீடங்களில் ஒன்று அங்கோர்வாட்டிலும் இருந்தது. கம்போடியாவில் இன்றுள்ள மொழியின் அகரவரிசை முதலியன தென் இந்திய மொழிகளைச் சார்ந்தே அமைந்திருக்கின்றன.

மங்கோலிய இனத்தைச் சேர்ந்த அன்னாமியர்கள், தாய்லந்துக்காரர் இவர்களில் தாய்லந்துக்காரர்களின் இனத்தை ஒத்திருக்கிறார்கள், கம்போடிய மக்கள். தமக்கு வேண்டிய படகு, வண்டி இவற்றைத் தாமே செய்து கொள்கிறார்கள். இவர்களுடைய வேலைத் திறமை மிகவும் உயர்ந்தது. எல்லோருடனும் சகஜமாகவும் மரியாதையாகவும் நடந்து கொள்ளும் இயல்புள்ளவர்கள். கலாரசனையும் இலக்கிய ருசியும் மிக்கவர்கள். இவர்களுக்குச் சங்கீதம் என்றால் உயிர். பலவிதமான தொளைக்கருவிகளையும் தோல் வாத்தியங்களையும் இவர்கள் பயின்று வருகிறார்கள். முறையான சங்கீதம் இவர்களிடம் இல்லை; காதாரக் சேட்டுப் பழக்க மிகுதியாலேயே இவர்களுடைய சங்கீதம் பரவி வருகிறது. எல்லோரும் சேர்ந்து தங்களுக்குப் பிடித்த பாட்டுக்களை மணிக்கணக்காகப் பாடுவார்கள்.

கம்போடிய மக்களின் சமூகத்தில் குருமார்களுக்கு நல்ல மதிப்பு உண்டு. இவர்கள் பெருந்தன்மையும் சகிப்புத்தன்மையும் கண்ணியமும் உள்ளவர்கள். நாட்டின் வாலிபர்களுக்குக் கல்வியறிவூட்டுவது இவர்கள் தொழில். அதனால் கிடைக்கும் தொகையே இவர்களுடைய ஊதியம்.

கம்போடிய மக்களிடையே பல வித விழாக்கள் நிகழ்கின்றன. இந்தச் சமயங்களில் குதிரைப் பந்தயம், படகுப் பந்தயம், மற்போர், குத்துச் சண்டை போன்ற விளையாட்டுக்களில் மக்கள் ஈடுபடுவார்கள்.

கம்போடியப் பெண்களுக்குச் சமூகத்தில் நல்ல மதிப்பு உண்டு; சுதந்தரமும் உண்டு. பண்டிகை பருவங்களில் பெண்கள் விசேஷ ஆடை ஆபரணங்கள் அணிந்து கொள்கிறார்கள். இந்தியப் பெண்களைப் போலவே சாப்பிட்டதும் வெற்றிலை போட்டுக்கொள்கிறார்கள். இளம் பெண்கள் நாட்டிய நாடகங்கள் கற்றுக்கொள்கிறார்கள். இரு தார மணத்துக்குச் சட்டத்தில் இடம் இருந்தாலும் பெரும்பாலும் எல்லோரும் ஒரு மனைவியையே மணம் செய்து கொள்கிறார்கள். ஓர் ஆண்பிள்ளையோடு எல்லோரும் அறிய வாழ்க்கை நடத்துபவள் அவனுக்குச் சட்டப்படி மனைவியாகி விடுகிறாள். குழந்தைகளைத் தத்து எடுத்துக்கொள்வதும் விவாகரத்தும் இந்த நாட்டில் உண்டு. இங்கே உள்ள அன்னமியர்கள், பிரெஞ்சுக்காரர்கள், சீனக்காரர்கள் எல்லோரும் கம்போடியப் பெண்களை மணம் செய்துகொண்டிருக்கிறார்கள்.

இங்கே மரணச் சடங்குகள் ஆடம்பரமாக நடக்கும். அதவும் மன்னராக இருந்தால் அவருடைய உடலை இரண்டு வருஷங்கள் வரை பாதரசம், தேன் இவற்றைக் கொண்டு பத்திரப்படுத்தி வைக்கிறார்கள். அதற்குப் பிறகே உடலை எரிக்கிறார்கள். அதுவரை குருமார் இரவும் பகலும் மந்திரங்களை ஓதிக்கொண்டே இருப்பார்கள். சாதாரண மனிதர்கள் இறந்து விட்டால் அவர்களுடைய வாயில் சிறிய நாணயம் ஒன்றை வைப்பது வழக்கம். அது இறந்தவரின் ஆவி இடையூறு எதுவும் இல்லாமல் மேல் உலகத்துக்குப் போக உதவும் என்பது அவர்களுடைய நம்பிக்கை.

கம்போடியா மக்கள் - சீனக்காரர்களைப்போலவே-ஆனால் மிதமாக அபினி உண்பார்கள். மதச் சடங்குகளிலும் மிதமாகச் சாராயம் பருகுவது உண்டு.

கம்போடியாவில் மட்டும் 1,000 இந்தியர்கள் வசிக்கிறார்கள். இவர்களுக்கு ஜவுளி வியாபாரம் முக்கியத் தொழில். இவர்களில் பெரும்பான்மையோர் சீக்கியர்களும் சிந்திக்காரர்களும். வியாபாரிகளாக இருந்தாலும் இவர்களுக்கும் கம்போடிய மக்களுக்கும் சௌஜன்யமான உறவு உண்டு. நிரந்தரமாக இங்கே குடியேறிவிட்ட இந்த இந்தியர்கள் இரண்டு நாடுகளுக்கும் இடையே நல்லெண்ணத்தையும் நட்பையும் வளர்த்து வருகிறார்கள்.

அணுக்குண்டிலிருந்து தப்ப -

டாக்டர் ராபர்ட் ஒப்பன்ஹீமர் முதல் அணுக்குண்டு தயாரிக்கும்போது அதை மேற்பார்வை இட்ட விஞ்ஞானி. "அணுக்குண்டிலிருந்து தப்ப ஏதாவது பாதுகாப்பு உண்டா?" என்று அவரை அப்போது சிலர் விசாரித்தார்கள்.

"ஏன் இல்லாமல்?"

"அது என்ன?"

டாக்டர் மெதுவாக, "அமைதி" என்று பதிலளித்தார்.

ரமணர்

வாழ்வும் வாக்கும்



ஆத்மஞானத்துக்கு முன் மற்ற ஞானமெல்லாம் அற்பம் என்பதைத் தம் வாழ்க்கையால் நிரூபித்துக் காட்டியவர் மகரிஷி ரமணர். இவர் வாக்கு ஸ்வாநுபவம் பொதிந்தது.

சிறுவனது அன்பு (வாழ்வு): ஒரு நாள் காலை ஒரு சிறு பையன், பத்து வயசிருக்கும், ஆசிரமத்துக்கு வந்திருந்தான். அவன் தெலுங்கிலே பேசினான். மெதுவாக மகரிஷியின் அருகே சென்று, வேகமாக அவரோடு பேசத் தொடங்கினான். பகவான் அவன் கூறுவதைப் புன்முறுவலோடு கேட்டார்.

பகவான் தம்முடைய முழங்காலிலும் கணுக்காலிலும் எண்ணெய் தடவிக்கொள்வது வழக்கம். கீல் வாயு உபத்திரவத்தால் அந்த இடங்களில் வலி இருந்ததுதான் காரணம். அதைப் பார்த்தான் அந்தப் பையன்.

"நான் எண்ணெய் தடவிவிடுகிறேனே!" என்றான்.

"ஏன்?"

"நீங்கள் தடவினால் அழுத்தமாகத் தடவ முடியாதே. நீங்கள் வயசானவர்களல்லவா? நான் அழுத்தித் தடவுவேனே!"

"அப்படியா! என் காலுக்கு நான் தடவிக்கொள்கிறேன். எனக்காக நீ தடவுவதானால் மற்றொரு காரியமும் எனக்காகச் செய்வாயா?"

"ஆகா, செய்கிறேன்."

"எனக்காக நீ சாப்பிடுவாயா? நீ என் காலுக்கு எண்ணெய் தடவினால் எனக்காகச் சாப்பிடவும் வேண்டும்."

பையனுக்கு ஒன்றும் பதில் சொல்லத் தெரியவில்லை. அவன் போய்விட்டான்.

கையிற் புண் (வாழ்வு): பகவானுடைய இடக் கையில் முழங்கைக்கு மேலே ஒரு புண் எழுந்தது. டாக்டர் சஸ்திர சிகிச்சை செய்தார். ஆயினும் புண் முற்றும் குணமாகவில்லை. மற்றவர்களாக இருந்தால் அந்தப் புண்ணினால் உண்டாகும் வலி தாங்காமல் முணுமுணுப்பார்கள். ஆனால் பகவானோ நாம் உட்காரும் ஆசனத்தில் ஒரு பக்கம் உடைந்திருந்தால் எப்படி அதுபற்றிச் சிறிதும் கவலைப்படாமல் இருப்போமோ, அப்படி இருந்தார்; அவருடைய முக மலர்ச்சி மாறவில்லை. பக்தர்களுக்குத் தரிசனம் கொடுப்பதை நிறுத்தவில்லை. சிறிது நேரம் உலவுவதையும் மாற்றவில்லை.

ஒரு நாள் பேராசிரியர் ஒருவர் பகவானை அணுகினார். "மனோபலத்தால் வியாதிகளைக் குணமாக்கிக்கொள்வது உண்டென்று சொல்கிறார்கள். அருளாளர்கள் நினைத்தால் தாமே தம் நோயை நீக்கிக்கொள்ளலாமாம்" என்று சொன்னார். அவருக்கு, பகவான்

தம்முடைய மனவலிமையால் தம் நோயைத் தாமே குணப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. அதை வெளிப்படையாகச் சொல்ல அவருக்குப் பயம். ஆகவே, இப்படிக் குறிப்பாகப் பேசினர்.

அவர் கருத்தை மா முனிவர் அறிந்துகொள்ள முடியாதா? பிறகு மற்ற அன்பர்கள் இருக்கும் போது, "இவர் இந்த வியாதியை என் மனேபலத்தால் போக்கிக் கொள்ள வேண்டுமென்று சொன்ஞர். இந்தப் புண்ணே நாஞக வரச் சொல்லியிருந்தால் இப்போது போ என்று சொல்லி அனுப்பலாம். அது தாஞகவே வந்திருக்கிறது. அதைப்பற்றி எனக்கு என்ன கவலே?" என்ருர்.

ஆத்மாநுபூதி (வாக்கு): "ஆத்மாநுபூதி அடைவது எப்படி?" என்று ஒருவர் பகவானேக் கேட்டார். பகவான் சொன்னது வருமாறு: "அநுபூதி என்பது புதிதாக அடைகிறது அன்று. அது எப்போதுமே ஆத்மாவுடன் இருக்கிறது. மாயையினல் நான் இன்னும் அநுபூதியை அடையவில்லே என்ற மயக்கம் இருக்கிறது. அந்த மயக்கத்தைத் தொலேப்பதுதான் இப்போது அவசியமான காரியம். அது போய்விட்டால் அநுபூதி உண்டாகும். சும்மா இருத்தல் அல்லது சாந்தியே அநுபூதி. ஆத்மா இல்லாத வேளே இல்லே. சந்தேகமோ, அநுபூதி அடையவில்லே என்ற உணர்ச்சியோ இருக்கிறவரையில் அவற்றை ஒழிக்க முயல வேண்டும். இவை ஆத்ம அநாத்மச் சேர்க்கையால் ஏற்படுவன. அநாத்மா மறைந்தால் ஆத்மாவே நிற்கும். முன்பே இருக்கும் இடத்தை வேண்டாத பொருள்கள் அடைத்துக்கொண்டிருக்கின்றன. அந்தப் பொருள்களே எடுத்துவிட்டால் இடம் இருப்பது தெரியும். அநுபூதி வெளிப்படாதபடி மறைத்து நிற்கும் பிரமையை ஒழித்துவிட்டால் ஆத்மா அநுபூதிமாஞக நிலவும்.

கண்டு பிடித்தார்

ஜெக் நாட்டில் ஒருவர் தம் மகனுக்குக் கால் பந்து ஒன்று வாங்கிக் கொடுத்தார். பையன் அதை எடுத்துச் சென்று சில நண்பர்களோடு விளேயாடிஞன். வீட்டுக்கு அவன் திரும்பியபோது, பந்து ஒரு கோழி முட்டைபோல் நெளிந்திருப்பதைப் பார்த்தார் அப்பா. கோபம் கொண்டார். அதை வாங்கிய கடைக்கு ஓடிஞர். பெட்டியடியில் இருந்தவர் இந்தப் பந்தின் நெளிவைப் பார்த்துப் பெருமூச்சு விட்டார். குமாஸ்தா வந்து பார்த்து அப்படியே பிரமித்தார். கடைசியில் மானேஜர் வந்தார். "ஊஹூம்! இதில் என்னவோ சூது நடந்திருக்கிறது. பந்தை யாரோ உதைத்திருக்கிருர்கள். இல்லாவிட்டால் அது இப்படி நெளியாது" என்ருர்.

—'தி ஸண்டே டைம்ஸ்'

என்னைக் கேளுங்கள்

காப்டன் என். சேஷாத்திரிநாதன்

வைத்தியம், சுகாதாரம், ஆரோக்கியம் இவைபற்றி 'மஞ்சரி' வாசகர்கள் கேட்கும் கேள்விகளுக்கு இயன்ற மட்டில் பதிலளிக்க இந்த டாக்டர் இசைந்திருக்கிறார். இவர் வைத்தியத் துறையில் கல்வியும் அநுபவமும் நிறைந்தவர்; ரத்தப் பரிசோதனை நிபுணர்; கிண்டி இன்ஸ்டிட்யூட் அதிகாரியாக இருந்தவர். நோயுள்ளவரின் தனித்தனி நிலையை நேரில் கவனித்தே டாக்டர் வைத்தியம் செய்ய வேண்டும். ஆகவே, இதில் வரும் பதில்களைப் பொதுவாகக் கொள்ளலாமே தவிர, வைத்தியமே இவற்றைக் கொண்டு செய்துகொள்ளலாம் என்று நண்பர்கள் நினைக்கக் கூடாது.

ஜி. ஜயசந்திரன், சென்னை.

கேள்வி 1: பாக்கு அதிகம் தின்றால் சோகை வருமா?

விடை: பசியைக் கெடுக்கக் கூடியது பாக்கு; இரைப்பையில் ரத்த ஓட்டத்தைக் குறைத்துவிடும். இதனால் ஜீரணத்துக்குக் கேடு விளையும். சோகைக்கும் காரணமாகலாம். வெற்றிலை போட்டுக் கொள்ளும்பொழுது மிதமாய்ப் பாக்கு உபயோகித்தால் பாதகமில்லை.

கே. 2: எண்ணெய் தேய்த்துக் கொள்வது அவசியமா?

வி: எண்ணெய் தேய்த்துக் கொள்ளும் பழக்கம் நம் நாட்டிலே தான் உண்டு. இந்தப் பழக்கமில்லாமல் அயல் நாட்டு மக்கள் ஆரோக்கியமாகவே இருக்கிறார்கள். உஷ்ணமான நம் நாட்டில் இந்தப் பழக்கம் ஆரோக்கியத்தைக் காக்க உபயோகமாயிருக்கிறதென்று சொல்லுகிறார்கள். ஆனால், 'எண்ணெய் தேய்த்துக்கொண்டேன்; உடனே ஜுரம் கண்டது' என்றும் சொல்வதுண்டு.

கே. 3: காபியை விடுவதற்கு எதைக் குடித்துப் பழக்கப்படுத்தலாம்?

வி: காபியை விடவேண்டுமென்று நண்பர் ஏன் விரும்புகிறார் என்று தெரியவில்லை. அதற்குப் பதிலாக வேறு ஒன்றைப் பழக்கிக் கொள்ள வேண்டியது அவசியந்தானா? இந்தப் பிரச்னைகளுக்கு விடை தெரிந்தால் நண்பர் கேட்ட கேள்விக்கு நல்ல விடை கொடுக்கலாம்.

முதலில் குளிர்ந்த ஜலம் குடிப்பது நல்ல பழக்கம். இரண்டாவதாக, காபியில் 'டிகாக்ஷனை'க் குறைத்துக்கொண்டே போய்க் கடைசியாக வெறும் பாலையே குடித்துப் பழக்கிக் கொள்ளலாம்.

கே. 4: தினசரி வாழைப்பழம் நான்கு சாப்பிட்டு வருகிறேன். சிலர் இது கெடுதல் என்கிறார்கள். உண்மைதானா?

வி: வாழைப்பழம் என்ன ரகம், ஒவ்வொரு வாழைப்பழமும் எவ்வளவு பெரிது, நண்பருடைய ஜீரணசக்தி எப்படி இருக்கிறது? இத்தனை கேள்விகளுக்கும் அவர் விடை கொடுக்கவேண்டும். பிறகு அவர் கேட்ட கேள்விக்கு விடை கொடுக்கலாம்.

கே. 5: குறட்டை விடுவது கெடுதலா?

வி: தொண்டையிலும் மூக்கிலும் ஏதோ கெடுதல் இருப்பதன் அறிகுறியாகக் குறட்டை ஏற்படலாம். நல்ல உறக்கத்துக்கு அறிகுறியாகச் சிலருக்குக் குறட்டை உண்டாகலாம்.

கே. 6: எனக்கு வயது 18; உயரம் 5 அடி 7 அங்குலம்; நிறை 89 பவுண்டு. நான் பலம் பெற என்ன செய்ய வேண்டும்?

வி: இந்த வயது வாலிபனுக்குப் பலம் வேண்டுமானால் நல்ல தேகப் பயிற்சி செய்யலாம்; கால் பந்து, டென்னிஸ், ஹாக்கி ஆகிய விளையாட்டுக்களில் கலந்துகொண்டு பலம் பெறலாம். அப்பொழுது நல்ல பசி உண்டாகும். உணவோடு பாலும் தயிரும் சேர்த்துக்கொள்வது நண்பரின் விருப்பத்தை நிறைவேற்றும்.

எஸ். தியாகராஜன், கோவை.

கே. 1: ஏப்பம் வருவதற்குக் காரணம் என்ன?

வி: நல்ல சாப்பாட்டுக்கு அறிகுறி ஏப்பம் என்பார்கள் சிலர். சாப்பிடும்போது காற்றும் உட்புகுந்து கொள்ளும். காற்று உணவுக்கு இடங் கொடுப்பதற்காக வெளியே ஏப்பமாக வந்து விடும்.

கே. 2: ஆஸ்துமா என்ற நோய்க்குக் காரணம் என்ன? அதைப் போக்க வழி என்ன?

வி: பெரிய கேள்வி. கட்டுரை தான் எழுதியாக வேண்டும். இந்த நோயைப்பற்றிப் புத்தகங்கள் கூட எழுதியிருக்கிறார்கள். பத்திரிகைகளில் பரிகாரங்களும் வெளியாகின்றன. நோயை முற்றும் குணமாக்க உபாயம் தேடுவது கடுமையான முயற்சியாகும். இதைக் குணப்படுத்தக் கூடிய மருந்துகளைப் பற்றி ஆஸ்துமா நோயாளிகளுக்கு வைத்தியரைக்காட்டிலும் அதிகமாய்த் தெரியும்.

மூர்த்தி, ஜோலார்ப்பேட்டை.

கே. 1: சாப்பிடும்பொழுது விக்கல் எடுக்கக் காரணம் என்ன? அதைத் தடுக்க உபாயம் என்ன?

வி: காரசாரமாய்ச் சாப்பிட்டால் விக்கல் ஏற்படும். அதைத் தவிர்க்கக் காரத்தையும் சாரத்தையும் சற்றுக் குறைத்துக் கொள்ளலாம்.

கே. 2: நாங்கள் ஏஜென்ஸியில் வசிப்பதால் மலேரியா வராமல் தடுக்கச் செய்ய வேண்டிய உபாயங்களை விவரிக்க வேண்டும்.

வி: ஏஜென்ஸியில் வசிப்பவர்களுக்கு மலேரியா வராமல் தடுப்பது கஷ்டமான காரியம். கொசு வலை கட்டிக்கொண்டு தூங்கவேண்டும். வீட்டு ஜன்னல்களிலும் கதவுகளிலும் இரும்புக் கம்பியால் செய்த சன்னமான வலை அமைத்துக் கொசு உள்ளே வராமல் தடுத்துவிடலாம். கொயினாவையும் கொய்னா போன்ற செயற்கை ரசாயன மருந்துகளையும் வாரத்தில் இரண்டு தடவையாவது உட்கொண்டு மலேரியா தோன்றாமல் தடுத்துக்கொள்ளலாம். ஏஜென்ஸி சுகாதார அதிகாரிகள் இந்த விஷயமாக உதவத் தயாராயிருக்கிறார்கள். அவர்களையும் கேட்டுக் கொள்ளலாம்.

கே. 3: மலேரியா ஜுரம் வந்த சிலருக்கு வயிற்றில் மலேரியா கட்டி உண்டாகக் காரணம் என்ன? அதற்குச் சிகிச்சை என்ன?

வி: வயிற்றில் மண்ணீரல் என்ற உறுப்பு அதனுல் இயன்ற மட்டும் மலேரியாக் கிருமிகளைக் கொல்ல முயலுகிறது. மலேரியாக் கட்டி வந்தவர்களுக்கு ஜுரம் அதிகமாக வராது. இதற்கும் கொய்னு போன்ற மருந்துகள் தான் பரிகாரமாகும்.

எஸ். துநசாமி, திருச்சி:

கேள்விக்கு விடை: நன்ருகக் கேட்டுக்கொண்டிருந்த காதுகளில் ரீங்கார சத்தம் கேட்டால் அது கேட்கும் ஆற்றல் குறைவதற்கு அறிகுறியாகும். இந்த நோய்க்குக் காது வைத்திய நிபுணரைக் கேட்க வேண்டும்.

லதா, சென்னை:

கே. 1: உடம்பு இயற்கையான தாழம்பூ நிறம்; வழவழப்பாகவும் மிருதுவாகவும் இருந்து இப்பொழுது சொர சொரப்பாக ஆனதற்குக் காரணம் என்ன?

வி: கேள்வி கேட்டிருப்பவர் ஒரு ஸ்திரீ; பதினெட்டு வயது. இவருடைய சருமம் இப்படி மாறுவதற்கு முக்கியமான காரணம் இருக்க வேண்டும். இவரைப் பற்றிய வேறு பல விஷயங்களும் தெரியவேண்டும். குடும்பத்து டாக்டரை நேரில் சந்தித்து விவரங்களைச் சொல்லிப் பரிகாரம் தேடிக்கொள்வதே நலம். கூடிய சீக்கிரமே கேட்டுக்கொள்ள வேண்டும்.

கே. 2: காலில் வெடிப்புக்குப் பரிகாரம் என்ன? 'கிக்சொடெர்ம்' உபயோகப்படுமா?

வி: காலில் வெடிப்பு உடல் ஆரோக்கியக் குறைவினுல் உண்டாகும். இதற்கும் நேரில் விசாரணை செய்துதான் பரிகாரம் சொல்ல முடியும்.

கே. 3: தலைமயிர் கொட்டுவதைத் தடுப்பதற்கு என்ன வழி?

வி: ஆகஸ்ட் மாத 'மஞ்சரி' இதழில் பார்க்கலாம்.

கே. 4: சோப்புத் தேய்த்துக் கொள்வது நன்மையா? முகத்துக்குப் பவுடர் போட்டுக்கொள்வது நல்லதா?

வி: செப்டம்பர் மாத 'மஞ்சரி' இதழில் விடை இருக்கிறது.

ஐயாசாமி, பம்பாய்.

கே. 1: ஒருவருக்குச் சாதாரண அளவில் சிறுநீர்க் கழிவு ஒரு நாளில் எவ்வளவு ஏற்பட வேண்டும்? அதிகமாக வருகிறதென்றுல் கெடுதல் உண்டா?

வி: சுமார் ஐம்பது அவுன்சு; அதாவது, இரண்டு ஹார்லிக்ஸ் பாட்டில் நிரம்ப இருக்கலாம். சற்றேறக்குறைய இருந்தாலும் பாதகமில்லை. குளிர் காலத்தில் அதிகமாகவும், கோடைக் காலத்தில் குறைவாயும் சிறுநீர் கழியும். வழக்கத்துக்கு அதிகம் என்று சந்தேகம் இருந்தால் டாக்டரிடம் சென்று பரிசீலனை செய்துகொள்வது நலமாகும்.

கே. 2: "காணுக்கடி" என்று சொல்லுகிறுர்களே, அது ஏற்பட்டால் உடம்பு முழுவதும் தடிப்புத் தோன்றிச் சிறிது நேரத்தில் மறைந்து விடுகிறது. அது உடம்பில் ஊறி வருஷக்கணக்கில் உபாதையை உண்டுபண்ணக் காரணம் என்ன? அது 'அலர்ஜி' என்றும், அதற்கு மருந்து இல்லை என்பதும் சரிதானு?

வி: நாம் உண்ணும் பதார்த்தம் யாவும் ஜீரணக் கருவிகளால் நன்ருகக் கரைக்கப் பெற்று

முதலிலிருந்த ரசாயன நிலையை விட்டு மாறிவிடுகின்றன. ஒரு கட்டிடத்தை இடித்தால் செங்கல், பலகை, உத்திரம் இவையெல்லாம் பகுதிகளாகப் பிரிக்கப்படுவதுபோல் உணவுகளும் ஜீரணக் கருவிகளால் வகுக்கப்படுகின்றன. இவை ரத்தத்தில் செல்லும் போது உடலின் கட்டுமானங்களுக்குப் பயன்படுகின்றன. இப்படிச் சிறு அம்சங்களாக வகுக்கப்படாத நிலையிலே உட்புகுந்து விட்டால் உடலுக்குக் கேடு விளையும். சில உணவுப் பொருள்கள் சிலருடைய உடலில் படும்போதே நுண்ணிய அளவில் உட்புகுந்து கேடு விளைவிக்கக்கூடும். இத்தகைய கேட்டின் அறிகுறியே 'காணுக்கடி' யாகும். இதற்குப் பெயர் 'அலர்ஜி.' இதற்கு மருத்துவ முறைகள் வகுத்திருக்கிறார்கள். தொந்தரவு செய்யும் உணவுப் பொருளைத் தேடி அறிந்து அதை நீக்கித் தக்க 'இஞ்செக்ஷன்' முறையைக் கையாளலாம். ஆனால் இது பல தானியங்களை ஒரே மூட்டையில் கலவை செய்து பிரிக்க முயலுவதைவிடக் கஷ்டமான காரியமாகும்.

எஸ். எம். ஸ்வாமி, கோல்லம்.

கே. 1: சிறிது நேரம் ஒரே இடத்தில் உட்கார்ந்துவிட்டு எழுந்திருக்கும்போது சில வேளை தலை சுற்றுவதேன்?

வி: சோகை இதற்கு முக்கிய காரணம். வேறு காரணங்களும் உண்டு. உங்கள் வைத்தியரைக் கேளுங்கள்.

கே. 2: வெயிலில் அதிக நேரம் நடந்துவிட்டு ஒரு மறைவான இடத்தில் பிரவேசிக்கும்போது சிறிது நேரம் வரை எங்கும் இருட்டாகத் தெரிவது என்?

வி: களைப்பே காரணம்.

கே. 3: எந்த வகையான பூச்சுக்கும் பலனளிக்காமல் எப்பொழுதும் முகத்தில் எண்ணெய் வழிந்தாற்போல் காண்பதற்குக் காரணமும் பரிகாரமும் என்ன?

வி: முகத்தில் எண்ணெய் கசியும் சிறு கிரந்திகள் சருமத்தடியிலே இருக்கின்றன. சிலருக்கு இவை அதிகமாக இருப்பதே எண்ணெய் வடியக் காரணம்.

சாந்தா, கே., சென்னை:

கே. 1: இந்தக் காலத்தில் கைக் குழந்தைகளுக்கு விளக்கெண்ணெய் கொடுப்பது அநாவசியம் என்கிறார்களே, டாக்டர்கள்; என்?

வி: டாக்டர்கள் மட்டும் சொல்லவில்லை. ஆயுர்வேத வைத்தியத்திலும் சொல்லியிருக்கிறதாம். எண்ணெய் கொடுக்கும் பழக்கம் நடுவில் வந்தது. ஆகாரம் சரியான அளவிலும் குணம் பொருந்தியும் இருந்தால் குழந்தைக்கு மலங்கழிப்பதில் கஷ்டம் ஏற்படாது. அப்பொழுது விளக்கெண்ணெய் கொடுக்க வேண்டிய அவசியமும் இராது.

கே. 2: திருஷ்டி என்பது வெறும் பிரமையா? அப்படியானால் கண் பட்டுவிட்டால் அதன்படி நடந்தே விடுகிறதே? என்?

வி: குழந்தையை நோக்கி, 'நன்றாய் விளையாடுகிறதே', 'கொழுகொழுவென்று இருக்கிறதே' என்று பார்ப்பவர் ஒருவர் சொல்லும்போது அவர்கள் உள்ளத்தில் அசூயை உண்டாவது நிச்சயம். அப்பொழுது தாயின் உள்ளமும் சற்றுக் கலையும்; என்னவாவது எதிர்பாராமல் நேர்ந்தால் திருஷ்டியால் நேர்ந்ததுதான் என்று தோன்றும். திருஷ்டி பரிகாரம் செய்தால் தாயின் கவலை தீரும்.

பல கோடி ரூபாய் வருமானம் தருகிறது-

இலங்கையில் தென்னை

எஃப். ஸி. குக்

"இலங்கையில் மிகவும் முக்கியமான கைத்தொழில்கள் எவை?" என்று யாராவது உங்களைக் கேட்டால், "தேயிலையும் ரப்பரும்" என்று நிச்சயமாகப் பதிலளிப்பீர்கள். சற்று யோசித்து விட்டு, "தேங்காயும்" என்று நீங்கள் சேர்த்துக்கொள்ளக்கூடும்.

தென்னை உற்பத்தியாகும் நிலப்பரப்பு வேறு எந்தப் பயிர் உற்பத்தியாகும் நிலப்பரப்பையும் விட அதிக விஸ்தீர்ணமானது. மற்ற எல்லா மரங்களையும் விடத் தென்னை மிகவும் உபயோகமுள்ள மரம்.

இந்தோனீஷியாதான் தென்னை மரத்தின் பழைய இருப்பிடம் எனப் பொதுவாக நம்பப்படுகிறது. நம் நாட்டுக்கு அது எப்படி வந்தது, எப்போது கொண்டு வரப்பட்டதென்பது தெரியவில்லை. ஆனால் கி. மு. 300-ஆம் ஆண்டில் இது இலங்கையில் வளர்ந்து வந்துள்ளதென்பது பூர்வ சாசனங்களிலிருந்து தெரியவருகிறது.

முதல் முதலாக முளைத் தேங்காய்கள் கடல் அலைகளால் இங்கே கொண்டுவரப்பட்டுத் தாமாகவே வேரூன்றி வளர்ந்திருத்தல் கூடும். ஆனால் முன் காலத்தில் வர்த்தகத்தின் பொருட்டுத் தேசந்தோறும் பிரயாணம் செய்தவர்கள் தாங்கள் அறிந்திருக்காத கடல்களில் செய்த நீண்ட பிரயாணங்களின்போது உணவின் பொருட்டும், எரிப்பதற்கும், அருந்துவதற்கும் தேங்காய்களைக் கொண்டு சென்றார்களென்று நம்புவது மிகவும் பொருத்தமாகக் காணப்படுகிறது. இவர்கள் இலங்கைக் கரையோரங்களை வந்தடைந்ததும் பிரயாணத்தின் போது முளை கிளம்பிய எல்லாத் தேங்காய்களையும் இந்த நாட்டில் நட்டிருக்கலாம்.

சிங்கள மன்னர் காலத்தில், தென்னை வீட்டு உபயோகத்துக்கு ஓர் உணவுப் பயிராக மட்டுமே தோட்டங்களில் வளர்க்கப்பட்டது. சமீப காலத்தில்தான் இது தோட்டக் கைத்தொழிலாக அபிவிருத்தி அடைந்துள்ளது. 'மாகநீன்' (சவுக்காரம் உற்பத்திசெய்வதற்கு உபயோகிக்கப்படும் காரச் சோடா) முதலியனவும் நீராவி யந்திரமும் கண்டு பிடிக்கப்பட்டதனாலேயே இலங்கையில் தென்னை ஒரு வர்த்தகப் பயிராயிற்று. இந்தப் பயிரை முதல் முதலாக 1841-ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய ஜில்லாக்களில் முறையாகச் செய்யலானார்கள். அது முதல் 1850-ஆம் ஆண்டுவரை ஐரோப்பியர்கள் தென்னை பயிரிடுவதில் ஈடுபடலானார்கள். இதன்பின் இலங்கையர்களும் இந்தப் பயிரின் வர்த்தக

மூலம்: ஸ்ரீலங்கா (தமிழ்: ஜூன் 1953), கொழும்பு, இலங்கை.

முக்கியத்துவத்தை உணர்ந்தார்கள். எனவே, 1860-ஆம் ஆண்டு முதல் மேற்கு மாகாணங்களிலுள்ள பல்லாயிரக்கணக்கான ஏக்கர்க் காடுகள் தென்னந்தோட்டங்களாக மாற்றப்பட்டன. முதலில் கடற்கரையோரமாக மட்டுமே தென்னை பயிரிட்டார்கள். ஆனால் பின்பு கடற்கரையிலிருந்து 100 மைல் தூரமுள்ள உள்நாட்டிலும், கடல்மட்டத்திலிருந்து 2,000 அடி உயரத்திலுங்கூடத் தென்னை மரங்களை உண்டுபண்ண முடியுமென்று கண்டுபிடித்தார்கள். தென்னைப் பயிரின் மத்திய ஸ்தானம் இன்று ஒரு முக்கோணத்துக்குள் அடங்கியுள்ளது. இதன் மூலைகள் கொழும்பு, சிலாபம், கண்டி ஆகிய இடங்களாகும். கொழும்பிலிருந்து மிகவும் தெற்கேயுள்ள மாத்தறைவரை கடற்கரையோரமாக 5 முதல் 10 மைல்களுக்குத் தென்னை மரங்கள் அதிகமாக வளர்கின்றன. குறிப்பாக மன்னார்க் குடா நாட்டிலும் மட்டக்களப்பு, திரிகோண மலை, புத்தளம், யாழ்ப்பாணம் முதலிய இடங்களிலும் அங்குமிங்குமாகப் பரந்து கிடக்கும் சிறிய காணிகளிலும் தென்னை பயிரிடுகிறார்கள்.

ஒரு தென்னை மரம் சுமார் 60 ஆண்டுகளுக்கு லாபம் அளிக்கக் கூடியதாக இருக்கிறது. தொடர்ந்தாற்போல் கவனியாது கைவிட்டால் அது 30 வருஷங்களில் உபயோகமற்றுப் போய்விடுகிறது. தற்போது தென்னைப் பயிர் செய்யப்பட்டுள்ள நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பகுதிக்கு மேல் 60 வருஷகால எல்லையைக் கடந்திருக்கக் கூடுமென்றும், எனவே அந்தப் பரப்பில் தென்னையின் மதிப்புக் குறைந்து வருகிறதென்றும் சொல்லலாம்.

இப்படியாக வளங் குன்றிவரும் பகுதிகளைப் புனருத்தாரணம்



தென்னை தரும் பொருள்கள்:
(1) தேங்காய் மட்டை; (2) கொட்டாங்கச்சி; (3) தேங்காய் மூடி; (4) கொப்பரை; (5, 7) பூச்சுமட்டை; (6) மட்டையால் செய்த கால் மிதி; (8) கயிறு; (9) தேங்காய் எண்ணெய்.

செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இவைகளைப் புனருத்தாரணம் செய்ததும், இந்தப் பகுதிகளிலுள்ள மரங்கள் தளர்வடைந்து விடுமென்பது வெளிப்படை. எனவே, நிகழும் வருஷங்களில் அந்தப் பகுதிகளையும் சீர்திருத்தி யாகவேண்டும்.

இப்படிப்பட்ட நிலப்பரப்பில் தென்னம் பிள்ளைகளை மீண்டும் நடுவதற்கு ஏராளமான மூலதனம் வேண்டும். பெரும்பாலும் இலங்கையர்களுக்கே சொந்தமாயுள்ள இந்தத் தேசியச் சொத்தின் முக்கியத்துவத்தை முன்னிட்டு இதில் தலையிட அரசாங்கம் தீர்மானித்தது. எனவே, கடந்த மூன்று ஆண்டுகளாக இந்தக் கைத்தொழிலைப் புனருத்தாரணம் செய்வதற்கு அரசாங்கம் நிதி உதவி அளித்து வந்துள்ளது.

தென்னை ஆராய்ச்சி நிலையம் ஒரு சபையால் நிர்வகிக்கப்படுகிறது. ஆராய்ச்சிகளை நடத்துவதற்கும் தென்னைத் தொழிலின் பல வேறு பிரச்னைகளைத் தீர்த்து வைப்பதற்குமென இதை முதல் முதலாக 1928-ஆம் ஆண்டில் ஸ்தாபித்தார்கள்.

இந்த நாட்டில் 50 வருஷ காலத்துக்குமேல் தென்னை ஒரு தோட்டப்பயிராக விளங்கியும் தென்னை ஆராய்ச்சித் திட்டத்தை நிறுவிய பிறகே விஞ்ஞான வழிகளில் இந்தப் பயிரைப்பற்றி ஆராய முயற்சி எடுத்துக்கொண்டார்கள். தேங்காய்கள் நல்ல ஆதாயத்தை ஈட்டிக் கொடுத்த காலங்களில் எரு மிகவும் தாராளமாக மேலும் இட்டுவந்தார்கள். எந்த எந்த வழிகளில் பணம் விவேகமற்ற முறையில் செலவு செய்யப்படுகிறதென்பதைப் பரிசீலனை செய்ய யாரும் முயற்சி எடுத்துக் கொள்ளவேயில்லை.

முதலில் பண்டிருப்புவாவிலும் பின்னர் ரத்மலகாரா தோட்டத்திலும், உரமிடுவதால் ஏற்படும் பலாபலன்களைத் திட்டமாக அறிந்துகொள்ளப் பரிசோதனை நிலையங்கள் ஸ்தாபித்தார்கள். தென்னந் தோட்டங்களுக்கு லாபகரமாக, விஞ்ஞான முறைப்படி எரு இடுவதில் திட்டவட்டமாகப் பலன் கிடைக்கும் என்பதை இந்தப் பரிசோதனைகளின் மூலம் அறிந்து கொள்ள முடிந்தது.

தென்னை மரத்தின் கிருமிகளையும் நோய்களையும் பெரும்பாலும் நுணுக்கமாக ஆராய்ந்து, அவற்றின் வாழ்க்கைச் சரித்திரங்களையும் குணுதிசயங்களையும் அறிந்துள்ளார்கள். அவற்றைக் கட்டுப்படுத்துவதும் ஒழிப்பதுமே ஆராய்ச்சிக்குரிய முக்கிய வேலையாகும். கடந்த மூன்று வருஷ காலத்தில் பல கிருமிநாசினிகளையும், களைநாசினிகளையும் கண்டு பிடித்திருக்கிறார்கள். எனவே, இவற்றை உபயோகிப்பதற்கான முறைகளைப் பரிசிலனை செய்து வருகிறார்கள்.

மகிழ்ச்சியும் பணமும்

பணத்தைவிட மகிழ்ச்சியில் ஒரு பெரிய சௌகரியம் இருக்கிறது. மகிழ்ச்சியை யாரும் கடன் கேட்க மாட்டார்கள்.

—'ப்ரிக் வொர்க்'

சக்தி மிக்க விலங்கு

பி. வி. ராமாநுஜலு

இதை எழுதியவர் சென்னை மிருகக் காட்சிச்சாலையின் உதவி அதிகாரி. அவருடைய அநுமதி பெற்றுக் காண்டாமிருகத்தின் விநோத வாழ்க்கை பற்றிய இந்தக் கட்டுரையை மொழிபெயர்த்திருக்கிறோம்.

சமீபத்தில் சென்னை மிருகக் காட்சிச்சாலைக்குப் புதிதாக ஒரு காண்டாமிருகம் வந்திருக்கிறது. 1914-க்கு முன்பு சென்னையில் ஒரு காண்டாமிருகம் இருந்தது. முதல் உலக யுத்த ஆரம்பத்தின்போது இது திடீரென்று இறந்து போய்விட்டது. நெடு நாட்களுக்குப் பிறகு மீண்டும் சென்னை மிருகக் காட்சிச்சாலைக்கு இப்பொழுது காண்டாமிருகம் வந்திருப்பது எல்லோருடைய கவனத்தையும் கவர்ந்திருக்கிறது.

உருவத்திலும் பலத்திலும் இது யானைக்கு அடுத்தது என்று சொல்லலாம். மூக்கு நுனியிலிருந்து வால் வரையிலும் $10\frac{1}{2}$ அடி நீளமும் 6 அடி உயரமும் உள்ள பெரிய இந்தியக் காண்டாமிருகங்களும் இருக்கின்றன. இவை ஒவ்வொன்றும் சுமார் 6 ஆயிரம் பவுண்டு நிறை இருக்கும்.

பெரிய உடம்புள்ள காண்டாமிருகத்தின் கால் சிறிதாகவும் குட்டையாகவும் இருக்கும்; இதனால் பார்வைக்கு விகாரமாகத் தோன்றும். ஒவ்வொரு காலிலும் மூன்று விரல்கள் உண்டு. அகன்ற தோல் அவற்றை இணைத்திருக்கும். வால் மிகவும் குட்டை. அதன் நுனியில் ஒரு சிறிய மயிர் முடிப்பு உண்டு. தலையிலும் உடம்பிலும் கனத்த தோல். தோளின் முன்புறமும் பின்புறமும் பின்னங் கால்களின் முன்பும் இந்தக் கனத்த தோல் மூன்று மடிப்பாய் மடிந்து பெரிய கவசம் போல இருக்கும்.

உயிரோடு உள்ள காண்டாமிருகத்தின் தோலைச் சாதாரணமாக யாரும் தொட்டுப் பார்த்திருக்க மாட்டார்கள். காண்டாமிருகத்



'குஷாலு'க்குத் தீனி கொடுக்கிறார் ஸ்ரீ ராமாநுஜலு

மூலம்: ஹிந்து (ஆங்கிலம்: 9-8-'53), சென்னை.

தின் தோலினுல் ஆன கவசங்களைப் பொருட்காட்சிச் சாலையில் பலர் பார்த்திருக்கலாம். முரட்டுத்தனமான தடித்த தோலைக் கண்டு இவற்றைக் குண்டுகள் கூடத் துளைக்க முடியாது என்று பலரும் நினைத்திருப்பார்கள். காண்டாமிருகத்தின் கவசம் போன்ற தோலில் துப்பாக்கிக் குண்டுகள் பட்டால் காயம் ஒன்றும் ஏற்படாமல் வேகத்துடன் திரும்பி வந்துவிடும் என்றும் சிலர் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த எண்ணம் முற்றும் தவறு. உயிரோடு இருக்கும்பொழுது காண்டாமிருகத்தின் தோல் மிருதுவாகத்தான் இருக்கிறது. துப்பாக்கிக் குண்டுகள் எளிதில் உள்ளே நுழைந்து விடலாம்; கூரிய கத்தியைச் சுலபமாக உள்ளே புகுத்திவிடலாம். உண்மையில் காண்டாமிருகத்தின் தோல் உலர்ந்துவிட்டால்தான் கடினமாகவும் குண்டுகள் துளைக்க முடியாதபடியும் மாறிவிடுகிறது.

காண்டாமிருகத்தின் முகம் ஒரு படகின் உருவம்போல் இருக்கும்; இருபுறமும் நீண்ட காதுகள். மூக்கு எலும்புகள் வளைந்து இருக்கும். அதன் முகத்தில் உள்ள கொம்புக்கு இவை ஆதாரமாக இருக்கின்றன. காண்டாமிருகத்தின் தோற்றத்திலேயே இந்தக் கொம்புதான் மிகவும் விசித்திரம். கிரேக்க மொழியில் 'ரினோ' என்றால் மூக்கு என்று பொருள். கொம்பு என்பதற்குச் 'செரஸ்' என்று பெயர். அதனுல்தான் ஆங்கிலத்தில் காண்டாமிருகத்துக்கு 'ரினோசெரஸ்' என்று பெயர் வந்தது.

காண்டாமிருகத்துக் கொம்பின் அமைப்பிலுள்ள விசேஷம் என்னவென்றால், அது தோலிலிருந்து வளர்ந்திருக்கிறது. மான், எருமை போன்றவற்றின் கொம்புகள் அவற்றின் மண்டையோட்டுடன் சம்பந்தமுள்ளவை.

பூமியில் உள்ள வேர்களையும் தனக்கு வேண்டிய இதர உணவுப் பொருள்களையும் தோண்டி எடுப்பதற்காகவே காண்டாமிருகம் தன் கொம்பைப் பயன்படுத்துகிறது. தற்காப்புக்காக இந்தக் கொம்பைக் காண்டாமிருகம் உபயோகப்படுத்தும் என்று தவருகப் பலர் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். அது தன் கூர்மையான பல்லால் கடித்துத்தான் காயப்படுத்துகிறது.

அமைதியான நிலையிலுங்கூட எதிர்பாராதபடி காண்டாமிருகம் திடீரென்று பாய்ந்துவிடும். தன் எதிரே காணும் மிருகங்களையோ மனிதரையோ நோக்கித் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு கண்மூடி வேகத்தில் ஓடித் தாக்கத் தொடங்கிவிடும். எதிரில் உள்ள மிருகத்தின் மேலே விழுந்து கீழே தள்ளித் தன் முழுப் பாரத்தினுல் நசுக்கித் தீர்த்துவிடும். நல்ல வளர்ச்சி பெற்ற யானைகளையே காண்டாமிருகம் சண்டையிட்டுக் கொன்றிருக்கிறது. அளவிட முடியாத பலமும் நிறையும் சக்தியும் கொண்ட காண்டாமிருகத்தோடு சண்டையிட ஏதோ சில மிருகங்களால்தான் முடியும்.

இவ்வளவு பெரிய உடலும் பலமும் இருந்தாலும் காண்டாமிருகம் மிகுந்த வேகமாக ஓடும். எதையாவது தாக்கச் செல்லும்போது அது மணிக்குச் சுமார் 28 மைல் வேகத்தில் ஓடும் என்று மதிப்பிட்டிருக்கிறார்கள். நன்றாகக் கேட்கும் சக்தியும் உணரும் சக்தியும்

காண்டாமிருகத்துக்கு உண்டு. ஆனால் 30 அல்லது 40 அடிக்கு முன் உள்ள பொருள் காண்டாமிருகத்துக்கு நன்றாகத் தெரியாது.

காண்டாமிருகம் இப்படிப் பிராணிகளைக் கொன்றாலும் தின்னாது. புல் பூண்டு கிழங்கு இவற்றைத்தான் அது விரும்பிப் புசிக்கும். சில சமயங்களில் நெல் வயல்களிலும் பழத் தோட்டங்களிலும் புகுந்துவிடும். புல் நிறைந்த காடுகளில்தான் காண்டாமிருகத்தைக் காணலாம். இந்தக் காடுகளில் அங்கங்கே தண்ணீர் தேங்கிய சிறு குட்டைகள் இருக்கும். இவற்றில் எருமையும் பன்றியும் முடங்கிக் கிடப்பது போலக் காண்டாமிருகமும் மணிக்கணக்காகப் படுத்துக் கொண்டிருக்கும். இதனால் அதன் தோலில் அடர்த்தியாகச் சேறு படிந்து விடுகிறது. அதன் மேல் மொய்த்து அதற்கு உபத்திரவம் செய்யும் காட்டு ஈக்களிடமிருந்து தப்பித்துக்கொள்ள இந்தச் சேறு உபயோகமாக இருக்கிறது. பெரும்பாலும் காண்டாமிருகம் தனிமையாகவேதான் சுற்றிக் கொண்டிருக்கும். அதற்கு எப்பொழுதும் தனிமையாக வாழ்வதில்தான் விருப்பம் அதிகம். சில சமயங்கள் நீர் தேங்கிய குட்டைகளுக்கு அருகில் ஆண் பெண் காண்டாமிருகங்கள் சேர்ந்து இருப்பதைக் காணலாம்.

இரவு, விடியற்காலை இந்த நேரங்களில்தான் காண்டாமிருகம் காடுகளில் சுற்றிக்கொண்டிருக்கும்; உணவுக்காக அலைந்து திரியும். பகல் நேரங்களில் குளிர்ச்சியான நிழல் உள்ள இடங்களில் ஓய்வு எடுத்துக்கொள்ளும்.

காண்டாமிருகம் எப்பொழுதும் ஒரு குறிப்பிட்ட இடத்திலேயே மலத்தைக் கழித்துக் குவித்து வைக்கும் இயல்புள்ளது. இந்த மலக் குவியலே வேட்டைக்காரர்களுக்குக் காண்டாமிருகம் இருக்கும் இடத்தைக் காட்டிவிடும். காண்டாமிருகத்தின் கர்ப்பகாலம் சுமார் 18 மாதம். ஒரு சமயத்தில் ஒரு குட்டி தான் போடும்.

சாதாரணமாகக் காண்டாமிருகம் எல்லாக் காடுகளிலும் வாழ்வதில்லை. ஆசியாவில் சில பிரதேசங்களிலும் ஆப்பிரிக்காவில் சில இடங்களிலுமே அதைக் காணலாம். ஆப்பிரிக்கக் காண்டாமிருகங்களுக்கு முகத்தில் இரண்டு கொம்புகள் உண்டு. இவற்றை 5 வகையாகப் பிரித்திருக்கிறார்கள். ஆசியாவில் உள்ள காண்டாமிருகங்களுக்குக் கூர்மையான பல்லும், உடலில் தடித்த மடிப்புக்களும் இருக்கும். ஜாவா, சுமத்திரா, இந்தியா என்று மூன்று வகைகளாக இவற்றைப் பிரித்திருக்கிறார்கள். சுமத்திரா வகைக் காண்டாமிருகங்கள்தான் எல்லாவற்றையும் விடச் சிறியவை; இவற்றுக்கு இரண்டு கொம்புகள் உண்டு. மற்ற இரண்டு வகைக்கும் ஒரு கொம்புதான் உண்டு. ஒரு கொம்புள்ள ஜாவா வகைக் காண்டாமிருகங்கள் சில ஆண்டுகளுக்கு முன் வரையில் வங்காளக் காடுகளில் இருந்து வந்தன. இப்பொழுது அங்கே ஒன்று கூட இல்லை. மிகக் குறைந்த அளவிலேயே அந்த வகைக் காண்டாமிருகங்கள் பர்மா, இந்தோனீஷியக் காடுகளில் இப்பொழுது இருக்கலாம் என்று கருதுகிறார்கள். சுமத்திரா வகைக் காண்டாமிருகங்களிலும் ஏதோ

கொஞ்சமே அஸ்ஸாம்-பர்மா எல்லையில் உள்ள அடர்த்தியான காடுகளில் மலைப்பாங்கான இடங்களில் வாழ்கின்றன.

1398-இல் காஷ்மீர் எல்லையோரக் காடுகளில் பல காண்டாமிருகங்களைத் தைமூர் வேட்டையாடிக் கொன்றதாக இந்திய சரித்திரத்தின் மூலம் தெரிகிறது. சிந்து நதிக்கு அருகே 1519-இல் காண்டாமிருகம் ஒன்றைக் கொன்ற வரலாற்றைப் பாபர் தம் 'சுயசரித'த்தில் குறிப்பிட்டிருக்கிறார். இந்தச் சரித்திரச் சான்றுகளால் முன்பு ஒரு காலத்தில் வட இந்தியா முழுவதும் காண்டாமிருகங்கள் வாழ்ந்திருந்தன என்று தெரிகிறது. ஆனால் இப்பொழுது வர வர அவற்றின் எண்ணிக்கை மிகவும் குறைந்துகொண்டே வருகிறது. முதல் முதலில் 1684-இலேதான் காண்டாமிருகத்தை இங்கிலாந்துக்குக் கொண்டு போனார்கள். 1872-க்கு முன்பு அமெரிக்காவில் காண்டாமிருகமே இல்லை.

உலகத்தில் வேறு எங்கும் இல்லாத பலமும் சக்தியும் மிகுந்த காண்டாமிருகங்கள் ஒரு காலத்தில் இந்தியாவில் ஏராளமாக இருந்தன.

இத்தகைய அபூர்வ மிருகங்கள் இன்று மெல்ல மெல்ல மறைந்து வருவது வருத்தமாகத்தான் இருக்கிறது. சென்ற நூற்றாண்டின் மத்தியில் இந்தியாவில் ஏராளமான காண்டாமிருகங்கள் இறந்துவிட்டன. நல்லவேளையாக அஸ்ஸாம் காடுகளில் எஞ்சியிருந்த காண்டாமிருகங்கள் பிழைத்துவிட்டன. காடுகளை அழித்து விளைநிலங்களாக்கும் முயற்சியினாலேயே காண்டாமிருகங்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. 40 ஆண்டுகளுக்கு முன் காண்டாமிருகங்களின் பாதுகாப்புக்காகக் காட்டிலாகா விதிகளைத் திருத்தினார்கள். அதனால்தான் இப்பொழுது சில காண்டாமிருகங்களாவது இந்தியக் காடுகளில் எஞ்சியிருக்கின்றன.

காண்டாமிருகத்தின் தோல், கொம்பு, எலும்பு, ரத்தம் இவை எல்லாமே வைத்தியத்துக்குப் பயன்படும். இவற்றினால் செய்த மருந்துகள், இழந்த சக்தியை மீண்டும் தரும்; பல வகையான நோயை நீக்கும் என்று பலருக்கு நம்பிக்கை. அஸ்ஸாமியர்களும் சீனர்களும் காண்டாமிருகத்தின் கொம்பு முதலியவற்றை விற்பதில் ஒருவரோடு ஒருவர் போட்டி போடுவார்களாம்.

காண்டாமிருகத்தின் கொம்பிலிருந்து செய்த கோப்பைகளில் தண்ணீரையோ ஏதாவது திரவத்தையோ சில நாள் வைத்திருந்தால் அது காசம், பிளேக் உள்படப் பல நோய்களைத் தீர்க்கும் என்கிறார்கள். இந்தக் கோப்பைகளில் விஷம் கலந்த எந்தத் திரவத்தைச் சிறிது நேரம் வைத்திருந்தாலும் நுரைக்கத் தொடங்கி விடும். காண்டாமிருகத்தின் கொம்பிலிருந்து ஒரு பகுதியைப் பாம்பு கடித்த இடத்தில் வைத்தால் உடனே குணம் தெரிகிறது. கொம்பைப் பொடி செய்து பாலில் கலந்து சாப்பிடுவதும் உண்டு.

எட்டு அங்குல நீளம் உள்ள கொம்பின் விலை ரூ. 2,000. காண்டாமிருகத்தின் உலர்ந்த ரத்தத்துக்கும் அதே மாதிரி மதிப்பு உண்டு. அதன் மலத்திலும் சிறுநீரிலும் மருத்துவச் சத்துக்கள்

கலந்திருக்கின்றன. சிறுநீர் சிறந்த கிருமிநாசினியாகப் பயன்படுவதுடன் அஜீர்ணத்தையும் போக்கும்; ஆஸ்த்மாவைக் குணப்படுத்தும்.

தென் இந்தியருக்குக் காண்டாமிருகத்தைக் குறித்து அதிகமாக ஒன்றும் தெரியாவிட்டாலும் வட இந்தியர்களுக்கு அதன் சிறுநீரில் மருத்துவச் சத்து இருப்பதுகூடத் தெரியும். கல்கத்தா, காட்மண்டு மிருகக் காட்சிச்சாலைகளில் காண்டாமிருகத்தின் சிறுநீரைச் சேகரித்து வைக்கிறார்கள். இதை விலைக்கு வாங்குவதற்காகப் பல இடங்களிலிருந்தும் மக்கள் தினந்தோறும் இங்கே வருகிறார்கள்.

காண்டாமிருகங்களின் எண்ணிக்கை குறைவதைத் தடுப்பதற்காக அஸ்ஸாம் சர்க்கார் 1908-இலேயே காவிரங்கா என்னுமிடத்தில் ஒரு காட்டை ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். இங்கே மட்டும் 12 காண்டாமிருகங்கள் இருக்கின்றன.

நம் நாட்டில் இப்பொழுது இருக்கும் காண்டாமிருகங்களின் எண்ணிக்கையைக் கணக்கிட்டிருக்கிறார்கள்: நேபாளத்தில் 50, பிஹாரில் 2, வங்காளத்தில் 33, குச்-பிஹாரில் 25, அஸ்ஸாம் மலை, காட்டுப் பிரதேசங்களில் 140- இப்படிப் பல காண்டாமிருகங்கள் இந்திய எல்லையில் இருக்கின்றன.

1834-இல் லண்டன் மிருகக் காட்சிச்சாலையார் ஓர் இந்தியக் காண்டாமிருகத்தை ரூ. 13,000 கொடுத்து விலைக்கு வாங்கினார்கள். இப்பொழுது ஜெர்மனியில் உள்ள ஓர் இந்தியக் காண்டாமிருகத்தின் மதிப்பு ரூ. 80,000. இன்று சென்னை மிருகக் காட்சிச்சாலையில் உள்ள 'குஷால்' என்ற காண்டாமிருகத்தின் மதிப்பு ரூ. 15,000-த்திலிருந்து ரூ. 20,000 வரை இருக்கும் என்று மதிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் இந்த மாதிரி காண்டாமிருகம் கிடைப்பது அபூர்வமாகையால் 1 லட்சம் ரூபாய் வரைகூட இதன் மதிப்புச் சில சமயம் ஏறும்.

அஸ்ஸாம் சர்க்கார் இந்தக் 'குஷாலை'ச் சென்னை சர்க்காருக்கு வெகுமதியாக அளித்திருக்கிறது. இதன் நிறை 2 டன்; வயது 6 ஆகிறது. இப்பொழுதுதான் இதற்குக் கொம்பு முளைத்துக்கொண்டிருக்கிறது. இன்னும் சில ஆண்டுகளில் இதன் கொம்பு 12 அங்குலம் வரை வளர்ந்து, இது 6 அடி உயரமும் 10 அடி நீளமும் உள்ள பெரிய காண்டாமிருகமாகிவிடும். சென்ற ஜனவரி மாதம் அஸ்ஸாமில் உள்ள பிரசித்தி பெற்ற காவிரங்கா என்ற காட்டில் இந்த ஆண் காண்டாமிருகத்தைப் பிடித்தார்கள். சென்னை மிருகக் காட்சிச்சாலைக்கு வந்த சிறிது காலத்துக்குள்ளாகவே இது நன்றாகப் பழகிவிட்டது. மிகவும் சாதுவாகவே நடந்து வருகிறது. காண்டாமிருகம் ஆபத்தான மிருகம் என்று பலரும் சொல்வார்கள். ஆனால் இந்தக் 'குஷால்' அதற்கு மாறாக இருக்கிறது. தன்னை வளர்ப்பவரிடம் மிகவும் அன்பாக நடந்துகொள்கிறது. அழைக்கும்போதெல்லாம் அருகில் வருகிறது; தடவிக்கொடுத்தால் அதற்கு வெகு குஷி. சென்னை மிருகக் காட்சிச்சாலைக்கே 'குஷால்' தனிப் பெருமை அளித்து வருகிறது.

நாகரிகம் வளர்த்த பழம்பாட்டை

எட்மண்டு ராபர்ட்ஸ்

சென்ற மகா யுத்தத்துக்குச் சற்று முன்பு கீழ்ப்பர்மாவில் வேலை செய்த ஆங்கிலப் பழம்பொருள் ஆராய்ச்சியாளர் சிலர் இந்தியாவும் தூரக் கிழக்கு நாடுகளும் வியாபாரம் செய்து வந்த பழைய பாட்டை ஒன்றைக் கண்டு பிடிக்கத் தீவிரமாக முயன்றார்கள்.

அது சியாமை கடந்து செல்கிறது. இடையில் சியாம் நாட்டின் எல்லையிலிருந்து ஆற்றின் வழியாகச் செல்லவேண்டி வரும். அலெக்ஸாந்தர் காலத்துப் பூகோள சாஸ்திரியான டாலெமி என்பவர் டகோபா என்று குறிப்பிட்டிருக்கும் டைகாலா என்ற வியாபார ஸ்தலத்தில் அந்த வழி தொடங்குகிறது. அநேக மண் மேடுகளைத் தோண்டினார்கள். இந்த ஆராய்ச்சியில் புராதனமான ஓர் இந்தியக் கோவிலின் அஸ்திவாரமும் மண் பாத்திரங்களும் மணிகளுங் கூட அகப்பட்டன.

ஆராய்ச்சியாளர் பிறகு பாண்டா விரிகுடாவுக்கு வந்தார்கள். இந்தப் பாதை உபயோகத்தில் இருந்த பொழுது போக்குவரத்துச் சௌகரியமாகவே இருந்தது. ஆனால் அதில் தண்ணீர் எல்லாம் வற்றி மணல் மேடிட்டிருந்தது. இதுவே வழி அடைபட்டதற்குக் காரணம். ஆற்றோரங்களில் இருக்கும் கிராமங்களில் இன்னும் இந்தியர்கள் கிழக்கு நோக்கி வந்தது பற்றிப் பல நாடோடிப் பாடல்கள் வழங்குகின்றன.

'ஆரியன் பாத்' என்ற பத்திரிகையில் வெளியான இந்த விவரம், பரந்து விளங்கிய நம் பழைய வாணிகத்தை விளக்குகிறது.

பாண்டா விரிகுடாவுக்குத் தெற்கே வியங்ஸ்வா என்று ஒரு ஊர் இருக்கிறது. இப்போது அது காடு மூடிக் கிடக்கிறது. காடுகளை வெட்டி மிகுந்த சிரமத்துடன் உள் சென்றவுடன் பாழடைந்த ஓர் அழகான புத்தர் சிலை தெரிந்தது. அதற்கடுத்த ஊர் சையா. இங்கே அநேகம் பீங்கான் கிண்ணங்களைக் கண்டெடுத்தார்கள். இதிலிருந்து, சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் நாகரிகத்தில் முன்னேறிய பல இந்தியர்கள் இங்கே வசித்து வந்தார்கள் என்று நிச்சயமாகத் தெரிகிறது.

இந்தத் தூரக் கிழக்கு இந்தியப் பாதையை தவிர, இன்னும் இரண்டு சிறிய வியாபாரப் பாதைகளைப்பற்றியும் ஆராய்ந்து வருகிறார்கள்.

இந்தப் பாழடைந்த காட்டின் மேற்கு மூலையில் குன்றிலேயே செதுக்கிய ஸ்நானத் தொட்டி ஒன்றைக் காணலாம். அதில் எப்பொழுதும் ஊற்றிலிருந்து கொப்புளித்து வரும் உஷ்ண உப்புநீர் வந்துகொண்டேயிருக்கிறது. அந்தக் காலத்தில் அதை ஆரோக்கிய ஸ்தலமாகக் கொண்டிருந்தார்கள் என்று தெரிகிறது.

தங்கம், வெள்ளி, நவரத்தினங்கள், பட்டு, வாசனைத்திரவியங்கள் ஆகியவை இந்தப் பழைய பாதைகளின் மூலம் வியாபாரம் ஆகிவந்தன. இதைப்போலவே பால்டிக் கடலுக்கும் மத்திய தரைக் கடலுக்கும் இடையே உள்ள இடம் பெரிய வியாபாரப் பாதையாக இருந்து வந்தது. அந்தப் பழைய பாதைகளே புதிதாக நாடு கண்டுபிடிப்பவர்களுக்கும் சாதகமாக இருந்தன. இத்தாலிய யாத்திரிகரான மார்க்கோ போலோ இந்த வழியாகவே ஆசியாவுக்கு வந்தார். டாக்டர் ஸ்வென் ஹெடின், ஸர் ஆரல்ஸ்டைன், எம். ஆர்ட் இவர்கள் பின்னால் இப்படிச் சில வியாபாரப் பாதைகளைத் திரும்பவும் கண்டுபிடித்தார்கள்.

ஸர் ஹல்போர்ட் மேக்கிண்டர், "இவைகளில் சில கொள்ளைக்காரர் போகும் வழிகளாக இருந்து பின்னால் வியாபாரப் பாதைகளாக மாறியிருக்கலாம்" என்று ஊகிக்கிறார். இதற்கு ஆதாரமும் கிடைத்திருக்கிறது. வடக்கு ஐரோப்பாவில் நார்ஸ் தேசத்தில் இருந்த கடல் கொள்ளைக்காரர்கள் ஒவ்வோர் ஆண்டு இளவேனில் ஆரம்பத்திலும் கொள்ளை அடிக்கக் கிளம்பி இலையுதிர் காலத்தில் கொள்ளைப் பொருள்களுடன் நாடு திரும்புவார்கள். ஆப்பிரிக்காவில் முதல் முதல் ஆராயப் போன சில ஐரோப்பிய ஆராய்ச்சியாளர், அடிமை வியாபாரம் புரிந்த அரேபியர்கள் உபயோகித்துவந்த வழிகளையே பயன்படுத்திக்கொண்டார்கள். டாக்டர் லிவிங்ஸ்டன் போன்றவர்கள் இந்த வழியில் தான் போய் வந்தார்கள்.

கிறிஸ்துவுக்கு முன்பே இந்த வியாபாரப் பாதைகள் இருந்தன. முன் காலத்தில் பால்டிக் பிரதேசத்திலுள்ள ஆம்பர் என்னும் வாசனைத் திரவியத்துக்கு ஐரோப்பாவில் மிகுந்த கிராக்கி ஏற்பட்டது. அதனால் மத்தியத் தரைக் கடல் வழியே இரண்டு வியாபாரப் பாதைகள் தோன்றின. "தெற்குப் பாலஸ்தீனத்தில் உள்ள காஜா நகரம் பழைய காலத்தில் பெயர் பெற்ற வியாபார ஸ்தலமாக இருந்தது" என்று ஸர் பிலாண்டர் ஸ்பிட்ரி என்பவர் குறிப்பிட்டிருக்கிறார். அதையடுத்து வடக்கேயும் தெற்கேயும் பல பாதைகள் ஏற்பட்டன.

இந்தப் பழங்கால வியாபாரம் மிகக் குறுகிய பிரதேசத்தில் மட்டும் நடக்கவில்லை. கிறிஸ்துவுக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் புழங்கிய அயர்லாந்து தங்க நாணயங்களை இத்தாலியிலுள்ள டிராய் நகரத்தில் சென்ற நூற்றாண்டில் கண்டெடுத்தார்கள்.

பாபிலோனியாவும் எகிப்தும் வியாபாரம் செய்யத் தொடங்குவதற்கு முன் சண்டையிலும் கொள்ளையிலும் ஈடுபட்டிருந்தன. பிறகு சமாதானமே சிறந்தது என்பதை உணர்ந்தன. இந்த இரண்டு சாம்ராஜ்யங்களுக்கும் இடையில் பாலஸ்தீனம் இருந்ததால் எல்லா வியாபாரப் பொருள்களும் அதன் வழியாகவே செல்லவேண்டியிருந்தது. அதனால் அந்த நாட்டைத் தமதாக்கிக்கொள்ள இந்த இரண்டு நாடுகளும் போட்டி போட்டன. அதனால்தான் இப்போதும் யூதர்கள் பாலஸ்தீனத்தைத் தங்கள் நாடாக்கிக்கொள்ளப் போர் புரிந்தார்கள்.

பொருள்களின் விசேஷ மதிப்பினால் வியாபாரப் பாதைகள் ஏற்பட்டன. கொஞ்சங் கொஞ்ச

மாக இந்தப் பாதைகள் பல திசை களிலும் பரவி ஐரோப்பாவி லிருந்து தூரக் கிழக்கு நாடுகள் வரை நீண்டன.

மக்களுக்குத் துணிச்சலும் ஆர் வமும் நாளடைவில் மிகுந்தன. பினீஷியன் ஜாதியார் முதலில் பெரிய கடல் பாதைகளை இங்கி லாந்து வரை கண்டார்கள். தரை மார்க்கமாகக் கிழக்கே ஆசியா மைனர் மூலம் இந்தியாவுக்கும் வந்தார்கள். இன்னொரு பாதை பாரசீகத்துக்குச் சென்றது. இந்தப் பாதைகள் ஏற்பட்டு வியாபாரம் தொடங்கிய பிறகு தூரக் கிழக்கு நாட்டின் செல்வம் இந்தியாவுக்கு வரலாயிற்று. கிரேக்க சாம்ராஜ் யம் வலுத்ததும் கிழக்கு மேற்குப் பிராந்தியங்களில் வியாபாரம் பலப்பட்டுச் செல்வம் கொழிக்கத் தொடங்கியது. ஒரு பாதை செங் கடல்வரை நீரிலும், தரைமூலம் அலெக்ஸாந்திரியா வரையிலும் சென்றது. இந்தியத் துறைமுகங் களிலிருந்து பாரசீக வளைகுடாவுக் குப் பாதைகள் உண்டாயின. அங் கிருந்து பாலைவனங்களை ஒட்டகங் களின் உதவியால் கடந்தார்கள். இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்பே கிரேக்கர்கள் இந்தியா மூலம் சீனுவுக்கு வழி இருப்பதை அறிந்திருந்தார்கள். செங்கடலி லிருந்து இந்தியாவுக்குப் பலமுறை வந்து போனார்கள்.

இவை தவிர, ஆசியா-சீனு வழி யாகத் தரைவழி ஒன்று கிறிஸ்துவ ஆண்டுத் தொடக்கத்தில் மேற்கத் திய நாடுகளோடு வியாபாரம் செய் வதற்குப் பயன்பட்டது. அமைதி நிலவிய காலங்களில் இந்தியாவி லிருந்து சீனுவுக்குத் துரிதமாகச் செல்ல இந்த வழியே வசதியாக இருந்தது. தரை வழியே ஏரான மான பொருள்களை எடுத்துச் செல்ல முடிந்தது.

சீனுவிலிருந்து மேற்கு முகமாக மூன்று முக்கியமான தரை மார்க் கங்கள் ஏற்பட்டிருந்தன. அவை பெயர் பெற்ற வியாபார ஸ்தலங் களான சாமர்க்கண்டிலும் பொகா ராவிலும் இணைந்தன.

இந்தப் பாட்டைகளின் மூலம் சீனுவின் பட்டும் இந்தியப் பொருள்களும் மேற்கத்திய நாடு களின் செல்வமும் சாமர்க்கண்டி லும் பொகாராவிலும் ஒருங்கே வந்து குவிந்தன. ஆனால் கி. பி. 15-ஆம் நூற்றாண்டில் அமெரிக்கா வுக்கும், ஆப்பிரிக்காவிலுள்ள நன் னம்பிக்கை முனையைச் சுற்றி இந் தியாவுக்கும் செல்லும் கடல் மார்க் கத்தைக் கண்டு பிடித்தார்கள். அது முதல் உலக வியாபாரம் பெரும்பாலும் கடல்மார்க்கங்களின் மூலமாகவே நடக்க ஆரம்பித்தது.

சுமார் மூன்று நூற்றாண்டு களுக்கு இந்த நன்னம்பிக்கை முனை மார்க்கமே முக்கியமாக இருந்தது. ஆனால் சூயஸ் கால்வாயை வெட்டி யதும் மத்தியதரைக்கடல் பயன் படத் தொடங்கியது. வட அமெ ரிக்கா, தென் அமெரிக்காவுக்குக் கடல் மார்க்கங்கள் ஏற்பட்டன. கி. பி. 18-ஆம் நூற்றாண்டின் இறுதி யில் ஆஸ்திரேலியாவுக்கு ஐரோப் பிய மக்கள் குடியேறத் தொடங்கி னார்கள். எகிப்துக்கும் பாபிலோ னியாவுக்கும் இடையேயுள்ள பழைய வியாபாரப் பாதைக்கு மேலேயே ஆகாய விமானங்கள் அடிக்கடி இப்பொழுது செல்கின் றன. விஞ்ஞான யுகத்தில் இந்தப் பழம் பாதை பயன்படுவது விந்தை யாக இல்லையா?

கல்வியினால் கவர்ச்சி குறைகிறதா?

மாலதி பேடேகர்

"படிப்பினாலே பெண்களின் 'சார்ம்' குறைகிறது" என்ற குரல் இன்று எங்கும் கேட்கிறது. இதை ஆராய்ந்து ஒரு பெண்மணி எழுதிய கட்டுரை இது. குடும்பத் தொந்தரவுகள் குறைய வழியும் சொல்கிறார் அவர்.

பெண்களின் கல்வி எப்படி இருக்க வேண்டும் என்பதைப்பற்றி இப்பொழுது எங்கே பார்த்தாலும் பேச்சு நடக்கிறது. படிப்பினாலே அவர்களுடைய கவர்ச்சித் தன்மை போய்விடுவதாகவும் சொல்கிறார்கள். அவர்களின் கல்வி பயன்படுவதே இல்லை என்ற குரலும் நம் காதில் விழாமலில்லை.

ஆண்களின் கல்வி பயன்படுகிறது என்று நாம் எந்தக் காரணத்தைக் கொண்டு சொல்கிறோம்? பணம் சம்பாதிப்பதுதான் ஆண்களின் வாழ்வில் முக்கியத் தேவை. அதற்குப் பயன்பட்டால் அந்தக் கல்வியை நாம் நல்லது என்கிறோம். சமயம் நேரும்போது ஆண்களுக்குச் சமையல் செய்யத் தெரிகிறதா, குழந்தைகளை வளர்க்கத் தெரிகிறதா, பத்துப் பேர்களோடு சுமுகமாகப் பழகத் தெரிகிறதா என்பதையெல்லாம் யாராவது கவனிக்கிறார்களா? குடும்பத்தில் ஆண்கள் இவற்றைச் செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டாலுங்கூட, ஆண் கல்வியிலே இவை அடங்குவதில்லை. சமையல் செய்யத் தெரியாவிட்டால் ஆண்கள் ஹோட்டலுக்குப் போவது சகஜம். மனைவி இறந்து, குழந்தைகளை வளர்க்கத் தெரியாவிட்டால் உடனே மறுமணம் செய்துகொள்வது இயல்பு. சம்பாதிக்கும் ஆண்மகன் வீட்டில் பத்துப் பேரோடு ஒத்துப் போவதைப்பற்றியோ பேச்சே எடுக்கக்கூடாது; அவனுடைய விருப்பப்படி எல்லாரும் நடந்துகொள்ள வேண்டியது கடமை. சட்டரீதியில் பெண்களுக்குச் சமத்துவம் வந்தாலுங்கூட அன்றாட வாழ்விலே இந்தப் பழக்கமேதான் காண்கிறது.

கல்வியறிவு பெற்ற பெண் எப்படி இருக்க வேண்டும்? இல்லறத்தை இன்பமாக நடத்த அவளுக்குத் தெரியவேண்டும். ஆதலால் பிறந்த வீட்டாரைவிடப் புக்ககத்தார்தான் அவளுடைய கல்வியின் வெற்றியைப்பற்றி அபிப்பிராயம் சொல்ல வேண்டும். 'கணவன்' என்ற முறையில் ஆண்கள் சொல்லக்கூடிய கருத்துத்தான் இதில் முக்கியமானது. 'தந்தை' என்ற முறையில் ஆண்கள் சொல்லும் கருத்துக்கு மதிப்புத் தருவதில் பயனில்லை. மணம் ஆன பிறகு, மனைவியோடு தமக்கு ஏன் ஒற்றுமை இல்லை, அவளைத் தள்ளி வைப்பதற்குக் காரணங்கள் என்ன என்பவற்றைக் கணவன்மார்களே தெளிவாகச் சொல்ல முடியும்.

இல்லறத்தை நடத்துவதிலே நூற்றுக்கு நூறு அம்சம் பெறக்

காப்பிரைட்: ஸ்திரீ (மராட்டி: ஆகஸ்ட் '53), கிர்லோஸ்கர்வாடி, ஸாதாரா.

குழந்தையை வளர்த்து.....

கூடிய பெண் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று யாரும் சொல்ல முடியாது. படித்தவள், வீட்டு வேலைகளில் கெட்டிக்காரி, எல்லாரோடும் ஒட்டிப் பழகுகிறவள், பார்வைக்கு அழகானவள்—இப்படிப்பட்ட ஒரு பெண்ணைப் புக்ககத்தார் தள்ளிவைக்கிறார்கள் என்றால், அவளுடைய பள்ளிக்கூடக் கல்வியிலே இன்ன குறை இருந்தது என்று எப்படிச் சொல்ல முடியும்? ஆங்கிலம், கவிதை, கணக்கு, சரித்திரம், பூகோளம் முதலியவற்றில் இன்ன விஷயத்திலே அவளுக்குத் தேர்ச்சி இல்லாமையால் நான் அவளைத்

கணவனுக்கு உபசாரம் செய்து...

தள்ளிவைத்தேன் என்று எந்தக் கணவனும் சொல்வதில்லை. ஒருத்தி சமையற்கலையிலே மிகவும் தேர்ந்தவள்; தையல் முதலிய வேறு கலைகளும் அவளுக்குத் தெரியும். அவளை என் தள்ளி வைத்தார்கள் என்பதை, அவளுடைய பள்ளிப் படிப்பை ஆராய்வதனாலே கண்டுபிடிக்க முடியாது. பார்வைக்குச் சுமாராகவும், குடும்பத்தில் அதிக கவனம் இல்லாமலும், வேலைகளே தெரியாமலும் இருக்கும் பெண்கள் கூடக் கணவன்மாருக்குப் பிடித்திருப்பதை நாம் காண்கிறோம். ஆதலால், இன்பமான இல்லறத்துக்கு இன்னது வேண்டும் என்பதைக் கணக்குப்போட்டு யாருமே சொல்ல முடியாது; எனவே, இன்ன கல்வி முறைதான் பெண்களுக்குப் பயன்படும் என்று சொல்வதும் அசாத்தியம்.

காலம் மாற மாற, இல்லறத்தின் உருவமும் மாறுகிறது. பணக் கவலை இல்லாமல், மறுநாளைப் பற்றிய சிந்தனை இல்லாமல், குழந்தைகளுக்கு நாளைக்கு எப்படிச் சோறு கிடைக்கும் என்ற ஏக்கம் இல்லாமல், ஒருவன் சம்பாதித்து அவனை நம்பி இருபத்தைந்து பேர் வாழ்ந்த காலத்திலே, சகுந்தலைக்குக் கண்வர் செய்த உபதேசம் சரியாக இருக்கலாம். அவருங் கூடக் கடைசியிலே, "மற்றவையெல்லாம் உன் பாக்கியத்தைப் பொறுத்தவை, அம்மா! அதைப் பிறந்த வீட்டார் சொல்லக் கூடாது" என்று சொன்னார்.

இந்தக் காலத்திலோ ஒவ்வொரு குடும்பத்திலும் பணக் கஷ்டம் இருக்கிறது. எனவே, எதையும் நிலையாகச் சொல்ல முடியாது. படித்துத் தேர்ந்து, வீட்டு வேலைகளை நன்றாகச் செய்து, குழந்தை

களை நன்ருக வளர்த்த, எல்லா ரோடும் சுமுகமாகப் பழகுவதனாலே மட்டும் எல்லாம் ஆகிவிடுமா? இவை எல்லாவற்றையும் செய்வதோடு, சந்தர்ப்பம் நேர்ந்தால் கணவனுக்குப் பண வருமானத்திலும் உதவி செய்ய வேண்டிய கடமையும் இன்று படித்த பெண்ணைச் சார்கிறது.

ஒரு காலத்தில் பெண்கள் பெருமைக்காகப் படித்தார்கள். இன்று அந்தக் கல்விக்குப் பயன் தேட வேண்டிய காலம் வந்துவிட்டது. ஆகையால் அந்தக் கல்வி வீணுகக் கூடாது என்றே பலரும் எதிர்பார்க்கிருர்கள். 'கற்பனையெழில் தாங்கிய பெண்' என்ற அவளுடைய பழைய உருவம் மறைந்து, பொருள் குறைந்துள்ள இந்தக் காலத்திலே அவள், 'அர்த்தாங்கினி'யாக வாழவேண்டியிருக்கிறது. அவள் இல்லறத்தை நன்கு நடத்த வேண்டும்; வீட்டுக்கு வெளியே ஆணுக்கு உரிய பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதாவது, பொருள் வருவாய் இருக்க வேண்டும். அவள் நற்றுயாக இருக்க வேண்டும்; ஆனுல் குழந்தைகள் குறைவாக இருக்க வேண்டும். ஆணின் வீரமும் கடமைப் பான்மையும் அவளிடம் இருக்க வேண்டும். வெளியே அவன் புலியாகவும் வீட்டிலே அவள் பசுவாகவும் இருக்க வேண்டும். இன்று பெண்கள் கல்வியைக்கொண்டு இவ்வளவையும் எதிர்பார்க்கிருர்கள்.

ஆனுல் இவ்வளவு குணங்களும் உடைய பெண்ணுவது குடும்பத்திலே வெற்றி பெறுகிருளா? இல்லை. எனக்கு எத்தனையோ பெண்களைத் தெரியும்: அவர்கள் சம்பாதிக்கிருர்கள்; திறமையாகச் சமைக்கிருர்கள்; குழந்தைகளைக் கண்ணும் கருத்துமாக வளர்க்கிருர்கள்; குடும்பத்தின் முன்னேற்றத்துக்காக அவர்கள் நர்ஸாகவும், டாக்டராகவும், உபாத்தினியாகவும், வேலைக்காரியாகவும் பல தொழில்கள் செய்கிருர்கள். ஆனுல் அவர்களுடைய கணவன்மார்களோ, போதிய 'கவர்ச்சி' இல்லையே என்று முறையிடுகிருர்கள். அந்தப் பெண்களுக்கு இன்னது செய்வதென்றே தெரியவில்லை. 'கவர்ச்சி இல்லை' என்ருல் என்ன அர்த்தம் என்பதுதான் அவர்களுக்கு விளங்கவில்லை;



வீட்டிலேயே துணிகள் தைத்து..



உபாத்தினி வேலைக்குப் போய்..

ஏனென்றால், அவர்கள் பார்ப்பதற்கு அழகாகத்தான் இருக்கிறார்கள். ஆண்கள் வேண்டுகிற இந்தக் கவர்ச்சி - 'சார்ம்' - அழகைப் பொறுத்ததன்று. அது அவர்களுடைய மனத்தைப் பொறுத்தது. நம் நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலுங்கூட, "கல்வியினாலே பெண்களின் 'சார்ம்' போய்விட்டது" என்ற குரல் கேட்கிறது. இந்தக் கவர்ச்சியின் இலக்கணத்தை யாருமே விவரித்துச் சொல்ல முடியாது.

பணம் சம்பாதிக்கும் பொறுப்பிலே பெண்களும் பங்கு கொள்ள வேண்டிய காலம் வந்துவிட்டதனால், ஆண் கல்விக்கும் பெண் கல்விக்கும் அதிக வித்தியாசம் இருக்க முடியாது.

'பணம் சம்பாதிக்கும் பொறுப்பு எனக்கு வேண்டாம்' என்று எந்தப் பெண்ணுமே இனிமேல் சொல்ல முடியாது. இன்ன சமயத்தில் இன்ன இடையூறு வரும் என்பதை முன்கூட்டி யார் சொல்வது? படித்த பெண்ணோ, படிக்காத பெண்ணோ தனக்குத் தகுந்த அல்லது தகாத எந்த வேலையையாவது செய்து வயிற்றை நிரப்ப வேண்டிய காலம் வெகு தொலைவில் இல்லை.

'நளிர்மணி நீரும் நயம்படு கனிகளும்' நிறைந்த இந்தப் பாரத நாட்டிலே, இனிமேல் பெண்கள் பிறரை நம்பி வாழ முடியும் என்ற நிலை இருக்கப் போவதில்லை. இப்பொழுதே நூற்றுக்குத் தொண்ணூறு குடும்பங்களில் போதும் போதாததுமான வருமானமே கிடைக்கிறது. இப்பொழுதே நூற்றுக்கு எண்பது குடும்பங்களில் ஆண்களோடு பெண்களும் உழைத்துச் சம்பாதிக்கிறார்கள். அவர்களில் பலர் படிக்காத பெண்களாயினும் அவர்கள் பல தொழில்கள் செய்தும் உழைத்துப் பாடுபட்டும் குடும்பத்துக்கு உதவுகிறார்கள். மத்தியதர வகுப்பு இப்போது மறையப் போகிறது; அந்தக் குடும்பங்களும் இந்த நிலைக்கே வந்து தீரும். சமயம் வந்தால் பணம் சம்பாதிக்கக் கூடிய கல்விதான் இனிமேல் பயன்படப் போகிறது.

இல்லறத்திலே வெற்றி பெறுவதற்குப் பள்ளிப் படிப்பு மட்டும் போதாது. மனத் தத்துவ அறிவு பெண்களுக்கு மிகுதியாக இருக்க வேண்டும். ஆண் பெண்களின் மனத் தத்துவத்தை அவர்கள் நன்றாகப் பயில வேண்டும். இதற்காக, பள்ளிப் படிப்புக்குப் பிறகு சில புத்தகங்களைப் படிப்பதும், வாழ்க்கையைக் கவனிப்பதும் மிகவும் முக்கியம்.

யாருடைய மனத்தை எந்த உபாயத்தினாலே வசப்படுத்துவது என்று உறுதியாகச் சொல்ல முடியாவிட்டாலும், அதைப்பற்றிச் சிந்திக்கும் வழக்கத்தை மேற்கொண்டு நெருக்கடியான சமயத்தில் அவரவர் தம் வழியைத் தாமே தீர்மானித்துக்கொள்வதுதான் சரி.

ஆண் மனத்தைப்பற்றிப் பெண்களும், பெண் மனத்தைப்பற்றி ஆண்களும் வெளிப்படையாகப் பேசும் பயிற்சிக் கழகங்கள் இதற்கு உதவி செய்யலாம். இதனால் குடும்பத் தொந்தரவுகளும் நிச்சயமாகக் குறையும்.

ஙு

அற்புத மனோசக்தி

★

'மந்திரம், மாயம் எதுவும் இல்லை. சூட்சுமமும் தேர்ச்சியும் இருந்தால் எவரும் பிறர் மனத்தில் செல்வதை அறியலாம்' என்று அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள். நியூ யார்க்கிலிருந்து வெளிவரும் 'ஹொய்' என்ற ஆங்கிலப் பத்திரிகையில் வெளியான ஒரு கட்டுரையை ஆதாரமாகக் கொண்டது இது.

ஒருவர் மனத்தில் உள்ளதை மற்றொருவர் தம் மனோசக்தியால் அறிந்துகொள்ள முடியும் என்பதை அநேகமாக எல்லோருமே நம்புகிறார்கள். இதைப் பற்றிப் பேச்சு வரும்போதெல்லாம் அதற்கு ஆதாரமாகத் தம் அநுபவத்தை யாராவது ஒருவர் சொல்வது வழக்கம்.

"அந்த மனோசக்தி நிபுணர் தம் சக்தியைக் காட்டிக்கொண்டிருந்தார். கொஞ்சங்கூட நம்பிக்கையில்லாமல்தான் நான் அங்கே போனேன். என்னை அவர் பார்த்ததே இல்லை. என்னைப்பற்றி நானே மறந்திருந்த சில விஷயங்களை அவர் சொன்னார். அவருக்கு ஓர் ஆறாம் அறிவு இருந்திராவிட்டால் இப்படி அவர் சொல்லியிருக்கவே முடியாது" என்று அவர் சொல்வார்.

சமீபத்தில் நடந்த ரேடியோ ஒலி பரப்பு ஒன்றில் எண்ணம் அறியும் நிபுணர் ஒருவர் தம் கையை நெற்றியில் வைத்துக் கொண்டார். வெட்ட வெளியைப் பார்த்தார். பிறகு அவர், "ஏதோ ஓர் எண் நினைவுக்கு வருகிறது. அது டெலிபோன் எண் என்று தோன்றுகிறது. ஜி. ஆர். என்ற ஆங்கில எழுத்துக்களோடு அதற்குச் சம்பந்தம் உண்டு. 'கிராமெர்ஸி'யாக இருக்குமோ? ஆ! தெரிந்துவிட்டது! கிராமெர்ஸி 4....7-3-7-9. ஒரு ஸ்திரீயின் நினைவு வருகிறது. இந்த எண்ணை நினைத்துக்கொண்டிருக்கும் பெண்மணி எவராவது இங்கே இருக்கிறாரா?" என்றார்.

ஒரு ஸ்திரீ எழுந்திருந்தாள். அவள் சாதாரண உடை உடுத்திய பெருந்தன்மையான ஸ்திரீ. அவள் அப்படியே பிரமித்து விட்டாள்.

நிபுணர் அவளை உற்றுப் பார்த்தார். "அம்மணி! நீங்கள் என்னை எப்போதாவது பார்த்திருக்கிறீர்களா?" என்று கேட்டார்.

"இல்லை. ரேடியோவில் கேட்டதை நான் நம்பவில்லை. நேராகவே பார்க்கலாம் என்றுதான் இன்று இங்கே வந்தேன்" என்றாள்.

நிபுணர், "கொஞ்சம் இருங்கள். ஒரு பெயரின் இரண்டு ஆரம்ப எழுத்துக்கள் நினைவுக்கு வருகின்றன. ஒன்று எல்; மற்றொன்று எச். இவைகள் உங்கள் பெயரைச் சேர்ந்தவை அல்ல என்று தெரி

கிறது. உங்களுக்கு மிக நெருங்கிய யாரோ ஒருவர் பெயரைச் சேர்க்தவை. ஒரு வேளை உங்கள் கணவராக இருக்கலாம். நீங்கள் லெராய் என்ற பெயரை நினைக்கிறீர்கள்....லெராய் ஹார்க்னெஸ். இதுதான் உங்கள் கணவர் பெயர்; இல்லையா?'' என்றார்.

வியப்பால் அந்தப் பெண்ணின் வாய் திறந்தபடியே இருந்தது. எப்படியோ அவள் கணவன் பெயரை அவர் சொல்லிவிட்டாரே; நம்பவே முடியவில்லை. இதைப் போன்ற இன்னும் பல ஆச்சரியமான விஷயங்களை அவர் சொன்னார்.

சற்றும் தயங்காமல் அவளுடைய குழந்தைகளின் பெயர், அவளது வீட்டு எண், தெரு, அவளுடைய கணவனின் தனிப்பட்ட தொழில் இவைகளை எல்லாம் அவர் சரியாகச் சொல்லிவிட்டார்.

கடைசியாக மிகவும் ஆச்சரியப்படும் முறையில் அவர் அவளுடைய பாக்கெட் புத்தகத்துக்குள் தம் ஞானக் கண்ணைச் செலுத்தி அவளுடைய மோட்டார் டிரைவர் லைசென்ஸ் எண் முதலியவற்றையெல்லாங்கூடச் சொல்லிவிட்டார். இவைகள் அவளுக்குக்கூட நினைவில்லை.

உண்மையில் இந்த நிபுணர் அபாரத் திறமை உள்ளவர்தான். ஆனால் இவர் திறமை ஒரு கலைத் திறமையே ஒழிய ஆத்ம சக்தித் திறமை அல்ல. வெளிப்படையான விஷயங்களையும் நம்பத் தகாதவையாகக் காட்டுவதுதான் இவர் திறமை. இந்த மனோ சக்திக்குப் பின்னால் எலெக்ட்ரிக் மணி அடிப்பதற்குக் காரணமான விசை போன்ற ஒரு தந்திரம் இருக்கிறது.

''பிறர் மனம் அறியும் இந்தச் சக்தி உண்மைதான். தந்திரம் ஒன்றுமே இல்லை. நானே நேராகப் பார்த்திருக்கிறேன்'' என்று பலர் சொல்லுவார்கள். ''அந்த நிபுணர் என்னைப் பார்த்ததே இல்லை. என்னைப்பற்றி அவர் எப்படித் தெரிந்துகொண்டிருக்க முடியும்?'' என்பதுதான் சாதாரண வாதம்.

நீங்கள் என்ன காரணம் சொல்லி அது தந்திரம் என்று விளக்க முயன்றாலும் நம்பிக்கை உடையவர்களை அசைக்க முடியாது. ''ஸ்வாமி ஷிக்கே பாப் என்பவர் செய்த முறை நீங்கள் சொல்வது போலவே அல்ல'' என்றுதான் அவர்கள் வாதிப்பார்கள்.

மந்திரவாதியாகத் தொழில் செய்யும் ஒருவருக்கு இந்த வாதங்களெல்லாம் வேடிக்கையாக இருப்பதோடு வெகு அநுகூலமாகவும் இருக்கின்றன.

சரி; இதில் உள்ள தந்திரம் என்ன என்கிறீர்களா? பல நூறு தந்திரங்கள் இருக்கின்றன. இந்தச் சக்தி சம்பந்தமான ஒரு ரேடியோ ஒலி பரப்புக்குத் தந்திரமாக உதவுவது அமெரிக்கத் தபால்தான். ஒலி பரப்புக்கு டிக்கட் பெற வேண்டுமானால் ரேடியோவுக்கு எழுத வேண்டும். மனோசக்தி நிபுணர் டிக்கெட் அனுப்பும் நபர்களுள் எவராவது இருபது முப்பதுபேர்களின் விலாசங்களைத் தெரிந்துகொள்வார். ஒலி பரப்புக்குச் சில நாளைக்கு முன் நிபுணர் தனிப்பட்ட ஒரு துப்பறிபவரின் மூலம் இவர்களைப்பற்றிய செய்திகளை அறிந்துகொள்வார். ஒலி பரப்பின்போது நிபுணர் மனோசக்தி எதையும் உபயோகிக்க வேண்டியதில்லை; கண்களைத்தான் உபயோகிக்க வேண்

டும். அவர் தம் மனத்தோற்றங்களைக் குறித்துக்கொள்வதற்கென்று தம் முன் வைத்திருக்கும் குறிப்பு ஏட்டில் அங்குள்ள பலரைப் பற்றியும் ஏராளமான விவரங்கள் இருக்கும்.

முதல் முதலாக இந்த மனோசக்தியைத் தொழிலாகக் கொண்டு ஐரோப்பாவில் பிரசித்தி பெற்ற செவாலியர் பினெட்டி என்ற இத்தாலிய மந்திரவாதி தம் மனைவியையே 'மீடியம்' (கருவி) ஆக உபயோகித்தார். கண்ணைக் கட்டிக்கொண்டு அவள் நாடகசாலை மேடையில் உட்கார்ந்திருப்பாள். இவர் அதற்குள் ஓர் இடத்தில் இருந்துகொண்டு ஒரு ரகசிய பாஷையில் அவளோடு பேசுவார்.

அந்த முறையை இன்றும் பல மனோசக்தி நிபுணர்கள் உபயோகித்து வருகிறார்கள். ஆனால் அந்த முறையை இன்னும் சாமர்த்திய மாக அபிவிருத்தி செய்திருக்கிறார்கள்.

இந்த நிகழ்ச்சியைப் பார்க்க வந்துள்ளவர்களில் ஒருவர் தம்மிடம் கொடுக்கும் பொருள் என்ன என்று சொல்லும்படியோ எழுதிக் கொடுத்திருப்பது என்ன என்று சொல்லும்படியோ மந்திரவாதி 'மீடிய'த்தைக் கேட்கிறார்.

மந்திரவாதி பேசும் வாக்கியம் ஒவ்வொன்றின் முதல் எழுத்தும் சேர்ந்து 'மீடியம்' சொல்ல வேண்டியதைக் காட்டி விடுகிறது. "பேச்சைக் கவனிக்காதே. நான் சொன்னபடி மனத்தைச் செலுத்து" என்று மந்திரவாதி சொன்னால் சொல்லவேண்டிய பொருள் 'பேனா' என்று 'மீடிய'த்தக்குத் தெரிந்துவிடும்.

சில ரகசிய பாஷைகள் வெகு சிக்கலாக இருக்கும். அவைகளைக் கற்றுத் தேர்ச்சி பெறப் பல மாதங்களாகும்.

புகழ் பெற்ற மந்திரவாதியான ராபர்ட் ஹௌடினி என்பவரும் ஹெர்மன், ராபர்ட் ஹெல்லர் என்பவர்களும் 'மீடிய'த்துக்குச் செய்தியனுப்ப மின்சாரச் சாதனங்களை உபயோகித்தார்கள்.

ஹெல்லர் என்பவர் மறைவாகத் தந்திக் கருவி ஒன்றைத் தாம் வேடிக்கை காட்டும் இடத்தில் அமைத்திருந்தார். அவர் உடம்பிலிருந்து செல்லும் சில மின்சாரக் கம்பிகள் கீழே இருந்த விரிப்பிலுள்ள கம்பிகளோடு இணைந்து நாடக அரங்கின் தந்திக் கருவிக்குச் சென்றன. இதே மந்திரவாதி ஒரு சிறிய பாக்கெட் ரேடியோவையே இதற்காக உபயோகித்தார். மந்திரவாதியிடம் உள்ள 'அனுப்பும் செட்' இவர்கள் பேச்சை வாங்கி அவ்விடத்தில் உள்ள 'மீடிய'த்தின் 'கேட்கும் செட்டு'க்கு அனுப்ப, அவர் அந்த விஷயத்தைத் தெரிந்துகொள்வார். காது கேட்கப் பயன்படும் கருவி போல இந்த 'வாங்கும் செட்' அமைந்திருக்கும்.

எல்லாரையும் திகைக்க வைக்கும் இன்னொரு தந்திரமும் இருக்கிறது. இதைத் "தசைநார் உணர்ச்சி" (Muscle reading) என்பார்கள்; 'ஹெல்ஸ்ட்ராமிஸம்' (Hellstromism) என்றும் இதைச் சொல்வதுண்டு.

"மன்ஹாட்டன் தீவில் எங்கே ஒரு பொருளை ஒருவர் ஒளித்து வைத்தாலும் நான் கண்டுபிடித்து விடுவேன்" என்று சில நாளைக்கு முன் மனோசக்தி நிபுணர் ஒருவர் நியூ யார்க்கில் சொன்னார்.

"நாளைய தினம் நான் ஒரு மூன்று செண்ட் தபால் தலையை

ஒளித்து வைக்கிறேன். நீங்கள் மட்டும் அதைக் கண்டுபிடித்து விட்டால் உங்களுக்கு ஈடே இல்லை; ஒரு டாலர் தந்து விடு கிறேன்'' என்று ஒரு பத்திரிகை நிருபர் அவரோடு பந்தயம் போட் டார்.

''கண்டுபிடிப்பதோடு மட்டும் அல்ல; உங்களுடைய ஒரு டால ருக்கு எதிராக, 'நான் தவறமாட் டேன்' என்று பத்தாயிரம் டாலர் பந்தயம் கட்டுகிறேன்'' என்றார் நிபுணர்.

'டைம்ஸ் ஸ்குவயர்' என்ற இடத் தில் மறுநாள் இருவரும் சந்தித்தார் கள். நிபுணர் வாடகை மோட் டார் ஒன்றைக் கூப்பிட்டார். இருவரும் அதில் ஏறிக்கொண் டார்கள். தாம் கையில் சுருட்டி வைத்திருந்த ஒரு கைக் குட்டையை நீட்டிய நிபுணர் அதன் ஒரு முனையைப் பிடித்துக்கொள் ளும்படி நிருபரிடம் சொன்னார். தாம் மற்றொரு முனையைப் பிடித் துக்கொண்டார். ''இதன் மூல மாக நான் உங்கள் எண்ணங்களை அறிய முடியும்'' என்றார் நிபுணர்.

டைம்ஸ் ஸ்குவயர் வட்டத்தைச் சுற்றி வரும்படி அவர் டிரைவ ரிடம் சொன்னார். திடீரென்று அவர் குறிப்பிட்ட ஒரு திசையை நோக்கி ஓட்டச் சொன்னார். 'வால் ஸ்ட்ரீட்' என்ற இடம் வந்தவுடன் வண்டியை எதிர்முக மாகத் திருப்பச் சொன்னார். சில கட்டிடங்கள் தாண்டியவுடன் வண்டியை நிறுத்தச் சொல்லி இரு வரும் கைக்குட்டையைப் பிடித்த படியே இறங்கினார்கள். ஒரு விநாடி அவர் தயங்கினார். பிறகு அவர் நிருபரை அழைத்துக் கொண்டு ஒரு குறுக்கு வீதிக்குப் போனார். பிறகு கிழக்கு முகமாக ஆற்றை நோக்கிச் சென்றார்.

அவர்கள் ஒரு ஹோட்டலைத் தாண்டிச் சென்றார்கள். மறுபடி ஒரு விநாடி அவர் தயங்கினார். பிறகு திரும்பி வந்து ஹோட்டல் கதவைத் திறந்துகொண்டு உள்ளே போனார். மூன்று முறை ஹோட் டலைச் சுற்றி வந்தார்கள். பிறகு அங்கே வேலை செய்யும் ஒரு பெண் ணிடம் சென்றார். அவள் லேசா கப் புன்னகை பூத்தாள். ஒரு நிமிஷ நேரம் நிபுணரும் நிருபரும் அவளையே பார்த்துக்கொண்டு நின்றிருந்தார்கள். பிறகு, ''நான் கேட்பது வழக்கத்துக்கு விரோத மானதுதான். என்றாலும், வெட் கப்பட வேண்டாம். உங்கள் ஆடையை முழங்கால் வரை தூக்க முடியுமா?'' என்று கேட்டார்.

ஹோட்டலில் இருந்தவர்கள், 'இது ஏதோ ஒரு பைத்தியம்' என்று எண்ணினார்கள். அந்தப் பெண் அவர் கேட்டபடியே ஆடையை மெதுவாக உயர்த்தினாள். அங்கே ஸ்டாக்கிங்குக்கு ஓர் அங்குலம் மேலே ஊதா நிறமான அமெரிக்க மூன்று செண்ட் தபால் தலை ஒன்று இருந்தது.

திகைத்துப்போன நிருபர் தம் பர்ஸைத் திறந்து ஒரு டாலரை எடுத்துப் பேசாமல் நிபுணருக்குக் கொடுத்துவிட்டார்.

இது நம்ப முடியாததாகத் தோன்றினாலும் இதற்கு விளக்கம் இருக்கிறது. ஒருவர் மனத்தில் உள்ளதைத் தசை நார்களின் துடிப்புக் காட்டிவிடும் என்பது மனத்தத்துவ சாஸ்திர உண்மை. இதை 'ஐடியோ மோட்டார் ஆக் ஷன்' (Ideomotor Action) என் பார்கள். ஏதாவது ஒரு பொருளை நீங்கள் ஓர் அறையில் ஒளித்து

வைத்துவிட்டால், நான் தேடும் போது உங்கள் கண்கள் கடைசியில் அதன் இருப்பிடத்தைக் காட்டி விடும். ஒளித்து வைத்த இடத்தைப் பார்க்க வேண்டுமென்ற உணர்ச்சி உங்களுக்கு இருந்துகொண்டே இருக்கும்; கொலைகாரன் ஒருவன் தான் கொலை செய்த இடத்துக்குத் திரும்பி வருவது போலத் தான் இதுவும். கைக்குட்டையின் ஒரு முனையை நீங்களும், ஒரு முனையை நானும் பிடித்துக் கொண்டிருந்தால் உங்கள் தசை நார்த் துடிப்புக்களை எல்லாம் உணர முடியும்.

1872-இல் ஜான் ராண்டால்ப் பிரௌன் என்ற ஒரு பத்திரிகைக் காரர் இந்தத் தசை நார்த் துடிப்பு ரகசியத்தைக் கண்டுபிடித்தார். ஒரு நாள் அவர் தம் காதலியின் கையைப் பிடித்துக்கொண் டிருந்த போது அவள் எங்கே போக விரும்புகிறாள் என்பது இந்தத் துடிப்பின் மூலம் அவருக்குத் தெரிந்தது.

சில நாளைக்கு முன் மனோசக்தி நிபுணர் ஒருவர் சில பத்திரிகைக் காரர்களிடம் காலைத் தினசரி ஒன்று அச்சாகி வெளிவரும் முன்னமே அதன் முக்கியத் தலைப்பைச் சொல்வதாகச் சொன்னார். அவர்கள் அந்தப் பந்தயத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

நிபுணரின் மாலை ஒலி பரப்புக்குச் சற்றுமுன் அவரை அந்தப் பத்திரிகைக்காரர்கள் ரேடியோ ஸ்டேஷன் அறை ஒன்றில் சந்தித்தார்கள்.

நிபுணர் ஒரு சீட்டில் தாம் சொல்வதாகச் சொன்னதை எழுதி மடித்து அங்கே வந்திருந்த ஸ்மித் என்ற ஒருவரிடம் கொடுத்து வைத்தார்.

பிறகு பத்திரிகைக்காரர்களில் ஒருவர் பத்திரிகை ஆபீசுக்கு டெலிபோன் செய்து முதல் பக்கத் தலைப்பைக் கேட்டார்.

"ஐயாயிரம் துறைமுகத் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்தார்கள்" என்று தகவல் வந்தது.

நிபுணர் ஸ்மித்தைக் கூப்பிட்டு, "நான் எழுதியதைத் தயை செய்து அப்படியே படியுங்கள்" என்றார்.

ஸ்மித் கவரை உடைத்துச் சீட்டை எடுத்து, "நீங்கள் எழுதிய ஒவ்வொரு வார்த்தையும் சரி" என்று படித்தார்.

"நன்றி" என்று சொல்லி விரைவில் சீட்டை ஸ்மித்திடமிருந்து நிபுணர் பிடுங்கிக்கொண்டு பத்திரிகைக்காரர்களிடம் நீட்டினார். அவர்களால் தங்கள் கண்களையே நம்ப முடியவில்லை.

நடந்தது இதுதான்: நிபுணர் ஸ்மித்திடம் எழுதிக் கொடுத்ததற்கும் பத்திரிகைத் தலைப்புக்கும் சம்பந்தமே இல்லை. டெலிபோன் மூலம் கேட்டதை நிபுணர் தம் ஜேபியிலிருந்த குறிப்புப் புத்தகத்தில் எழுதிக்கொண்டார்.

ஸ்மித்தைப் படிக்கச் சொன்ன போது அதில் எழுதியிருந்ததை- "நீங்கள் எழுதிய ஒவ்வொரு வார்த்தையும் சரி" என்பதை- அப்படியே படித்தார். இது ஏதோ ஒரு வேடிக்கை என்று நினைத்தார் ஸ்மித். அவருக்கு விஷயம் என்ன என்று தெரியாது.

நிபுணர் ஸ்மித்திடமிருந்து சீட்டைப் பிடுங்கியபோது தம் ஜேபியில் இருந்ததை அதற்குப் பதிலாக மாற்றிப் பத்திரிகைக் காரர்களிடம் கொடுத்துவிட்டார்.

இப்படியே ஒவ்வொரு மனோசக்தி நிபுணரும் ஒரு தந்திரத்தைக் கையாளுகிறார்.

அந்தப் பூனை

சார்லஸ் டட்லி வார்னர்

இந்தக் கட்டுரையை எழுதியவர் பிரபல அமெரிக்க ஹாஸ்ய எழுத்தாளர். இவர் எழுதியிருக்கும் ஒரு புத்தகத்தில் இருக்கும் ஒரு கட்டுரையைத்தான் தமிழில் இங்கே சுருக்கித் தந்திருக்கிறோம்.

அந்தப் பூனை எங்கிருந்து வந்ததோ தெரியாது. ஆனாலும் வந்ததுமே அது எங்கள் குடும்பத்தோடு ஒன்றிவிட்டது. அது பெரிய பூனை; கம்பீரமாகச் சிறுத்தைபோல் இருந்தது. பழைய ரீதியில் அமைந்த தாழ்ப்பாள் என்றால் வெகு சுலபமாக அது திறந்துவிடும். அந்தச் சமயங்களில் அதைப் பார்க்க வேண்டும்; உயரமாகத் தோன்றும். அதற்குக் கால்வின் என்று பெயர் வைத்திருந்தோம். அதன் உடல் ரோமம் சற்றே நீலமாய் மெத்து மெத்தென்று இருக்கும். கழுத்துக்குக் கீழ் வயிற்றுப் பாகம் வெள்ளை வெளேர் என்று மிக மெல்லியதாக இருந்தது. அவ்வளவு சுத்தமான பிராணியைப் பார்த்திருக்கவே மாட்டோம்.

அதன் தலை பெரிய மனுஷர் பாணியில் அமைந்திருந்தது. காது சின்னதாகவும் ஒழுங்காகவும் இருந்தது. மூக்கில் சற்றே சிவப்பு நிறம் படர்ந்திருந்தது. முகம் மொத்தத்தில் லட்சணமாக இருந்தது. அதன் பார்வையிலிருந்தே அது கூர்மையான புத்தியுள்ள பிராணி என்று தெரிந்தது. ஏதோ சிற்சில சமயம் நூல் செண்டையோ, தன் வாலையோ தொட்டுத் தொட்டு தமாஷாகக் காலங் கழிக்கும். இதெல்லாங் கூடப் பிரமாதமல்ல அதற்கு. சில சமயம் சுண்டெலியோடு விளையாடும்; கடைசியில் அதைத் தப்பியோட விட்டுவிடும்.

குழந்தைகளை அது சட்டையே செய்யாது. மற்றப் பூனைகளைக் கண்டாலும் அதற்குப் பிடிக்காது. எப்போதாவது இரவு வேளைகளில் அக்கம் பக்கம் கொடி புதர்களில் பூனைகள் சத்தம் போட ஆரம்பித்தால் போதும்; அது சும்மா இராது. கதவைத் திறக்கச் செய்து வெளியே 'விர்' என்று பாயும். உடனே அந்தச் சத்தம் 'கப்சிப்' என்று அடங்கி அந்தப் பூனைகள் இருந்த இடந் தெரியாமல் ஓடிவிடும். அப்புறந்தான் கால்வின் கணப்பருகில் குளிருக்கடக்கமாக வந்து அமரும். அதற்குக் கோப தாபம் ஒன்றுமில்லை; வீட்டுக்கு அருகில் இந்த மாதிரி இரைச்சல் இருந்தால் அதற்குப் பிடிக்காது; அவ்வளவுதான்.

தன் உரிமையை எப்படியும் நிலை நாட்டிக்கொள்ளும் சாமர்த்தியம் அதற்கு உண்டு. இதில் நீனி விஷயமும் ஒன்று. வீட்டில்

என்ன என்ன பண்டம் உண்டு என்று அதற்கு மற்றவர்களைப் போலவே நன்றாகத் தெரியும். வான்கோழிக் கறி இருக்கிறது என்று தெரிந்தால் மாட்டிறைச்சியைச் சீந்தாது. ஆனாலும் நான் ரொட்டி சாப்பிடுவதைப் பார்த்தால் தானும் அதைச் சாப்பிடும். அதை வற்புறுத்தி ஒன்றும் சாப்பிடச் சொல்லக் கூடாது; அவ்வளவுதான்.



பேசமட்டும் தெரியாதே யொழிய மற்றப்படி கால்வின் எது வேண்டுமானாலும் செய்யும்; அவ்வளவு சூட்சும சத்தி உண்டு அதற்கு. சில சமயம் பேசும் பாவனையாக முகத்தை வைத்துக் கொள்ளும்; அப்போது 'நம்மால் பேச முடியவில்லையே' என்று அது பரிதாபமாகப் பார்ப்பது நமக்கு நன்றாகத் தெரியும்.

இயற்கைக் காட்சிகளைக் கண்டால் அதற்கு மிகவும் பிடிக்கும். ஜன்னல் கட்டையண்டை உட்கார்ந்து அது தூரத்திலுள்ள மரங்களையும் மலைகளையும் ஊன்றிக் கவனித்துக்கொண்டிருக்கும். தோட்டத்தில் என்னோடு உலாவுவதென்றால் அதற்கு வெகு மகிழ்ச்சி. அப்போது பறவைகள் பாடுவதையும் மண்ணின் மணத்தையும் இளவெயிலையும் ரசித்துக்கொண்டே பசும் புல்லின்மேல் நாய் போல் துள்ளித் துள்ளி விளையாடிக் கொண்டு வரும். புயல் அடிக்கும் சமயங்களில் ஜன்னலருகில் உட்கார்ந்து மழையும் பனியும் பொழிவதை மேலுங் கீழும் பார்த்துக் கொண்டேயிருக்கும்.

அது எப்போதுமே சற்று ஒதுங்கித்தான் இருக்கும். ஆனாலும் நான் பெயரிட்டுக் கூப்பிட்டுக் கை நொடித்தால் என்னிடம் வரும். இரவு வேளைகளில் நான் வீடு திரும்பும்போது அது எனக்காக வாசற்படியண்டை காத்திருக்கும்; இருந்தாலும் தற்செயலாக அங்கே வந்ததுபோல நடைப்பாதையில் உலாவும். அதற்குக் கூச்சம் அதிகம்; உணர்ச்சியை வெளிக் காட்டிக்கொள்ளாது. அதைப் பார்த்ததும் எல்லாருக்குமே உள்ளூற மகிழ்ச்சி ஏற்படும்.

எப்போதுமே கவுரவத்தை விட்டுக் கொடுக்காமல் நடக்கும். வெளியே போக வேண்டுமென்றால் கதவைத் திறக்க வைத்துப் போய் விட்டுத்தான் திரும்பும். ஜன்னலண்டை நின்றுகொண்டு அது ஆகாயத்தைக் கவனிப்பதைப் பார்க்க வேண்டும்; குடையைப் பிடித்துக்கொண்டு கிளம்பலாமா, வேண்டாமா என்று யோசிப்பது போல் இருக்கும். இன்னுங்கூட அந்தக் காட்சி மனத்தை விட்டுப் போகவில்லை.

மனிதர்களைக் கண்டால் பழகாது, பிடிக்காது என்று சொல்வதற்கில்லை. ஆனால் பிறர் தம் மடியில் தன்னை உட்கார வைத்துக் கொஞ்சிச் சீராட்ட அது இடங்



கொடுக்காது. என் எதிரே உட்கார்ந்து சில சமயம் என் கோட்டையும் சட்டையையும் இழுத்துவிட்டு என் முகத்தில் தன் மூக்குப் படும்படி சற்று நேரம் இருந்துவிட்டு இறங்கிப் போய் விடும்.

காலை வேளைகளில் என் அறைக்கு வந்து மேஜைமேல் நான் எழுதுவதை மணிக்கணக்காக உட்கார்ந்தபடி பார்த்துக்கொண்டிருக்கும்; அப்படியே அந்தக் காகிதம், மசிக்கு நடுவே கண்ணயர்ந்து விடும்.

என் மனைவி ஊரில் இல்லாவிட்டால் கால்வின் எங்கள் படுக்கையின் தலைமாட்டண்டை வந்து என்னை உற்றுப் பார்க்கும். நான் எழுந்ததும் அதுவும் கூடவே நடந்து வரும்; பல விதத்தில் தன் அன்பைக் காட்டும். அப்போது அது பார்க்கும் பார்வை, "அவள் போய்விட்டாள் என்று எனக்குத் தெரியும். ஆனல் நான் தான் இருக்கிறேனே; என் கவலை?" என்று கேட்பதுபோல் இருக்கும்.

கால்வின் இயற்கையோடு ஒட்டி வாழும் பிராணி. பசிக்கும் போதுதான் அது எதாவது சாப்பிடும். உறக்கம் வந்தால்தான் தூங்கப்போகும். வெயில் காலத்தில் எங்கள் தோட்டத்தில் சுற்றி அலைந்து பசும்புல்லில் சாய்ந்திருக்கும்.

அதைச் சோம்பேறி என்று யாருமே சொல்ல முடியாது. சமயத்தில் சற்று ஓய்வு எடுத்துக்கொள்ளவும் அதற்குத் தெரியும். நல்ல பழக்க வழக்கமும், இருப்பதைக் கொண்டு திருப்தி அடையும் சுபாவமும் உண்டு. என் அறைக்குள் நுழைந்து என் நாற்காலியில் அமர்ந்து வாலைக் கம்பீரமாகக் காலருகில் வளைத்துக்கொண்டு அது உட்காரும்போது பார்க்க வேண்டும்; அதன் அழகிய முகத்தில் எவ்வளவு ஆனந்தம் தெரியுமோ? மற்றப் பூனைகளைப்போல் கண்டபடி இரைச்சல் இடவே இடாது. எப்போதாவது தனக்கு எதாவது வேண்டும்போல் இருந்தால் வாயைத் திறந்து மெதுவாகச் சத்தம் செய்யும்; இரையவே இரையாது. தனக்குப் பிடித்தவர்களைக் கண்டால் எவ்வளவு திருப்தி என்று அதற்குச் சொல்லத் தெரியாவிட்டாலும் மெதுவாகச் சத்தம் செய்து அதைத் தெரிவிக்கும்.

ஒரு நாள் அதற்குப் பசி இல்லாமல் உள்ளுக்குள் ஏதோ அலட்டி எடுத்தது, பாவம். இருந்தாலும் மிகவும் கம்பீரமாகவும் அமைதியோடும் அதைப் பொறுத்துக் கொண்டிருந்தது கால்வின். இப்படிச் சில நாள் இருந்த இடத்தைவிட்டு நகராமல் உட்கார்ந்திருப்பதும் படுத்திருப்பதுமாகக் கழித்தது. எங்கள் ரத்தினக்கம்பளம் ஒன்றில் சற்றுப் பளிச்சென்று இருக்கும் பாகத்தில் அது, வெயில் படும் இடம் பார்த்து இப்படி விழுந்து கிடக்கும், பாவம்! அப்போது தன் அருகில் நாங்கள் யாராவது வந்து கவனித்தால்

மெதுவாக முன்போல் அன்போடு சத்தம் செய்யும். அப்போது அதன் முகபாவம், "உங்களுக்கெல்லாம் என்னைக் கண்டால் 'ஐயோ பாவம்' என்றுதானே இருக்கிறது? எனக்கும் தெரியும். ஆனால் என்ன செய்வது?" என்று கேட்பதுபோல் இருக்கும்.

ஒரு நாள் காலை, பொழுது புலர்ந்ததும் அது அந்த ரத்தினக் கம்பளத்தைவிட்டு எழுந்து புழைக் கடைக்குப் போய் ஒவ்வொரு செடியாகப் பார்த்துக்கொண்டே வந்தது. அப்போது மிகவும் இளைத்துத் துரும்பாகியிருந்தது. கடைசியில் போஜன அறையின் ஜன்னலண்டை வந்து எதிரே பழுப்பாக விளங்கும் வயல்களையும் முன்புறத் தோட்டத்தையும் நெடு நேரம் பார்த்துக்கொண்டிருந்தது. பிறகு பழைய ரத்தினக் கம்பளத்தில் போய்ப் படுத்துக்கொண்டது; அவ்வளவுதான். அப்படியே அமைதியாக இறந்துவிட்டது.

எங்கள் தோட்டத்தில் இரட்டையாக வளர்ந்திருக்கும் ஹாதார்ன் மரத்தடியில் வெயில் காலத்தில் பறவைகள் பாடுவதைக் கேட்டுக்கொண்டே காலவின் படுப்பது வழக்கம். அந்த இடத்திலேயே அதைப் புதைத்தோம்.

விநோத வரவேற்பு

யாராவது விருந்தாளிகள் தம்மைத் தேடி வந்தால் தென் அமெரிக்காவிலுள்ள பிரேஸில் பகுதியில் வசித்து வந்த துபிஞம்பா என்ற சிவப்பிந்தியர்கள் கண்ணும் கண்ணீருமாக அவர்களை வரவேற்பார்களாம்.

"விருந்தாளி தங்கள் குடிசையில் நுழைந்ததும் வீட்டுப் பெண்டுகளெல்லோரும் அன்போடு அழைத்து 'ஓ' என்று அழத் தொடங்குவார்கள். நடுநடுவே இதுவரை தங்கள் குடும்பத்தில் இறந்துபோன உறவினர்களின் பெயரைச் சொல்லிப் பிலாக்கணமும் பாடுவார்கள். வந்திருக்கும் விருந்தாளியும் அழுதாக வேண்டும். இந்த அழுகையெல்லாம் ஒரு விதமாக ஓய்ந்ததும் குடும்பத்திலுள்ள ஆண்கள் வந்தவரை உபசரிப்பார்கள். ஊரைச் சேர்ந்த ஆசாமி யாராவது கொஞ்ச நாள் ஊரை விட்டுப் போய்த் திரும்பி வந்தால்கூட இப்படித்தான் வரவேற்பார்கள்! ஊர்த் தலைவர்கள் வயல் வெளிக்கு உலாவப் போய்விட்டுத் திரும்பி வந்தால் போதும்; இதே வரவேற்புத்தான்!" என்று அவர்கள் சம்பந்தமாக ஆராய்ந்த டாக்டர் ஆல்ஃபிரெட் மெட்ராக்ஸ் என்பவர் எழுதியிருக்கிறார்.

இப்போது இந்த ஜாதியே அடியோடு அழிந்துவிட்டதாகத் தெரிகிறது.

—'ஸயின்ஸ் டைஜெஸ்ட்'

பத்து லட்சம் ஆண்டுக்குப் பின்

—சார்லஸ் காலடன் டார்வின் கனவு—

உலகில் பல அறிஞர்கள் வருங்கால உலகத்தைத் தம் கற்பனைக் கண்ணால் கண்டு அரிய நூல்கள் பலவற்றை எழுதியிருக்கிறார்கள். அவை ஒரே கருத்துடையனவாக இராவிட்டாலும் அவற்றின் கற்பனைத் திறன் நம் மனத்தைக் கவர்கிறது. அவற்றை நமக்குத் தமிழில் தொடர்ந்து விளக்கிவருகிறார் அன்பர் **ரா. ஸ்ரீ. தேசிகன்.**

வானவில்லை நிகர்த்த ஒளிச் சிறப்பை யுடைய இன்ப உலகத்தை மனிதன் சித்திரித்துப் பார்க்கலாம்; அல்லது இருள் செறிந்த நரகம் போன்ற உலகத்தை அவன் நம் முன் எழுப்பலாம். எந்தத் திசையிலும் அவன் தன் கற்பனைக் குதிரையின் லகானைத் தளர்த்தி அதைச் செலுத்தலாமல்லவா?

சுவிஃப்ட் (Swift) எழுதிய 'கலிவரின் யாத்திரைகள்' (Gulliver's Travels) என்ற நூலில் மனிதன் விலங்கைவிட இழிந்த தன்மை உள்ளவன் என்ற உண்மை வலியுறக் காண்கிறோம். அவரவர் கற்பனைக்கேற்றவாறு அவரவர் கற்பனை உலகங்களும் காட்சி அளிக்கும் என்பதில் வியப்பில்லை.

1952 - ஆம் ஆண்டின் தொடக்கத்தில் வெளியான, '10 லட்சம் ஆண்டுகளுக்கப்பால்' (The Next Million years) என்ற நூலைப் படிப்போர் உள்ளத்தில் ஒரு சோக உணர்ச்சிதான் பெருகும்.

இந்த நூலின் ஆசிரியர் சார்லஸ் கால்டன் டார்வின் (Charles Galton Darwin). இந்த நூல் நம் அறிவுக்கு மிக விசித்திரமாகத் தோன்றலாம். வெல்ஸ் காண்கிற கற்பனை உலகத்தை இதில் காண இயலாது; உண்மையே. ஆனாலும் துணிச்சலான தர்க்க ரீதியில் ஒழுங்கான சங்கிலிப் பிணைப்பில் விரைந்து செல்லுகிற இவர் அறிவு ஓட்டம் இன்பமளிக்கும் என்று ஒரு விமரிசனப் புலவர் கூறுகிறார்.

"மனத்தளர்வா? இதைப் படிக்குந்தோறும் எத்தனையோ ஆண்டுகளுக்கப்பால் வரும் விஷயங்களைப் பற்றி நாம் மனத் தளர்வு அடைய வேண்டாம். ஆனால் இந்த நூல் மனத்தளர்வை அளிக்கிறதோ இல்லையோ, அதைப்பற்றிக் கவலைப் பட வேண்டாம். இந்த நூலாசிரியரின் எதிர்காலச் சிந்தனை நம் உள்ளத்தைக் கவராமற் போகாது" என்று மற்றொரு விமரிசனப் புலவர் சொல்லியிருக்கிறார். "இறுதியில் இன்பமா, துன்பமா? எதையும் சொல்லுவதற்கில்லை. எனக்குத் தோன்றுகிறதைச் சொல்லிவிடுகிறேன். பெரும்பாலும் துன்பத்தில்தான் நாம் உழலுவோம். ஆனால் சிந்தனை யாத்திரை செய்யத்தானே வேண்டும்?" என்று இவர் தம் புத்தகத்தை முடிக்கிறார். இந்தப் புத்தகத்தின் தொடக்கத்தில் ஆசிரியர் ஜனத் தொகையைப் பற்றிக் கூறுகிறார். இது சம்பந்த

மான கேள்வியை முதல் முதலில் எழுப்பியவர் மால்தூஸ் (Malthus) என்ற பொருளாதார ஆசிரியரே. உலகத்திலுள்ள உணவை விட ஜனத்தொகை மிகுதியாகி விட்டால் என்ன செய்கிறது என்ற சிந்தனையில் அவர் ஆழ்ந்தார். உணவோ 1,2,3 என்ற கணக்கு (Arithmetic) முறையில் விரிவடைகிறது; ஆனால் ஜனத்தொகையோ 1,3,9 என்ற க்ஷேத்திர கணித (Geometry) ரீதியில் ஒரே பாய்ச்சலாய் விருத்தி அடைகிறது. இதற்கென்ன செய்வது? உணவில்லாமல் மக்கள் தவிப்பார்களே என்ற துயர் அவரை அரிக்கத் தொடங்கியது. அதற்கு அவரே சமாதானம் கூறலானார். "வெம் போர்களாலும் கடும் பூகம்பங்களாலும் கொடிய வியாதிகளாலும் பல்லாயிரக்கணக்கான மக்கள் மாய்வதால் பூபாரம் தீரும். ஆனால் விஞ்ஞான வளர்ச்சியால் மருந்துத் துறைகளில் அபூர்வமான விளைவுகள் ஏற்பட்டு விட்டன. விஷக்கிருமிகளோடு வெற்றிகரமாகப் போராடவும் தொடங்கி விட்டார்கள் அறிஞர்கள். அதனால் மனிதனுடைய ஆயுள் நீடிக்கத்தானே செய்யும்? அப்பொழுது ஜனத்தொகை குறையாமல் விருத்தி அடைந்துகொண்டுதானே போகும்? ஆனால் விஞ்ஞான வளர்ச்சியால் உணவையும் பல முறைகளில் அதிகப்படுத்தலாமல்லவா? எப்படிச் செய்தபோதிலும் ஜனத்தொகை அதிகமாகப் போய்விடும் என்று பல அறிஞர்கள் அஞ்சுகிறார்கள். கர்ப்பத்தடை மூலமோ, மலடாக்கும் முறையிலோ, ஜனத் தொகையை மேலே ஓங்க விடாமல் செய்யலாம்.

"உதாரணமாக, பிரான்ஸில் ஜனத்தொகை குறைந்து வருகிறது. ஆனால் அது போதுமா? மற்ற நாடுகளிலும் குறைந்தால்தானே அது நன்மையை அளிக்கும். ஜனத்தொகை சம்பந்தமாக உலகத் திட்டம் ஒன்று அமைத்தால்தான் சமாளிக்க முடியும். இல்லாவிடின் வறுமையாலும் பட்டினியாலும் உலகம் துன்புறும்" என்று டார்வின் வாதிக்கிறார். உலகத்தில் ஏற்பட்ட நான்கு புரட்சிகளைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். முதல் முதலில் தீயைக் கண்டு பிடித்தார்களே, அது மனித சமுதாயத்தில் ஒரு பெரும் புரட்சியை எழுப்பியிருக்க வேண்டும். தீயின் பெருமையை என்னவென்று சொல்லுவது? அதன் அபூர்வ சக்திகளை வேதங்கள் போற்றிக் கானம் செய்கின்றன. "மற்றப் பொருள்கள் யாவும் இளமையை இழந்துவிடுகின்றன. தீ ஒன்றுதான் தன் இளமையில் குன்றுகிறதில்லை. அதன் முகத்தில் காலக்கோடு படர்கிறதில்லை" என்று மாக்ஸ் பீர்பாம் (Max Beerbohm) தம் 'தீ' என்ற அழகான கட்டுரையில் எழுதியிருக்கிறார். தீ நமக்குப் பல உணவுகளைப் பக்குவப்படுத்தித் தருகிறது. தீயின் பேருதவியைக் கொண்டு கடுங் குளிர் நாடுகளிலும் மனிதன் இன்பமாய் வாழமுடியும்.

வேளாண்மையைக் கண்டு பிடித்தார்களே; அதுவும் ஒரு பெரும் புரட்சிகரமான சம்பவமே. வேட்டையாடிப் பிழைக்கும் ஜனங்களின் பிழைப்பு ஓர் ஒழுங்கான பிழைப்பல்ல. வருங் காலத்தைப் பற்றி அவர்களுக்குக் கவலை இல்லை. விவசாயிகளோ முன்னும் பின்னும் யோசித்துத் தம் தொழிலை நடத்துகிறார்கள். நாளைக்கு வேண்டியதை இன்றே தேடிக்கொள்கிறார்கள். இதனால் பசிப் பிணி அகன்றது;

ஜனங்களும் விருத்தி அடைந்தார்கள். நகரத்தில் சேர்ந்து வாழ்கிற தன்மை ஏற்பட்டது. அதுவும் ஒரு புரட்சிதான். கிராமங்களிலிருந்து நகரத்துக்கு மக்கள் போகத் தொடங்கினார்கள். சேர்ந்து வாழ்வதற்கு ஒரு மனப் பண்பு வேண்டுமே; நகரத்திலிருந்துதான் நாகரிகம் என்ற சொல்லும் பிறந்திருக்கிறது.

கடைசியாக எழுந்த புரட்சி விஞ்ஞானத்தால் நிகழ்ந்தது. அதன் நடுவே நாம் வாழ்கிறபடியால், அதன் நன்மையை முழுவதும் உணராமல் இருக்கிறோம். விரிவாகக் காட்சி அளித்த இவ்வுலகம், விஞ்ஞானத்தின் விளைவால் சுருங்கிவிட்டது. 'நாகரிகம் என்ற சொல் நகரத்தோடு நிற்காமல் எங்கும் பரவிவிட்டது. அந்தக் காரணத்தினாலேயே நாகரிகம் என்ற சொல்லுக்குப் பதிலாக வேறொரு சொல்லைக் கண்டுபிடித்தால் நலமாக இருக்கும்.

"விஞ்ஞானப் புரட்சிக்குப் பிறகு வேறு புதிதான புரட்சி ஏற்படுமா?" என்ற கேள்வியை இவர் கேட்டுக்கொண்டு அதற்கு விடையையும் தருகிறார். "கால கர்ப்பத்தில் இனித் தோன்றும் புரட்சிகளைப்பற்றிய சர்ச்சைகள், வெறும் அநுமானங்களும் கற்பனைகளுமாகும்" என்கிறார்.

மேலும், "சூழ் நிலையைப் பொறுத்தது மனிதனின் வாழ்வு. சூரியன் நாளுக்கு நாள் குளிர்ந்து கொண்டே வருகிறான். போதுமான வெப்பம் இல்லாத நிலையில் உலகம் குளிரில் விறைத்து மாய்ந்து போய்விடலாம்; அல்லது ஓர் இருண்ட நட்சத்திரம் சூரிய மண்டலத்தின்மீது மோதி, உலகமே இருந்த இடம் தெரியாமல் போய்விடக்கூடும். மேலும், பல்லாயிரம் நூற்றாண்டுகளாகப் பூமியின் அடியில் சேர்ந்து கிடக்கும் சக்திகளும் குன்றிக்கொண்டே வருகின்றன. பூமியிலுள்ள நிலக்கரி, எண்ணெய் இவைகள் எத்தனை நாட்களுக்கு வரும்? புதிய முறைகளில் சக்திகளை உண்டுபண்ண வேண்டி வரும். செயற்கை முறையில் மழையைப் பெய்விக்கும்படி செய்ய வேண்டிய ஆற்றல் மனிதனிடத்தில் இராமல் இல்லை. பூமியிலுள்ள உஷ்ண சக்தியை மனிதன் பயன்படுத்திக் கொள்ளலாம். இத்தாலியில் இந்த முறையைக் கையாள்கிறார்கள். பருவ அலைகளையும் பருவக் காற்றுக்களையும் மனிதனுக்கு ஊழியம் செய்யும்படி செய்துவிடலாம். சகாரா பாலைவனத்தில் எப்பொழுதும் சூரிய கிரணங்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம். புல் பூண்டுகளிலிருந்து செயற்கை முறையில் உணவைச் சேகரிக்கக் கூடும். அணுச் சக்தியையும் நல்ல வழியில் பயன்படுத்திக்கொள்ளலாம். எப்படியோ மனிதன் தப்பிப் பிழைக்க வேண்டும். மனிதன் எந்த நிலையிலும் வாழ முயலுவான். தனித்த மனிதனும் வாழ வேண்டும். சமுதாயமும் வாழ வேண்டும். மிருகங்கள் வேகத்திலும் வடிவத்திலும் அமைதியிலும் சேர்ந்து வாழ்வதிலும் நீண்ட நாள் வாழ்வதிலும் மனிதனை வென்று விடுகின்றன. ஆனால் மனிதனுடைய தனித்த பெருமை அவன் அறிவிலும் பேச்சிலும் வேரூன்றி நிற்கிறது" என்று ஜோட் (Joad) கூறுகிறார். இது நல்லது, இது கெட்டது என்று பகுத்தறியும் ஒழுக்க உணர்ச்சி மனிதனிடத்தில் இருக்கிறது. அழகுக் கலையும் அவனிடத்தில் திகழ்கிறது. தன்

பெற்றோர்களிடமிருந்து பெற்ற உடல் நலத்தால் மட்டும் அவன் ஜீவிக்கவில்லை. அவனுடைய அறிவேதான் தக்க கருவியாகும். மேலும், மனிதனுக்கு ஏதாவது ஒரு கொள்கை வேண்டும். அந்தக் கொள்கைதான் அவனுக்கு ஒரு பாதை வகுத்துத் தரும். அந்தக் கொள்கை பரம்பரையாக வருகிற அறத்தைப் பின்பற்றி நிற்கலாம். மனித மாமிசத்தை ஐரோப்பியர்கள் உண்ண மாட்டார்கள்; முகம்மதியர்களும் அதைத் தொட மாட்டார்கள். சீன தேசத்தில் அதை விரும்புகிறார்கள். பன்றியின் மாமிசத்தை முகம்மதியர் அருவருப்போடு நோக்குவார்கள். உணவிலேமட்டும் இத்தகைய உணர்ச்சி தோன்றுகிறதில்லை. தெய்வ வழிபாட்டிலும் சரி, தியாக உணர்ச்சியிலும் சரி, தேச சேவையிலும் சரி இது பிறக்கிறது. வருங் காலத்துக்கு மிகப் பயன்படுவது ஏதாவது ஒரு கொள்கையாகும். சமுதாயத்தில் கொள்கையின் முக்கியத்துவத்தைத் துருவி ஆராய்ந்த பிறகு மனிதனுடைய இயல்பைப்பற்றி டார்வின் சித்திரிக்கிறார். மற்றப் பிராணிகளைச் சாதுவாகப் பழக்கிவிடலாம். மனிதனே ஒரு வரம்புக்கு அடங்காத பிராணி. ஓர் எறும்புக் கூட்டம் போல அவன் வாழ்க்கை நடத்த விரும்பவில்லை. ஒரே பாதையில் போகிற இனம் ஒரு புதிய மாறுதல் உலகத்தில் தோன்றும்படி செய்யாது. மனிதனின் அடங்காத தன்மைதான் புதிய துறைகளை வகுக்கப்பயன்படுகிறது. 'எக்ஸ்-ரே' மூலம் கருவில் மாறுதல் உண்டுபண்ணி, நமக்குத் தேவையான மேதாவிகளைத் தோன்றும்படி செய்யக் கூடும். இதே கருத்தைத் 'துணிச்சலான புதிய உலகம்' (Brave New World) என்ற புத்தகத்தில் ஆல்டோஸ் ஹக்ஸ்லி குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் ஒரே அச்சிலே தன்னை வார்க்கும் முயற்சியை மனிதன் வெறுக்கிறான். அவன் அடங்காத தன்மை அவன் சிருஷ்டி சக்தியைத் தூண்டுகிறது. வருங் காலத்தில் ஆபத்து விளைவிக்கக் கூடியது ஜனத் தொகைதான். அதை எப்படி வேண்டிய அளவுக்கு வைத்துக்கொள்ளுவது என்பதுதான் மனிதன் முன் எழும் வினவாகும். குழந்தைகளைக் கொன்று விடுவதா? அது மனத்துக்கு வெறுப்பைத் தருமே. கொடிய பாதகமாயிற்றே! சுவிஃப்ட் துயரம் கலந்த ஒரு கிண்டல் செய்கிறார். அப்போது அயர்லாந்தில் குழந்தைகள் வறுமையால் கஷ்டப்பட்டார்கள். "அதற்கு மிதமான பரிகாரம் சொல்கிறேன் கேளுங்கள்: குழந்தைகளைத் துண்டு போட்டு ஆகாரமாய்ச் சமைத்து விடுங்கள். ஆகாரத்துக்கு ஆகாரம், குழந்தைகளின் வேதனையும் தீரும்" என்று சொன்னாராம்! இனி வரும் போர்கள் சாதாரணப் போர்களல்ல. ஜனத்தொகையைப் பற்றிய கேள்வி ஒரு நாட்டை மட்டும் சார்ந்ததல்ல. உலகப் பிரச்னையாக அது மாறும் என்பதில் ஐயமில்லை. உலகச் சட்டங் கொண்டே அந்த நெருக்கடியை அகற்ற வேண்டும்: ஏதோ ஒரு திடமான கொள்கைமீதுதான் சமுதாயத்தை அமைக்க வேண்டும் என்ற பல்லவியை டார்வின் தம் புத்தகம் முழுதும் பாடி வருகிறார். இவர் பாடும் பல்லவியில் உண்மை இராது போகவில்லை. மனிதனின் இன்பப் பாதையைப்பற்றிய நீண்ட சிந்தனையில் இவர் ஆழ்கிறார். இன்

பம் துய்ப்பது அவரவர் சக்திக்குக் கீழ் அடங்கியிருக்கிறது. உயர்ந்த எண்ணங்கள் நிறைவேறவில்லையே என்ற குறை எழலாம். ஆனால் அழுக்காறுதான் எல்லா வகைத் துன்பங்களுக்கும் வேராக இருக்கிறது. சான்றோர்களுக்கு இலக்கணம் வகுக்கும்பொழுது அழுக்காறு இல்லாத தன்மையைப் பற்றித்தான் வற்புறுத்திப் பேசுகிறார்கள் மாசில் காட்சியவர். அழுக்காறு அடையக் கூடாது என்று வள்ளுவர் உபதேசம் செய்கிறார். ஆனால் அது எத்தனை தூரம் வேரூன்றி யிருக்கிறது என்பதை அவரே தான் சொல்ல முடியுமோ? எல்லாம் தன் கை, கால், உடல் தலை என்று பாவிக்கிற ஓர் உத்தமனுக்கே அது சாத்தியமாகும்.

மேலும், எப்போதுமே இன்பம் நிலவும் நாட்டிலும் மனிதன் அதிருப்தி அடைவான். எந்த உணர்ச்சியையும் மனிதன் நீடித்து நுகர முடியாதல்லவா? பட்லர் சித்திரித்த நாட்டின் தன்மை நமக்கு நினைவு வருகிறது. "ஆசைகள் உண்மையாகி நிறைவேறி விடும் என்பதில் மனிதன் இன்புற முடியாது. முதலில் நிறைவேறாது போனாலும் பிறகு நிறைவேறும் என்பதில்தான் இன்பம் பிறக்கும்" என்கிறார் அவர். இந்த நிலையே சகஜமாய்ப் போய்விட்டால் இதிலும் இன்பம் தோன்றாமல் போய்விடும். கிரமமாய் வருகிற அபிவிருத்தியில் இன்பமில்லை; எதிர்பாராத ஒரு பாக்கியத்தில்தான் மனிதன் உவகை அடைகிறான். இன்பம் வெறுஞ் செல்வத்தில் இல்லை. செல்வத்துக்குப் புறம்பே அது இருக்கிறது என்று கூறலாம். எஸ்கிமோ ஜாதியார் படும் இன்னல்களுக்கு அளவே இல்லை. ஆனால் அவர்களைப்போல இன்ப வாழ்க்கை நடத்துகிறவர்கள் இல்லை என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். ஒவ்வொரு நிலையிலும் மனிதன் மகிழ்ந்தான். வேட்டையாடி ஜீவனம் செய்கிறபோதும் அவன் உவகை கொள்ளாமலில்லை. வேளாண்மை தோன்றியபோது அதைக் கண்டு மனிதன் அஞ்சினான். அதிலும் பின்னால் ஒரு சுவை தோன்றியது. ஆனால் பழைய வேட்டையாடும் உணர்ச்சி வாசனை போய்விடவில்லை. வேட்டையிலும் திளைக்கிறான். நகர வாழ்வு பிறந்தபோது அதை முதலில் வெறுத்தான். ஆனால் நகர வாழ்வை விட்டுப் போக மனம் இப்போது வரவில்லை. கிராம வாழ்க்கையை நாடுகிற உணர்ச்சியும் அவனிடத்தில் முற்றும் இறந்து விடவில்லை.

விஞ்ஞான உலகத்தில் இப்போது அவன் திளைக்கிறான். அவனுக்கு இந்த உலகத்தில் ஓர் இன்பம் ஏற்படுமா?

விஞ்ஞானத்தால் விளையும் நன்மைகளுக்குக் குறைவில்லை. குறைபாடுள்ள இந்தக் காலமே ஒரு பொற்காலம் என்று டார்வின் கூறுகிறார். இனி வருங்காலம் பெரும்பாலும் துன்பத்தையே தரும் என்று கருத இடமுண்டு என்கிறார்.

ஜனத்தொகைப் பிரச்னையைப் பற்றிச் சிந்தித்தோம். பொற்காலத்தைப்பற்றியும் சொல்லிவிட்டோம். விஞ்ஞானத்தைப் பற்றிச் சற்று ஆராய்வோம். விஞ்ஞானத்தின்மீது நாம் பழி சுமத்தாமல் இல்லை. எல்லா வித இன்னல்களுக்கும் அதுதான் மூலமென்று சொல்கிறோம். விஞ்ஞான விளைவால் துன்பங்கள் இல்லை

என்று சொல்ல முடியாது. ஆனல் விஞ்ஞானத்தின் விளைவால் மருந்துத் துறையில் அநேக அபூர்வ சிருஷ்டிகள் ஏற்பட்டுவிட்டன. காலத்தையும் தேசத்தையும் கடந்துவிட்டார்கள் விஞ்ஞானிகள். உலகம் சுருங்கிவிட்டது. உணவுப் பஞ்சத்தை ஒரு நொடியில் அகற்றிவிடலாம். தக்க மருந்தால் 'பால்' (ஆண் - பெண் உணர்ச்சி) வேதனையை நீக்க முடியும். உடல் நோயை மறக்கச் செய்யலாம். ஆண் - பெண் இவர்களின் தொகைகளைச் சமமாக்கிவிடக்கூடும்.

பொருளாதார உலகிலும் மாறுதல் ஏற்படலாம். நிலக்கரி, எண்ணெய் இவ்விரண்டும் மறைந்தால் நேர்வழியாக யந்திர மூலமாகவும், புல் பூண்டுகளின் வழியாகவும் கிரகிக்கக்கூடிய சக்திக் கூடங்களை உலக முழுவதும் நிறுவலாம் என்கிருர் டார்வின்.

வருங்கால அரசியல் துறையைப் பற்றி டார்வின் கருதும் எண்ணங்கள் ஆராய்ச்சிக்குரியவை: "அணுக்குண்டைப் பிரயோகம் செய்யமாட்டார்கள். அது பூமியைப் பல ஆண்டுகளுக்கு வசிப்பதற்குத் தகுதியற்றதாக்கிவிடும். விஷக் கிருமி யுத்தமும் தொடங்க மாட்டார்கள். அது பூமியின் வளத்தைப் பாழ்படுத்திவிடும். உலகம் பல மாகாணங்களாகப் பிரிந்து போய்விடும். முதலில் குதிரைப்படை இருந்தது. அதற்குப் பதிலாக டாங்கிகளும் ஆகாய விமானங்களும் தோன்றின. எண்ணெயும் கரியும் மறைந்தால் விறகுப் பிரச்னை உலகத்தை வாட்டத் தொடங்கும். நாகரிகம் என்ருல் என்ன? சிலர் கலைகளில் முன்னேறுவது நாகரிகமென்பார்கள். நல்ல நகர அமைப்பிலும், உறைகிற தக்க வீடுகளிலும் அது தங்கியிருக்கிறது என்று வேறு சிலர் சொல்வார்கள். ஒழுங்கான சட்ட திட்டங்களின் முதிர்ச்சியே நாகரிகமென்று மற்றும் சிலர் சொல்லுவார்கள். சீனவில் இருக்கும் நாகரிகந்தான் நாகரிகம்" என்று டார்வின் கருதுகிருர். அதில் குறைகள் இருந்தாலும் நீண்ட காலத்தால் அது மாறவில்லை. இந்த இயல்பே அது ஒரு பழுத்த நாகரிகம் என்பதற்குச் சான்ருகும். அத்தகைய நாகரிகத்தை விஞ்ஞானம் அளிக்கும்.

கால தேச வரம்பு கடந்த ஒரு நிரந்தர அமைப்பை அது அளிக்கக் கூடும். சாதிச் சழக்குகளுக்கோ, தனித் தனி மனிதனின் மனப் பண்புகளுக்கோ, சுவைகளுக்கோ அங்கே இடமில்லை. மின்சாரத்தைப்பற்றி மத்திய ஆப்பிரிக்காவில் இருக்கும் மனிதனும், லண்டன் நகரத்தில் இருக்கும் மனிதனும் ஒரேவிதமான சர்ச்சைதான் செய்வான். விஞ்ஞானம் எங்கும் பரந்ததல்லவா? எப்படி இருந்தாலும் துயர் பிற்காலத்து மனிதனை வாட்டும் என்கிருர். எது அழிந்தாலும் நம் ஆத்மாவுக்கு அழிவில்லை என்ற திட நம்பிக்கைக் குன்றின் மீது நின்றுகொண்டு காலக்கடலின் பயங்கரமான அலைகளை அச்சமின்றி நோக்குகிறோம்; 'என் அப்பனே, துயர் அடையாதே. சுபமான காரியங்களைச் செய்கிறவன் ஒருகாலும் கெட்ட நிலைக்கு வரமாட்டான்' என்ற மாயோனின் ஆறுதல் அளிக்கும் சொல்லும் சிந்தையில் இடையருது ஒலித்துக்கொண்டிருக்கிறது. ஆனல் டார்வினின் நூலைப் படிக்குந்தோறும் ஒரு சோகக் குரல் மனத்தில் எழும்புகிறது.

கார்ட்டூன் கதம்பம்

'எங்கள் ராஜ்யம் - வெளியே போ !'

அக்டோபர் 1-ஆம் தேதியிலிருந்து ஆந்திர ராஜ்யம் ஸ்தாபிதமாகிறது. 'அதைத் தொடர்ந்து என்ன நிலை ஏற்படும்?' என்று நேரு கலக்கமடைகிறார்.

—'சங்கர்ஸ் வீக்லி'

சமீபத்தில் ருஷியாவில் ஹைட்ரஜன் குண்டு வெடித்தது.

—'தி ஸான் டியாகோ யூனியன்'



ஆங்கிலோ - அமெரிக்க வேறுபாடு.

—'பிளிட்ஸ்'

மாத்வ சம்பிரதாயத்தைச் சேர்ந்த இந்த யோகியின் சரித்திரம் அற்புதம் நிறைந்தது.

ராகவேந்திரர்

என். சீதாராம ராவ்

விஜயநகரத்தில் இருந்து கர்நாடக சாமராஜ்யத்தை உன்னத நிலைக்குக் கொண்டு வந்தவர் கிருஷ்ண தேவராயர். இவருடைய ஆஸ்தானத்தில் வீணை கிருஷ்ண பட்டர் என்ற மகா வித்தவான் இருந்தார். இவருடைய பேரன் வீணை திம்மண்ண பட்டர். இவரே ராகவேந்திரரின் தந்தை. தாயின் பெயர் கோபம்மாள். வெகு காலம் சந்ததி இல்லாதிருந்த இவர்கள் திருப்பதி வேங்கடாசலபதிக்குச் சேவை செய்ததன் பலனாக ஒரு குழந்தை பெற்றார்கள். சிறந்த பக்தனாகிய பிரசலாதனே கலியுகத்தில் ஹரிசேவை செய்ய ஆசைப்பட்டு 'வெங்கண்ணா' என்ற பெயருடன் அவர்களுக்குப் பிறந்ததாக ஐதிகம். கண்டவர் மனம் கவர்ந்து விளையாடிய குழந்தைக்கு முறைப்படி சௌள உபநயனங்கள் நடந்தன. குழந்தைப் பருவத்திலேயே இவரிடம் பக்தனுக்குரிய லட்சணங்கள் வெளியாயின. கல்வி கற்றுக்கொண்டதென்பது ஒப்புக்காகவே. விளையாட்டாகவே உயர்ந்த கல்வியறிவு பெற்றார்.

கும்பகோணதில் ஸ்ரீ சுதீந்திர தீர்த்தர் என்னும் ஸ்வாமிகளிடம் பல நூல்களைச் சிரத்தையுடன் கற்றார்; தர்க்கங்களில் வெற்றி பெற்றுக் குருவின் சிறந்த அன்புக்கு உரியவரானார். படிப்பு முடிந்தது. உத்தம லட்சணங்கள் அமைந்த சரஸ்வதி என்னும் பெண்ணை மணந்தார். தம்பதிகள் அந்நியோன்னியமாகச் சிலவருஷங்கள் குடும்பத்தை நடத்தினார்கள் பின்பு இவர்களுக்கு லட்சுமிநாராயணன் என்ற குழந்தை பிறந்தான். இந்தச் சமயதில் இவர்களை ஓயாத வறுமை பீடித்தது. அப்பொழுதும் தம்பதிகளுக்குள் ஒற்றுமையே நிலவியது. பரமாத்மாவைப் பூஜை செய்வதும் அத்தியயனம் செய்விப்பதுமாகக் காலங் கழித்து வந்தார்கள். ஒரு நாள் இவர்கள் வீட்டில் கள்வர் புகுந்து உள்ளதையும் கொள்ளையடித்தார்கள். அதன் பின் பிழைக்க வழி காணாமல் ஊரை விட்டு இவர் தம் குருவிடம் போய்ச் சேர்ந்தார். குரு இவரை மிக ஆதரித்துச் சம்ஸ்தானத்தில் தம்முடனே வைத்துக்கொண்டார்.

வெங்கண்ணாசார் அங்கே வரும் வித்துவான்களுடன் தர்க்கம் செய்வது, மாணாக்கர்களுக்குக் கல்வி கற்பிப்பது போன்ற சேவைகளால் குருவைத் திருப்தி செய்தார். மெல்ல மெல்ல இவருடைய கீர்த்தி நாடெங்கும் பரவியது. தஞ்சாவூரில் மந்திரியும் வித்துவானுமாக இருந்த யக்ஞநாராயண தீட்சிதர் வாதத்தில் இவரிடம் தோற்று, ஒப்பந்தப்படி

காப்பிரைட்: (பிரஜாமதம்: கன்னடம்), பெங்களூர்.

சுதீந்திரருடைய சிஷ்யராகிவிட்டார். இதனால் மகிழ்ந்த குரு, வித்துவான்கள் நிறைந்த சபையில் வெங்கண்ணாசாருக்கு, 'மகாபாஷ்யாசாரியர்' என்ற பட்டம் கொடுத்தார்.

நாளடைவில் சுதீந்திர தீர்த்தருக்குத் தள்ளாமை அதிகரித்தது. மூலராமதேவர் ஒரு நாள் அவருடைய கனவில் தோன்றி, "வெங்கண்ணாசார்தான் சர்வக்ஞ பீடத்துக்குத் தகுதி உள்ளவன். அவனுக்கே சந்நியாசம் கொடுத்துப் பீடத்தில் அபிஷேகம் செய்" என்று உத்தரவிட்டார். தீர்த்தர் சமயமறிந்து வெங்கண்ணாவுக்கு வைராக்கிய போதனை செய்தார்; இருந்தாலும் தம்பதிகளின் மனவொற்றுமை, இளமை, புத்திரப் பேறு எல்லாமாகச் சேர்ந்து வெங்கண்ணாவின் மனத்தில் துறவு வேண்டாமென்ற நிலையே வலுவாக இருந்தது. அன்றிரவு ஸரஸ்வதி தேவி கனவில் அவருக்குத் தரிசனம் கொடுத்து அபயம் தந்து சந்நியாசத்தைத் தைரியமாய் ஏற்கும்படி சொல்லி மறைந்தாள். பிறகு குழந்தை லட்சுமி நாராயணனுக்கு விமரிசையாகப் பூணூல் சடங்கு நடந்தது. தஞ்சாவூர் ராஜசபையில் சுதீந்திர தீர்த்தா வெங்கண்ணாவுக்குச் சந்நியாசம் கொடுத்து ஸ்ரீ ராகவேந்திர தீர்த்தர் என்ற பெயரையும் வைத்தார். இரு குருக்களும், அலங்கரிக்கப் பெற்ற ராஜவீதிகளின் வழியாக ஊர்வலம் வந்து பக்தர்களுக்கு மகிழ்ச்சி ஊட்டினார்கள்.

தன் கணவர் சந்நியாசம் பெற்றுக்கொண்டாரென்று கேள்விப்பட்ட அவர் மனைவி ஸரஸ்வதி, உயிரை விடுவதே மேல் என்று எண்ணிக் கிணற்றில் விழுந்து இறந்தாள். இதை ஞானதிருஷ்டியால் அறிந்த ராகவேந்திரர் அந்த அம்மை பிசாசு நிலையை அடையாமல் தடுத்து முக்தி அடையச் செய்தார். குருவாகிய சுதீந்திரர் ராகவேந்திரரிடம் எல்லாப் பொறுப்புக்களையும் ஒப்பித்தார்; அவருக்கு அறுபத்து நாலு கலைகளையும் உபதேசித்தார்; கவலையற்றவராய்ப் பம்பா தீரத்தில் சென்று தவத்தில் ஆழ்ந்தார்.

ஸ்ரீ ராகவேந்திரர் 39 வருஷங்கள் பீடத்தை அலங்கரித்தார். இவர் பாஷ்யம் இயற்றியதோடு பல நூல்களும் எழுதியிருக்கிறார். இவருடைய நடை பண்டிதர், பாமரர் எல்லாருமே அறிந்துகொள்ளும்படி அவ்வளவு எளிமையானது. இவருடைய திக்விஜய காலத்தில் பல அற்புதங்கள் நிகழ்ந்தன.

இவர் ஒரு நாள் வழியிலே ஓர் ஏழைப் பிராம்மணச் சிறுவனைப் பார்த்தார். அவன் கல்வியறிவில்லாமல், மந்தபுத்தியுடன் மாடுகள் மேய்த்துக்கொண்டிருந்தான். அவன் பெயர் வெங்கண்ணா. அவனை இவர் ஆசீர்வதித்ததிலிருந்து அவனுக்குக் கஷ்டங்கள் நீங்கி அதிருஷ்டம் வரத் தொடங்கியது. அத்வானி என்னும் ஊரின் நவாபுக்கு ஓர் ஓலை வந்தது. அதைப் படித்துச் சொல்லுபவர்கள் யாராவது இருக்கிறார்களா என்று நவாபு சுற்றிலும் பார்த்தான். வெங்கண்ணா ஒருவனே தென்பட்டான். அவனிடம் ஓலையைக் கொடுத்து நவாபு படிக்கச் சொன்னான். "படிக்கத் தெரியாது" என்று பயந்து நடுங்கிக்கொண்டே சொன்னான் சிறுவன். நவாபு நம்பவில்லை. "பிராம்மணச் சிறுவன்: படிக்கத் தெரியாது என்கிறாயா? படிக்காவிட்டால் யானையின் காலால்

இடறச் செய்து கொன்றுவிடுவேன்'' என்று கர்ஜித்தான். சிறுவன் ஆபத்தில் வழி தோன்றாமல் சற்குருவை எண்ணி உள்ளுற வணங்கினான். அவருடைய ஆசியின் பயனாக முறைப்படி அத்தியயனம் செய்தவர்களிடச் சிறந்த கல்வியறிவு பெற்றான். ஓலையை வக்கணையாய் நவாபுக்குப் படித்துக் காட்டினான். அவனுடைய அதிருஷ்ட வசமாக அந்த ஓலையில் நவாபின் சேனைகள் வெற்றி பெற்ற செய்தி வந்திருந்தது. அவன் சிறுவனுக்கு வெகுமதி கொடுத்தான். நாளடைவில் சிறுவன் குருவருளால் அத்வானியின் திவானாக வந்தான்.

ஸ்வாமிகள் ஒரு நாள் காலையில் கைகால்களுக்கு மண் இட்டுச் சுத்தம் செய்துகொண் டிருந்தார். அந்தச் சமயத்தில் அவருக்கு ஏவல் செய்த சிஷ்யன் ஒருவன் வந்து சம்பளம் கேட்டான். அவர் தம் கையால் ஒரு பிடி மண்ணை எடுத்து அவனிடம் கொடுத்தார். அவன் அதைப் பெற்றுக்கொண்டு கல்யாணம் செய்துகொள்ளப் புறப்பட்டான். வழியில் ஒரு கிராமத்தில் முன் பின் தெரியாத ஒருவர் வீட்டுத் திண்ணையில் இரவில் படுத்துக் கொண்டான். அப்பொழுது அந்த வீட்டுக்காரனுடைய மனைவி பிரசவ வேதனைப் பட்டுக்கொண்டிருந்தாள். பிரம்மரக்ஷஸ் ஒன்று இதற்கு முன் அவளுடைய மூன்று நாலு குழந்தைகளைப் பலி வாங்கிவிட்டது. இப்பொழுதும் அதே உத்தேசத்துடன் வந்தது. ஸ்வாமிகள் கைபட்ட மண்ணின் தூய்மையால், அந்தப் பேய் திண்ணையை நெருங்கும்போதே பொசுங்கிச் சாம்பலாயிற்று. அப்போது அது அலறிய அலறல் வீட்டுக்காரனுக்குக் கேட்டது. அவன் வெளியே வந்து அந்தச் சிஷ்யனை உள்ளே அழைத்துப் போய் விசாரித்து ஸ்வாமிகளின் மகிமையை உணர்ந்துகொண்டான். தன் சந்ததியைக் காப்பாற்றிய அந்த இளைஞனுக்குப் பல பொருள்களை வெகுமதியாகக் கொடுத்தான். அவனுக்குத் தன் தமையன் பெண்ணையே மணம் செய்வித்தான்.

கிரீடகிரி என்னும் ஊரின் தலைவராகிய தேசாயி என்பவரின் வீட்டில் ஸ்வாமிகளுக்குப் பிட்சையும் மூலராம தேவருக்குப் பூஜையும் ஏற்பாடாகி யிருந்தன. அப்போது தேசாயியின் அருமை மகன் மாம்பழங்களைப் பறிக்கும் தறுவாயில் மரத்திலிருந்து விழுந்து இறந்தான். தீர்த்தம் கொடுக்கும் சமயத்தில் ஸ்வாமிகள் விஷயத்தை அறிந்துகொண்டார். சிறுவனுடைய உடலைத் தருவிக்கச் செய்து கமண்டல நீரைத் தெளித்து அவனை உயிர்ப்பித்தார். அங்கே இருந்த எல்லோரும் வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தார்கள். தேசாயி கிரீடகிரி ஜாகீரையே மடத்துச் சேவைக்காகக் கொடுத்துவிட்டார்.

ஒரு முறை திடீரென்று தஞ்சாவூரில் பஞ்சம் தலைவிரித்தாடியது. மிகத் தருமவானாகிய அரசன் அரண்மனை நெல் களஞ்சியத்தையே காலி செய்து மக்களுக்கு உதவினான். அப்படியும் ஊரில் பசி, தாகம் அடங்காமல் ஜனங்கள் தவித்தார்கள். அரசன் மனம் வருந்தி ராகவேந்திர ஸ்வாமிகளிடம் முறையிட்டான். அரசன் குடிகளிடம் காட்டும் பரிவுக்கு மகிழ்ந்த ஸ்வாமிகள், தஞ்சாவூருக்கு விஜயம் செய்து தானியக் களஞ்சியத்தில் ஸ்ரீ பீஜாட்சரத்தை எழுதியருளினார். அவருடைய தவ

மகிமையால் அதுமுதல் நெல் களஞ்சியத்தில் தானியம் குறையாமல் வளர்ந்தது. ஊரிலும் பஞ்சம் நீங்கி நெல் விளைந்தது.

சிரசிங்கு என்னும் ஊரில் லிங்காயத்து மந்திரி ஒருவன் பிற கொள்கையில் நம்பிக்கையுள்ளவர்களைப் பல வழிகளில் தொந்தரவு செய்தான். ஸ்வாமிகள் அவ்வூருக்குப் போயிருந்த காலத்தில் அவன், "ஸ்வாமிகளே, பூணிட்ட உலக்கையைத் தளிர்க்கச் செய்தால் தங்கள் கொள்கை உண்மையென்று நம்புவேன். இல்லாவிட்டால் தாங்கள் செய்வதெல்லாம் பாசாங்கு என்பேன்" என்றான். உடனே ஸ்வாமிகள் ஓர் உலக்கையைத் தருவிக்கச் செய்து மந்திரம் ஜபித்து அதைத் தளிர்க்க வைத்தார். அதைக் கண்ட மந்திரி அதுமுதல் இவருடைய சிஷ்யனாகிவிட்டான்.

அத்வானியின் நவாபாகிய சித்தி மசூத்கான் ஸ்வாமிகளைப் பரிசோதிக்க எண்ணி ஒரு தட்டில் மாமிசத்தை வைத்து மேலே துணியைப் போட்டு மூடி இவரிடம் கொண்டுபோய் வைத்தான். சர்வக்ஞராகிய ஸ்வாமிகள் இதை அறிந்து உள்ளூறச் சிரித்துக் கொண்டார். மாமிசம் மூடிவைத்த தட்டின்மேல் ஹரிபாத தீர்த்தத்தைத் தெளித்தார். துணியைத் திறக்கச் சொன்னார். உள்ளே இருந்த மாமிசம் பழங்களாகவும் புஷ்பங்களாகவும் மாறியிருந்தது. நவாபு உடனே இவருக்குப் பணிந்து இவரிடம் மன்னிப்புக் கோரினான். மந்திராலயம் என்ற கிராமத்தையும் அளித்தான்.

தஞ்சாவூர் அரசன் பளபளவென்று ஒளிவிடும் பொன்மாலை ஒன்றை மூலராம தேவருக்காக ஸ்வாமிகளிடம் பக்தி சிரத்தையுடன் சமர்ப்பித்தான். பூஜை செய்யும் வேளையில் ஸ்வாமிகள் அந்த மாலையை அக்கினியில் சமர்ப்பித்தார். எல்லோரும் ஆச்சரியப்பட்டுக்கொண்டிருந்தார்கள். பூஜை முடிவில் மறுபடியும் பளபளப்புக் குன்றாமல் மாலையை ஸ்வாமிகள் வெளியில் எடுத்தார்.

இவருடைய பக்தன் ஒருவன் முக்தி அடைய வேண்டுமென்று அடிக்கடி விண்ணப்பித்துக்கொண்டிருந்தான். ஸ்வாமிகள் அக்கினி வளர்த்து அதில் பக்தனைக் குதிக்கச் செய்தார். சுற்றிலும் நிற்பவர்கள் பார்த்துக்கொண்டிருக்கும் போதே அவன் தேவலோக விமானத்தில் சொர்க்கத்துக்குப் போனான். அப்போது விமானத்தின் மணியோசை எல்லோருக்கும் கேட்டதாம்.

இவர் பூஜை வேளைகளில் வீணை வாசித்துக்கொண்டு மனமுருகிப் பாடினால் கண்ணன் குழல் ஊதிக்கொண்டு எதிரே நாட்டியம் செய்வது வழக்கமாம்.

முதலில் இவருடைய அனுக்கிரகம் பெற்று மந்திரியான வெங்கண்ணா மந்திராலயத்தில் இவருக்குக் கட்டுவித்த மடத்தில் இவர் வசித்தார். தம் விருப்பப்படி 'பிருந்தாவனம்' ஒன்று கட்டச்செய்து, உடலுடன் அதில் இவர் நுழைந்தார். இது நடந்து 282 வருஷங்களாகின்றன. ஒவ்வொரு வருஷமும் ஆகஸ்டு மாதத்தில் மூன்று நாள் இவருடைய உற்சவத்தை முன்னிட்டுத் தெற்கிலிருந்து திரள் திரளாக ஜனங்கள் அங்கே சென்று வருகிறார்கள்.

தட்ச யக்ஞம்

“நற் குணம் பொருந்திய சிவபெருமானிடம் தட்சன் ஏன் பகை கொண்டான்? மாப்பிள்ளைக்கும் மாமனாருக்கும் ஏற்பட்ட அந்தப் பகைமையைப்பற்றிச் சொல்ல வேண்டும்” என்று விதுரர் மைத்திரேய முனிவரிடம் கேட்டார்.

மைத்திரேயர் சொல்லலானார்: “முன் ஒரு சமயம் பிரஜாபதிகள் யாகம் செய்தபோது தேவர் முதலானோர் அங்கே கூடியிருந்தார்கள். தட்சன் அதில் கலந்து கொள்ள வந்ததும் அது மிகவும் சிறப்புற்று விளங்கியது. தம்மை அறியாமல் அனைவரும் எழுந்து மரியாதை செய்தார்கள். ஆயினும் அவனுடைய திவ்விய ஒளி பிரமாவையும் சிவபெருமானையும் அசைக்க முடியவில்லை. ஆகவே, அவர்கள் இருவரும் எழுந்து அவனை உபசரிக்கவில்லை.

தட்சன் பிரம்மாவைப் பார்த்து வணக்கம் செய்து அவருடைய அனுமதி பெற்று உட்கார்ந்தான். எதிரில் சிவபெருமான் எழுந்து தனக்கு மரியாதை செய்யாமல் அமர்ந்திருப்பதைக் காண அவனுக்குப் பொறுக்கவில்லை. கடைக் கண்ணால் எரிப்பவன் போல் அவரைப் பார்த்துவிட்டுக் கூறலானான்: ‘பிரம்ம ரிஷிகளே, தேவர்களே, அக்கினிகளே! நான் சொல்வதைக் கேளுங்கள்: நான் அறியாமையாலோ பொறாமையாலோ இதைச் சொல்லவில்லை. இதோ எதிரில் இருப்பவன் லோக பாலர்களில் ஒருவன். ஆனால் இவனால் லோகபாலர்களின் புகழுக்கு இழுக்குத்தான் நேரும். இவனுக்கு வெட்கமில்லை. பெரியவர்கள் கடைப்பிடித்த வழியைக் கைவிட்டான். இவன் என் பெண்ணை மணந்துகொண்டதால் எனக்கு மரியாதை காட்டிக் கீழ்ப் படிந்து நடக்க வேண்டியவன். மான் விழியாளாகிய என் பெண்ணுக்குக் குரங்குக் கண் படைத்த இவன் கணவனாக வாய்த்தானே! எழுந்து வணங்க வேண்டியவன் மரி

கிருஷ்ண பகவானின் லீலைகளை மட்டுமல்ல; இன்னும் எத்தனையோ அரிய கதைகளையும் சொல்வது பாகவதம். அதில் ஒரு பகுதி இது.

யாதைக்குக்கூட ஒரு வார்த்தை சொல்லவில்லையே! சுடுகாட்டில் வாழுகிறான். பேயும் பிசாசும் இவனுக்குப் பணியாட்கள்; பைத்தியம் பிடித்தவன் போல் துணிகூட இல்லாமல் சில சமயம் தலைமயிரைப் பிய்த்துக்கொண்டும், சில சமயம் அழுதுகொண்டும், சில சமயம் சிரித்துக்கொண்டும் திரிகிறான். வெந்த பிணத்தின் சாம்பலைப் பூசிக்கொண்டு எலும்பை அணிந்து திரியும் இவன் உண்மையில் எப்படி மங்களம் என்று பொருள்படும் சிவன் என்னும் பெயருக்குத் தகுதியுடையவன் ஆவான்? பிரம்மா சொல்லவே பைத்தியக்காரனுக்கு என் பெண்ணைக் கொடுத்தேனே யொழிய வேறு தகுதி இவனுக்கு எது?' என்றான்.

''பிறகு பேசாமல் அமர்ந்திருந்த சிவபெருமானைச் சபிக்கவேண்டித் தன் கைகால்களைக் கழுவிச் சுத்தம் செய்துகொண்டு ஆசனத்தில் அமர்ந்தான். பலர் தடுத்தும் கேட்காமல் அவன், 'தேவதைகளுக்குச் செய்யும் இந்த யாகத்தில் தேவர்களில் தாழ்ந்த இவனுக்குப் பாகமில்லாமல் போகட்டும்!' என்று சபித்துவிட்டுத் தன் இருப்பிடத்துக்குப் போய்விட்டான். இதை அறிந்த நந்தி தேவர் கடுஞ்சினங் கொண்டார். தட்சனைச் சபிக்கலானார். 'அழியும் உடலை நான் என்று கருதி அகங்காரம் அடைந்து சிவபெருமானைச் சபித்த தட்சன் தத்துவம் உணராத அஞ்ஞானி ஆகட்டும். கர்ம காண்டத்தில் மட்டும் நம்பிக்கை கொண்டு கர்மங்களிடையே இவன் உழலட்டும். பெண்களிடம் மோகங் கொண்டு ஆட்டின் முகத்தோடு இருக்கட்டும். சிவபெருமானை அவமானப்படுத்திய இந்தத் தட்சனைப் பின்பற்றிய பிராம்மணர்களும் எது தின்னக் கூடியது, கூடாதது, எது என்ற வேற்றுமை இல்லாமல் தவம், விரதம் முதலியவற்றை விட்டுப் பிச்சைக்காரர்களாகத் திரியட்டும்' என்றார்.

"இதைக் கேட்டதும் பிருகு முனிவருக்குக் கோபம் பொங்கியது. அவர் பதிலுக்குக் கடுஞ் சாபம் இட்டார்: 'உலகத்தில் சிவ பக்தரும் அவர்களைப் பின் பற்றுபவரும் வேத மார்க்கத்தைக் கைவிட்ட கயவர்கள் ஆகவேண்டும். உலக நாதனாகிய நாராயணனிடம் பக்தியற்றுப் பிரேதங்களுக்கு நாதனாகிய சிவனையே வழிபடட்டும்' என்றார். சிவபெருமான் இதைக் கேட்டும் பேசாமல் எழுந்து போய்விட்டார். பிரஜாபதிகள் ஆயிரம் வருஷ காலம் யாகத்தைச் செய்து முடித்தார்கள்.

"இப்படி வெகு காலம் மாமனாருக்கும் மாப்பிள்ளைக்கும் மனத்தாங்கல் இருந்துகொண்டிருந்தது. பிரம்மா தட்சனைப் பிரஜாபதிகளுக்குத் தலைவனாக்கினார். தட்சன் ஞானிகளாகிய ரிஷிகளை மதிக்காமல் வாஜபேய யாகம் செய்து முடித்து, பிருகஸ்பதி ஸவம் என்ற யாகத்தைத் தொடங்கினான்.

"அந்த யாகத்துக்குப் பல முனிவர்கள் மனைவிமாரோடு விமானத்தில் ஏறிச் சென்றார்கள். தேவர்கள் பலர் தம் மனைவிமாரோடு ஆகாயத்தில் போய்க்கொண்டிருந்தார்கள். அவர்களைப் பார்த்துச் சற்று மனக் குறை உற்றவளாய்ச் சதிதேவி சிவபெருமானிடம் கூறுவாள்:

'என் தந்தை யாகம் செய்கிறார். தேவர்கள் எல்லாரும் அதைக் காணப் போகிறார்கள். என் சகோதரிகள் தங்கள் கணவன்மாருடன் அங்கே போவார்கள். உலகமனைத்துக்கும் தாங்களே ஆதாரம். ஆயினும் நான் பெண்தானே; எனக்கு அந்த யாகத்தைப் பார்க்க ஆவலாக இருக்கிறது. மற்றப் பெண்கள் எல்லாரும் யாகத்தைப் பார்க்கப் போகிறார்கள். பெண்ணாகிய எனக்கு என் தந்தை வீட்டுக்குப் போக ஆசை இராதா? தந்தை வீட்டுக்குப் போக அழைப்பு வேறு வேண்டுமா? தாங்கள் தயை செய்து என்னை அங்கே போக அநுமதிக்க வேண்டும்' என்றாள்.

"சிவபெருமான், 'என் அன்பே, நீ சொல்வது உண்மைதான். ஆயினும், உடம்பே பெரிது என்று எண்ணிக் கடுஞ்சினங் கொண்டிருக்கும் உன் தந்தை உன்னைக் கண்ணால்கூடப் பார்க்க மாட்டார். நிலையற்ற மனமுடைய இத்தகையோரின் வீட்டுக்குப் போவதைவிடப் போகாமல் இருப்பதே மேல். பகைவரின் பாணம் பட்டுப் புண்ணான இருதயங்கூட ஆறிவிடும். உறவினரின் கொடிய சொற்களால் ஏற்பட்ட புண் ஆறுவது எளிதல்ல. மேலும், நீ உன் தந்தைக்கு அருமைப் பெண்ணானாலும் அங்கே போனால் என் சேர்க்கையால் அவமானமே அடைவாய். நீ என் வார்த்தையைக் கேட்காமல் போனால் உனக்குத் தீங்குதான் நேரும்' என்றார்.

"தட்சன் மகள் அவருக்கு எதிராகப் பேச அஞ்சினாள். ஆனாலும் ஆகாயத்தில் விமானமேறிச் செல்பவர்களைக் காண அவளுக்கு வருத்தம் பொங்கியது. கடைசியாகப் பெண் புத்தியாலும் தந்தை மேல் உள்ள பாசத்தாலும் சிவபெருமானுடைய உடலிலிருந்து பிரிந்து பிறந்த வீட்டுக்குப் புறப்பட்டாள். சிவபெருமானின் பணியாட்கள் அனைவரும் அவளைச் சிறந்த ரிஷபத்தில் ஏற்றி வாத்திய கோஷங்களுடன் அழைத்துச் சென்றார்கள்.

"அந்தணரும் முனிவரும் நிறைந்து வேதகோஷம் முழங்கும் யாகசாலைக்குள் சதி நுழைந்தாள். தட்சனிடம் பயத்தால் ஒருவரும் அவளை வரவேற்று உபசரிக்கவில்லை. தாயும் சகோதரர்களும் மட்டும் அவளைக் கட்டி அணைத்துக்கொண்டு ஆனந்தக் கண்ணீர் வடித்தார்கள். விசேஷமாக உபசரிக்கவும் முன் வந்தார்கள். ஆயினும் தந்தை தன்னை மதிக்காததால் அவள் அந்த உபசாரத்தை ஏற்கவில்லை.

"சிவனுக்குப் பாகமில்லாதபடி நடத்தும் அந்த யாகத்தைப் பார்த்து அவள் கோபங் கொண்டாள். உலகத்தையே எரிப்பவள் போல் ஆகிவிட்டாள். கோபித்து எழுந்த பூத கணங்களை அடக்கிவிட்டு அனைவரும் கேட்கும்படி சொல்லலானாள்: அவரிடம் உன்னைத் தவிர யார்தான் பகை கொள்வார்கள்? சிவ என்ற இரண்டு எழுத்துக்களை அறியாமல் உச்சரித்தாலும் பாவம் அகலுமே. உலகத்தாரின் விருப்பங்களைப் பூர்த்தி செய்யும் 'அவரிடம் உனக்கு என் இந்தத் துவேஷம்? அவரை இகழும் உன் நாக்கை வெட்டவேண்டும். பாவியான உன்னிடமிருந்து உண்டான இந்த உடலை நான் இதோ விட்டுவிடுகிறேன். உன்னால் எனக்கு ஏற்பட்ட பாவத்துக்கு இதுதான் பிராயச்சித்தம். சிவபெருமான் என்னைத் தாட்சாயணி என்று அன்புடன் அழைக்கும்பொழுது வெட்கமும் வருத்தமுந்தான் ஏற்படுகின்றன. ஆகவே, இந்த உடலை விடுவதே சரி' என்றாள். பிறகு குளித்துச் சுத்தமாக மஞ்சள் ஆடை அணிந்து வடக்கு நோக்கி உட்கார்ந்து கண் மூடி யோகத்தில் ஆழ்ந்தாள். மூச்சை அடக்கிக் கொண்டாள். உலகநாதனான சிவபெருமான் மடிமேல் அன்புடன் எடுத்து வைத்துக்கொண்ட பெருமை பூண்ட உடலைக்கூடத் தட்சனின் உறவுகாரணமாகவிடத் தீர்மானித்தாள். உடல் முழுவதும் தீயும் காற்றும் நிறைந்திருப்பதாகத் தியானம் செய்தாள். உடனே அவளுடைய உடல் எரிந்தது. அதைக் கண்டு அனைவரும் 'ஹா ஹா' என்று கதறினார்கள். ருத்திர கணங்கள் தட்சனைக் கொன்று யாகத்தை நிறுத்த முயன்றன. ஆனால் அதற்குள் பிருகு முனிவர் யாகத்தைக் கெடுப்பவரைக் கொல்வதற்கான மந்திரத்தைக் கூறி ஹோமம் செய்தார். 'ரிபு' என்னும் தேவர்கள் கூட்டம் தீயிலிருந்து உடனே கிளம்பிச் சிவகணங்களை விரட்டியடித்தது.

"சிவபெருமான் நாரதர் மூலம், தட்சன் மகளை அவமதித்ததையும் மற்ற விவரங்களையும் அறிந்தார். அவருக்குக் கோபம் மூண்டது. உதட்டைக் கடித்தார். தீக்கொழுந்து போன்ற தம் சடையை அவிழ்த்துக்கொண்டார். எழுந்து நின்று கோரமாகப் புன்னகை செய்தார். பயங்கரமாகக் கர்ஜித்தார். சடையைத் தரையில் அடித்தார். அதிலிருந்து உடனே பயங்கரமான தோற்றத்துடன் ஒருவன் கிளம்பினான். அவன் பல ஆயுதங்களைத் தாங்கி ஆயிரம் கைகளுடன் ஆகாயத்தை அளாவி நின்றான். அவன் கண்கள் சூரியனைப் போல் ஒளிர்ந்தன. தலைமயிர், தீக்கொழுந்து போல் ஒளி வீசியது. கபாலங்களை மாலையாக அவன் அணிந்திருந்தான். அவன் சிவபெருமானைப் பணிந்து கை

கட்டி, 'என்ன செய்ய வேண்டும்?' என்று கேட்டான்.

"அதற்கு அவர், 'தட்சனை அவன் யாகத்தோடு அழித்து விடு. என் கணங்களுக்கு நீயே தலைவன்,' என்றார்.

"உடனே அவன், தன் சூலத்தை உயர்த்திக் கொண்டு ஓடினான். அவனைப் பின் தொடர்ந்து சிவ கணங்கள் யாகசாலையில் புகுந்து அதை அழித்தன. பயந்து ஓடிய தேவர்களைத் தொடர்ந்து பிடித்தன. வீரபத்திரன் என்ற அந்தத் தலைவன் தட்சனைப் பிடித்துக் கொண்டான். சண்டீசர் சூரியனையும், நந்தி தேவர் பகனையும் பிடித்துக்கொண்டார்கள். சிவபெருமானைத் தட்சன் இகழும்பொழுது மீசையைத் தடவிக்கொண்டுசிரித்த பிருகுவின் மீசையை வீரபத்திரன் பிடுங்கினான். சிவபெருமானைத் தட்சன் இகழும்போது பிறரைப் பார்த்துக்கண்ணடித்த பகனின் கண்ணைப் பிடுங்கினான். அப்போது பல்லைக் காட்டிச் சிரித்த சூரியனின் பல்லை உதிர்த்தான். தட்சன்மேல் எறிக் கத்தியால் குத்தினான். ஆனால் அந்தக் கத்தியை மார்பிலிருந்து எடுக்க முடியவில்லை. அவன் தலையை வெட்டி யாக குண்டத்தில் ஹோமம் செய்தான். யாக சாலையில் நெருப்பு மூட்டிவிட்டுக் கைலாசம் திரும்பிச் சிவபெருமானின் அடி பணிந்தான். உலகம் முழுவதும் வீரபத்திரனின் செயலைக் கொண்டாடியது.

"ருத்திர கணங்களால் தன் புற்றுக் கைகால் ஒடிந்த தேவர்கள் பிரம்மாவிடம் சென்று முறையிட்டார்கள். பிரம்மா அவர்களிடம், 'நானும் விஷ்ணுவும் இவ்விதம் நடக்கப் போவதை அறிந்துதான் யாகத்துக்கு வரவில்லை. சிவபெருமானுக்கு இழைத்த குற்றத்துக்கு ஏற்ற தண்டனையைத்தான் அடைந்தீர்கள். அவரை அடிபணிந்து மன்னிப்புக் கேட்பதைத் தவிர வேறு வழியில்லை' என்று சொல்லி அவர்களை அழைத்துக்கொண்டு கைலாசம் சென்றார். அங்கே நாரதர் முதலிய முனிவருக்குத் தத்துவோபதேசம் செய்துகொண்டிருந்த சிவபெருமானின் அடி பணிந்து, 'மாயையைக் கடந்த தாங்கள் மாயையில் உழலும் பேதைகளுக்கு அருள்கூர வேண்டும். அழிந்த யாகத்தை மீண்டும் புதுப்பிக்கவேண்டும். தட்சன் உயிர் பெற்று எழுந்து தான் ஆரம்பித்த யாகத்தை முடிக்க அருளும். யாகத்தில் மீதியிருப்பது அனைத்தும் உமக்குப் பாகமாக இருக்கட்டும்' என்றார்.

"சிவபெருமான் மகிழ்ச்சியுற்று, 'எனக்கு என் குழந்தைகளிடம் சற்றும் கோபம் இல்லை. ஆனாலும், உலக நிலை சீர்குலையாமல் இருப்பதற்கே இந்தத் தண்டனையை அளித்தேன். நீங்கள் வேண்டியபடியே எல்லாம் நடக்கும். தட்சன் தலை யாகத் தீயில் எரிந்துவிட்டதால் அவன் உடலில் ஆட்டின் தலை முளைக்கும்' என்றார்.

அப்படியே அவன் உயிர் பெற்று எழுந்து சிவபெருமானைப் பலவாறாகப் போற்றி யாகத்தை முடித்தான். அப்பொழுது பகவான் நாராயணர் அங்கே தோன்றி அனைவருக்கும் அருள் புரிந்து, 'மும்மூர்த்திகளில் வேற்றுமை இல்லை. ஏற்றத் தாழ்வும் இல்லை' என்ற தத்துவத்தை உபதேசித்துச் சென்றார்."

தோலைப் பாதுகாத்தல்

பாலபர்த்தி நரஸிம்ஹ ராவ்

நம் உடலில் தோல் எவ்வளவு முக்கியமான பாகம், அதை எவ்வளவு அருமையாகக் கவனிக்க வேண்டும் என்பதைத் தகுந்த காரணங் காட்டி விளக்கியிருக்கிருர் இந்தக் கட்டுரையாளர்.

இயற்கையில் ஒவ்வொரு காயும் கனியும் தோலைக் கொண்டு மூடப் பெற்று அமைந்திருக்கிறது. இந்தத் தோல் காயின் முக்கிய பாகத்தைக் காக்கவே ஏற்பட்டது. மாம்பழம் வாங்குவதாக வைத்துக்கொள்வோம். அதன் தோலின் நிறம், இயற்கையாக இல்லாவிட்டாலும் அடி பட்டிருந்தாலும் அழுகினது போல் இருந்தாலும் பூச்சியோ தொளையோ இருந்தாலும் வாங்க மாட்டோம். என்? வெளியே காணும் அடையாளத்தால் அந்தப் பழத்தின் முக்கிய பாகம் கெட்டுவிட்டது, புசிக்கத் தகுதி அற்றது என்று தெரிகிறது. நம் உடம்பின் தோலும் பழத் தோலைப் போன்றதே. தோலின் செழுமை குன்றி வாடினுலும், கறுப்பாகவோ மஞ்சளாகவோ மாறினுலும், தழும்புகளும் வெடிப்புக்களும் படைகளும் தோன்றினுலும், உடம்பின் உட்புறத்தில் ஏதோ மாறுதல் ஏற்பட்டிருக்கிறதென்று தெரிந்துகொள்ள வேண்டும். சுருங்கியோ, தடித்தோ இருப்பதும் தவறு.

தோலுக்கும் உடலின் உட்புறத்து அவயவங்களுக்கும் நெருங்கிய சம்பந்தம் இருக்கிறது. சந்தர்ப்பம் நேர்ந்தபொழுது, மூத்திரக்காய்கள் செய்யும் வேலையைத் தோல் செய்கிறது. மூத்திரக் காய்கள் மூத்திரத்தை வெளியிடுவது போல் தோல் வேர்வையை வெளிப்படுத்துகிறது. கோடைக் காலத்தில் நாம் ஏராளமாகத் தண்ணீர் குடிக்கிறோம். அந்த அளவுக்கு மூத்திரம் வெளிப்படுவதில்லை; அதிகப்படி உடம்பில் தங்கிய நீரைத் தோல் வேர்வையாக வெளிப்படுத்தி விடுகிறது.

குளிர் காலத்தில் நாம் மிகக் குறைவாகத் தண்ணீர் குடிக்கிறோம். ஆனுல் மூத்திரம் என்னவோ அதிகமாக வெளி வருகிறது. இதற்குக் காரணம் என்ன? குளிர் காலத்தில் தோல் சரிவர வேலை செய்யாது. குளிர்ந்த காற்றினுல் இது சுருங்கி இதன் வழியாக வெளிப்பட வேண்டிய வேர்வை வர முடியாது போய் விடுகிறது.

அதனுல் உடம்பிலிருந்து வெளிப்பட வேண்டிய தண்ணீர் முழுவதும் மூத்திரமாக வெளிவருகிறது. குளிர் காலத்தில் அதிகமாக நீர் இறங்குவதன் காரணம் இதுதான். வெயில் காலத்தில்

மூலம்: (பிரகிருதி: தெலுங்கு), விஜயவாடா.

மூத்திரக் காய்களுக்குத் தோல் உதவி செய்கிறது; அதனால் அப்பொழுது அவற்றின் வேலை எளிதாகி விடுகிறது.

மூத்திரக் காய்கள் மிக நுட்ப சக்தி பெற்றவை; நம் உடம்பின் தோல் உறுதி வாய்ந்தது. எந்தக் காரணத்தினாலாவது தோலின் சக்தி குன்றிவிட்டால் மிக மிருதுவான இயற்கையுள்ள மூத்திரக் காய்களுக்கு வேலை அதிகரித்து, அதனால் சில நாட்களில் நீரிழிவு நோய் உண்டாகும்.

அசுத்தத்தை வெளிப்படுத்தும் அவயவங்களுள் தோல் மிக முக்கியமானதென்பதற்கு மற்றொரு காரணமும் இருக்கிறது. இதன் மேல் லட்சக்கணக்கில் மயிர்க்கால்கள் அமைந்திருக்கின்றன. உடம்பில் ரத்தக் குழாய்கள் எவ்வளவு இருக்கின்றனவோ அவ்வளவு மயிர்க்கால்களும் இருக்கின்றன. ரத்தக் குழாய்களில் சேரும் அசுத்தத்தை அவ்வப்பொழுது வெளிப்படுத்தும் இயற்கையான வழிகள் இவையே. தோலின் ஆரோக்கியம் கெட்டு அசுத்தம் வெளிப்படும் இவ்வழிகள் அடைபட்டு விட்டால் ரத்தம் அசுத்தமாகி ரத்தக் குழாய்கள் கரடு முரடாக மாறி விடுகின்றன; ரத்த அழுத்த நோய் உண்டாகிறது. அசுத்தம் நரம்புக் கூட்டங்களில் நிலைத்துவிட்டால் பக்கவாதம் முதலிய நரம்பு சம்பந்தமான நோய்கள் உண்டாகும்.

தோல் அசுத்தத்தை வெளியேற்றுவதோடு, சுவாசம் விடும் உறுப்பாகவும் வேலை செய்கிறது. சிமிட்டி போன்ற காற்றுப் புக இடம் விடாத பொருள்களை உடம்பின்மேல் பூசினால் மனிதன் வெகு நாட்கள் வாழ முடியாது என்று அடால்ப் ஜஸ்ட் என்பவர் எழுதியிருக்கிறார். தோலில் அதிகமாக நெருப்புச் சுட்டால் மனிதர்கள் இறந்துவிடுகிறார்கள் என்பதும், தோல் சுவாச உறுப்பு என்பதையே உறுதிப்படுத்துகிறது. தோலுக்கும் சுவாசாசயங்களுக்கும் நெருங்கிய சம்பந்தம் இருப்பதால் தோலுக்கு ஏதேனும் ஊறு ஏற்பட்டால் சுவாசாசய சம்பந்தமான ஆஸ்த்மா, பிராங்கைடீஸ், க்ஷயம் ஆகிய நோய்கள் உண்டாகின்றன.

தோல் இயற்கைச் சக்தியை இழப்பதன் காரணங்கள்: - (1) நடுக் கோடையில் அனல் காற்று வீசுங்காலத்திலும் வெந்நீரிலேயே ஸ்நானம் செய்பவர்களுடைய உடல் தோலின் உறுதி கெட்டு விடுகிறது. இவர்களுக்கு ஓயாமல் சளியோ, ஜுரமோ, தலைவலியோ பிடித்துக்கொள்ளும். குளிர்ந்த நீரில் ஸ்நானம் செய்தால் தோலுக்குச் செழுமை உண்டாகிறது; உறுதியும் ஏற்படுகிறது. வெந்நீரில் குளிப்பதால் தோலுக்குப் பலம் குன்றி வருகிறது. நம் முன்னோர்கள் குளிர்ந்த நீரின் பெருமையை அறிந்தே துலாஸ்நான, மாக ஸ்நானங்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். எண்ணெய் தேய்த்துக் கொள்ளும்போது மட்டும் வெந்நீர் உபயோகிக்கலாம்; குளிர்ந்த நீருக்கு எண்ணெய் விடாது. ஆரோக்கியத்தை விரும்பும் எல்லோரும் குளிர்ந்த நீரிலேயே ஸ்நானம் செய்ய வேண்டும்.

(2) நாகரிகம் என்று நினைத்துக்கொண்டு காற்றும் வெயிலும் புகாதபடி அதிக உடை தரிப்பது தோலுக்கு இழைக்கும் பெரிய அநீதியாகும். கம்பளி, பிளானல் முதலியவை மிகக் கேடு செய்பவை.

உடலுக்குத் தாராளமாகக் காற்றுப் படும்படி மெல்லிய துணிகளை அளவுடன் அணிய வேண்டும். சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம் சிறிய சவுக்கத்தை உடுப்பது நல்லது. வெயிலிலும் காற்றிலும் சுற்ற வேண்டும். குளிர்ந்த காற்றுக்கும் வெயிலுக்கும் பழக்கப்பட வேண்டும். 'சிலீர்' என்று உறைக்கும் குளிருக்கும் தண்ணீருக்கும், 'சுள்' என்று அடிக்கும் வெயிலுக்கும் பயப்படக் கூடாது. பஞ்சபூதங்களுடன் நட்புக் கொண்டாடும் மனிதனே தீர்க்காயுளுடன் வாழ்வான். இவற்றிலிருந்து விலகிப் போகிறவனுக்கு அற்பாயுளே.

மேலும், நோயற்ற வாழ்வை விரும்புகிறவர்கள் சோப்பு, பவுடர், கிரீம் முதலியவற்றை விலக்க வேண்டும். தோல் வலுப் பெற வேண்டுமானால் தினந்தோறும் துணியாலோ கையாலோ உடம்பை நன்றாகத் தேய்த்துக் குளிர்ந்த நீரில் குளிக்க வேண்டும். அடிக்கடி உடம்புக்கு எண்ணெய் தடவி, சீக்காய் தேய்த்துக் குளிக்க வேண்டும். தோல் எவ்வளக்கெவ்வளவு பலம் பெறுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு நோய்கள் தூர விலகும்.

தோல் உறுதி பெற உடற்பயிற்சி செய்வது அவசியமாகும். ஒவ்வொரு மனிதனும் தன் சக்திக்குத் தக்கபடி உழைத்துத் தீரவேண்டும். உடற்பயிற்சி செய்ய முடியாதவர்கள் தினந்தோறும் குறைந்தது இரண்டு மைலாவது நடக்கவேண்டும்.

படத்தின் வெற்றி

தியேட்டர் முதலாளி: பேஷ்! இன்றைக்கும் கொட்டகை கொள்ளாக் கூட்டந்தான் போல் இருக்கிறதே; கொள்ளை, திருட்டு முதலிய விஷயங்கள் அடங்கிய படத்தைப் போல் வெற்றிகரமான படம் வேறில்லை. எங்கே, இன்றைக்கு என்ன வசூல்? சொல்லும் பார்க்கலாம்.

டிக்கட் வசூல் மானேஜர்: அதுதான் தெரியவில்லை. எவனோ ஒருவன் வந்து பணப்பெட்டியை அடித்துக்கொண்டு போய் விட்டான்.

—'லோ லைஃப்,' யு. எஸ். ஏ.

வேலையாளின் மகிழ்ச்சி

மேஜையின் ஒரு மூலையிலே எஜமான் மண்டையை முட்டிக்கொண்டார். இதைப் பார்த்து, வேலைக்காரப் பையன் கலகல என்று சிரித்தான்.

எஜமான், "என்னடா இது, சிரிக்கிறாய்! என்ன துணிச்சல் உனக்கு?" என்று சீறி விழுந்தார்.

பையன், "ஒண்ணுமில்லைங்க. உங்களுக்குக் காயம் ஒன்றும் ஏற்படாததற்கு நான் சந்தோஷப்படுகிறேனுங்க" என்று பதில் அளித்தான்.

—'எப்டோமஸ்', க்ரீஸ்.

மலடு என்பது என்ன?

★

புதிய ஆராய்ச்சிகளின்படி மலடு என்பது மனோபாவத்தைப் பொறுத்து ஏற்படுவதென்று சொல்கிறார்கள். இதைப்பற்றிய பல தகவல்களை அறிவிக்கும் கட்டுரை ஒன்று 'காரோனெட்' என்ற பத்திரிகையில் வெளியாகியுள்ளது. அதை ஆதாரமாகக் கொண்டது இது.

குழந்தைகள் வேண்டும் என்று மலடாக இருப்போர் படும் மனவேதனை ஆதி காலத்திலிருந்தே உண்டு. பல நூற்றாண்டுகளாக மந்திரம் மருந்துகள் மூலமாக இதைத் தீர்க்க முயன்றுதான் வருகிறார்கள். அமெரிக்க ஐக்கிய நாடுகளில் மட்டும் குழந்தை வேண்டுமென்று என்னதான் ஆசைப்பட்டும் பத்துத் தம்பதிகளுக்குள் ஒரு தம்பதிகள் மலடாகவே இருக்கிறார்கள் என்றால் பாருங்கள்.

மலடு சம்பந்தமாக, சமீப காலத்தில் அரிய ஆராய்ச்சிகள் நடத்தி வருகிறார்கள். வெறுப்பு, பயம், கவலை, மனநிலையைச் சரியாகப் புரிந்து கொள்ளாதிருப்பது போன்ற உணர்ச்சிக் கோளாறுகள் மலட்டுக்குக் காரணமாகலாம் என்று இந்த ஆராய்ச்சிகளிலிருந்து தெரிகிறது. இந்தக் கோளாறுகள் நீங்கினால் கர்ப்பந் தரிப்பதற்கு இடமுண்டு.

மலடு சம்பந்தமாக ஆராய்ச்சி செய்துவரும் பல அமெரிக்க மருத்துவ ஸ்தாபனங்களில் ஒன்றான கிளெவ்லண்டு ஆரோக்கிய நிலையத்தில் 1946 முதல் 300 மலட்டுத் தம்பதிகளுக்குச் சிகிச்சை செய்து பலன் கண்டிருக்கிறார்கள்.

சிகிச்சைக்கு முன் இந்த 300 தம்பதிகளும் மணமாகிக் குறைந்தது 18 மாதமாவது மலடாகவே இருந்தவர்கள். இவர்களுள் 225 மனைவிமார் கர்ப்பந் தரிக்கவே இல்லை. மற்ற 75 பேரும் ஒரு குறைப் பிரசவம் அல்லது ஒரு கர்ப்பத்துக்குப் பிறகு மறுபடியும் கர்ப்பிணிகளாகவில்லை. இந்தச் சிகிச்சைக்குப் பிறகு 93 தம்பதிகள் கர்ப்பிணிகளானார்கள். ஒரு தம்பதிக்கு இரட்டைகள் கூடப் பிறந்தன.

இந்தக் கர்ப்பங்களில் கால்வாசிக்கு ஆதாரமாக இருந்த சிகிச்சை, வெறும் உடல் நலம் காரணமான சில எளிய யோசனைகள்தான். ரத்தச் சோகை, பல் கோளாறு போன்ற குறைகள் போக வழியும், கணவனும் மனைவியும் நல்ல சத்துள்ள உணவை—பழம், காய்கறி, மாமிசம் இவைகளடங்கியது—உண்ணும்படி செய்ததும், கர்ப்பந் தரிப்பதற்கு எற்ற காலம் எது என்பதை அவர்களுக்கு எடுத்துக் காட்டியதும் இந்தச் சிகிச்சையின் சில அம்சங்கள்.

இன்னும் ஆராய்ந்ததில் தாங்களே வியக்கும்படியான ஓர் உண்மை வைத்தியர்களுக்குத் தெரிந்தது. மூன்றில் ஒரு பங்கு தம்பதிகளுக்கு மலடு நீங்கிய காரணம் இதுதான்: மலடு சம்பந்தமாக யோசனை கேட்டு, டாக்டர்கள் சிகிச்சைக்கு உட்பட்டார்கள்; இதனால் அவர்களுக்கு மனமாறுதல் ஏற்பட்டது.

"யோசனை கேட்பதே ஒரு சிகிச்சை ஆகிவிட்டதென்று தோன்றுகிறது" என்று அந்த ஸ்தாபன டாக்டர்கள் தீர்மானித்தார்கள்.

முதல் முறையாகப் பரிசோதனைக்கு டாக்டர்களிடம் போக ஏற்பாடாகியிருந்த காலத்திலேயே ஒருத்திக்குக் கர்ப்பந் தரித்துவிட்டது. டாக்டர்கள் பார்த்த பிறகு 4 தம்பதிகளை, மறுபடி ஒரு நாள் பரிசோதனைக்கு வரும்படி சொல்லி அனுப்பினார்கள். ஆனால் அந்தத் தேதி வருவதற்கு முன்பே அவர்கள் கர்ப்பம் ஆகிவிட்டார்கள்!

வேறு ஒரு வகையில் மலடு நீங்குவதாகவும் தெரிகிறது: வெகு நாளாக மலடாக இருந்த ஒரு ஸ்திரீ கடைசியாக ஒரு குழந்தையைத் தத்து எடுத்துக்கொள்ளத் தீர்மானித்தாள். இந்தத் தீர்மானத்துக்குப் பின் சில நாளைக்கெல்லாம் அந்த ஸ்திரீ கர்ப்பமானாள்.

கர்ப்பப் பைக்கும் பெண் அங்கத்துக்கும் இடையே 'பேலோப்பியன் ட்யூப்'கள் என்ற இரண்டு மெல்லிய குழாய்கள் இருக்கின்றன. இந்தக் குழாய்களில் தான் ஆண் பெண் தாதுக்கள் கலக்கின்றன. இந்தக் குழாய்களை மின்சார விளக்குகளின் மூலம் பரிசோதித்துத் தக்கபடி சிகிச்சை செய்தால் மலட்டை நீக்கலாம் என்று நிபுணர்கள் கருதுகிறார்கள்.

உணர்ச்சி வேகம் மிகுந்த பெண்களுக்கு இந்தக் குழாய்கள் இறுக மூடியிருப்பதை டாக்டர்கள் கண்டார்கள். நரம்பின் முறுக்கே இதற்குக் காரணமாக இருக்கலாம். உணர்ச்சி வேகம் காரணமாகச் சில சமயம் தொண்டை அடைத்துக்கொள்வதை இதற்கு உதாரணமாகக் காட்டலாம். இந்தக் குழாய்கள் மூடியிருந்தால் ஆண் பெண் தாதுக்கள் ஒன்றோடொன்று கலக்க முடியாது.

இந்தக் குழாய்கள் திறந்திருந்து ஆண் பெண் தாதுக்கள் கலந்தாலும், உணர்ச்சி வேகம் மிகுந்த பெண்களின் கர்ப்பப் பையின் உட்புறமுள்ள ஒரு மெல்லிய உறை, மிருதுவாகவும் தளர்ந்தும் இருப்பதற்குப் பதிலாகக் கடினமாகவும் விறைப்பாகவும் இருக்கும். 'பண்பட்ட கரு தங்கி வளர இது வசதி அளிக்காது; ஆகவே, இதனாலும் கர்ப்பந் தரிப்பது தடைப்படும்' என்று தெரிகிறது.

மூடியிருக்கும் 'பேலோப்பியன் ட்யூப்'களைத் திறக்கும் சிகிச்சைக்குமுன் அயோடின் எண்ணெய்த் திரவத்தால் குழாய்களை நிரப்பி அவைகளை எக்ஸ்-ரே எடுக்கிறார்கள். இது சிகிச்சை அல்ல; சிகிச்சைக்கு முதல் படிதான். ஆனால் கால்வாசி மலடிகள் இந்த முதல்படி முடிந்த சில நாளைக்கெல்லாம் கர்ப்பந் தரிக்கிறார்கள்.

"ஏன் இப்படி நேருகிறது என்று தெரியவில்லை. அயோடின் எண்ணெய் அல்லது எக்ஸ்-ரேக்களினால் ஜனனேந்திரியத்தில் ஏற்பட்ட ஏதாவது மாறுதல் காரணமாக இருக்கலாம்" என்று இந்த நிபுணர்கள் நினைக்கிறார்கள்.

"இந்த எக்ஸ்-ரேக்கு முன், 'இது எடுத்துக்கொண்ட பெண்கள் நாலுபேரில் ஒருத்தியாவது கர்ப்பம் தரிக்கிறாள்' என்று நாங்கள் அவர்களிடம் சொல்லுகிறோம். ஒருவேளை இந்தச் செய்தியால் மனத்தத்துவ மாறுதல் ஏற்படலாம். சில குடும்பங்களில் பெற்றோர் மணமாகுமுன் ஆண் பெண்கள் சேருவதற்கு எளிதில் இடம் அளிக்காமல் கடுமையாகத் தடைவிதித்துவந்ததே மலட்டுக்குக் காரணமாக இருக்கிறது. மணமான பிறகும் இந்தத் தடை நினைவுக்கு வந்து இளந் தம்பதிகளின் மனநிலை சரியாக அமையாது போய்விடுகிறது" என்று நிபுணர்கள் கருதுகிறார்கள்.

"பல பேருக்குக் குடும்ப டாக்டரே அவர்கள் வாழ்க்கைப் பிரச்னைகளுக்கு யோசனை சொல்லும் உயர்ந்த அதிகாரியாகி விடுகிறார். அநேகமாக இவர் அவர்களுக்குத் தந்தை ஸ்தானத்தையே வகிக்கிறார். மலடு போன்ற ரகசியமான விஷயங்களையும் அவரோடு மணமான இத்தகைய இளந்தம்பதிகள் விவாதிக்கிறார்கள். தங்கள் மனநிலையை அவர் ஆமோதிக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள். இதன் காரணமாகப் பெண்களுக்குத் திருப்தி ஏற்பட்டு நரம்பின் விறைப்புத் தணிந்து 'பேலோப்பியன் டியூப்'கள் தளர்ந்து திறந்துகொள்கின்றன" என்று சிலர் சொல்கிறார்கள்.

மலடாக இருக்கும் சில பெண்கள் டாக்டர்களை யோசனை கேட்க வருகிறார்கள். 'மாதவிடாய்களுக்கு இடைப்பட்ட காலத்தில் கர்ப்பம் தரிப்பதற்கு உரிய நாட்கள் எவை? கர்ப்பம் தரிக்காத நாட்கள் எவை?' என்ற விஷயத்தைக் கேட்கும்போது அவர்களுக்குத் தெரிவதில்லை. விடாய்க்காலத்துக்குச் சற்று முன்னும் விடாய் முடிந்த பின்னும் உள்ள சில நாட்களில்தான் பெண்களுக்குக் கலவி ஆசை அதிகமாக இருக்கும். ஆனாலும் இவை கர்ப்பம் தரிக்க ஏற்ற நாட்கள் அல்லவாம். இடைப்பட்ட நாட்களில் கலவி ஆசை மிகக் குறைவாக இருக்குமாம். அப்போதுதான் பெண்ணின் தாதுவும் கருவும் பண்பட்ட நிலையில் இருக்கும். கர்ப்பத்துக்கு ஏற்ற காலம் இது.

ஒவ்வொரு ஸ்திரீயின் விடாய் வட்டத்தையும் ஆராய்ந்து கர்ப்பத்துக்கு ஏற்ற காலத்தைக் குறிப்பிடுவது கர்ப்பம் ஏற்பட ஒரு நல்ல முறையாகும். ஆனால் இது மிகவும் சிக்கலான விஷயம்.

தத்து எடுத்துக்கொள்ளத் தீர்மானித்தவுடன் கர்ப்பந் தரிப்பதற்குக் காரணம், தான் குழந்தை பெறத் தகுதியற்றவள் என்ற உணர்ச்சி வேகம் இந்தத் திருப்தியால் குறைவதே.

ஒரு ஸ்திரீக்கு முதல் கணவனிடம் குழந்தை இல்லை. அவள் விதவையான பிறகு வேறொருவரை மணந்தாள்; இரண்டு குழந்தைகளுக்குத் தாயானாள். "கணவன்மார்கள் மலடல்ல. அந்த ஸ்திரீயின் மனசுக்குள் முதல் கணவனிடம் இருந்த ஏதோ ஒரு பகை உணர்ச்சியே மலட்டுக்குக் காரணம். இந்தப் பகையால் 'பேலோப்பியன் ட்யூப்'கள் மூடியே இருந்திருக்கும். இரண்டாவது மணத்தால் ஏற்பட்ட திருப்தியால் இவை திறந்துகொண்டிருக்கும்" என்பது நிபுணர்களின் கருத்து.

எனவே, அன்போடு கூடினால் தான் கர்ப்பமாக முடியுமே அன்றி வெறும் உடல் சேர்க்கை மட்டும் இருந்தால் பயனில்லை என்று தெரிகிறது.

குழந்தை பிறப்பதற்கு எவ்வளவோ அம்சங்கள் காரணமாகும். யாரையுமே மலடு என்று சொல்ல டாக்டர்கள் தயங்குவார்கள்; "ஜனனேந்திரியங்களை ரணசிகிச்சையால் நீக்கியிருந்தாலொழிய மலடாக முடியாது. வைத்திய உதவியால் இத்தகைய பலர் தாய் தந்தையராக முடியும்" என்பார்கள்.

மக்கள் வளம்பற்றிய ஆராய்ச்சி அதிகமாக ஆகப் பெண்கள்தான் மலட்டுக்குக் காரணம் என்ற பழங் கொள்கை மாறி வருகிறது. 33 முதல் 50 சதவிகிதம் வரை மலட்டுக்கு ஆண்களே காரணம் என்பது இப்போது தெரிந்திருக்கிறது.

எல்லா வகை வைத்திய முறைகளையும் பார்த்தும் குழந்தை இல்லாததற்குக் காரணம் தெரியாவிட்டால், "வீட்டுக்குப் போய் எல்லாவற்றையும் மறந்து உல்லாசமாகக் கொஞ்ச நாள் இருந்து பாருங்கள். எதைப்பற்றியும் கவலைப்பட வேண்டாம்" என்று சில வைத்தியர்கள் யோசனை கூறுகிறார்கள்.

ஒரு சிகிச்சையும் இல்லாமல் இப்படி உல்லாசமாக இருந்ததன் பயனாகவே சில சமயம் குழந்தை பிறந்து விடுகிறது; சிகிச்சையால் ஆகாத காரியத்தை மன அமைதியே சாதித்து விடுகிறது.

திருடியது யார்?

அப்பா முதலில் மனைவியைப் பார்த்தார். பிறகு மகனைப் பார்த்தார். கடைசியில் ஆத்திரத்தோடு, "இந்தப் பயல் என் சட்டை ஜேபியிலிருந்து பணம் திருடியிருக்கிறான்" என்று கத்தினார்.

"அவனை ஏன் வீணாகப் பழி சொல்கிறீர்கள்? நிச்சயமாகத் தெரியுமா உங்களுக்கு? நானே திருடியிருக்கக் கூடும்" என்று பரிந்துரைத்தாள் மனைவி.

"இல்லை, இல்லை! நீ இல்லை. நிச்சயம் அவன்தான் திருடியிருக்கிறான். ஜேபியில் கொஞ்சம் மிச்சக் காசு இருக்கிறதே!" என்றார் அப்பா.

—'வொர்ல்டு டைஜஸ்ட்.

நண்பர்கள் அநுதாபம்

"நான் பட்டினி கிடப்பதை என் நண்பர்களால் பார்க்கச் சகிக்கவில்லை."

"உம், அப்படியானால் அவர்கள் என்ன செய்கிறார்கள்?"

"என்னோடு பேசும்போது கண்ணை மூடிக்கொள்கிறார்கள்."

—'ஜெம்மெட்,' கோபென்ஹேகன்.

எகிப்தின் சர்வாதிகாரி

★

எளிய வாழ்வைக் கடைப் பிடித்துத் தம் நாட்டு மக்களுக் காகப் பாடுபட்டு வருபவர் நகீப். அவரைப்பற்றிய இந்த வர லாற்றுக்கு ஆதாரம்: (1) 'டைம்' என்ற அமெரிக்கப் பத்திரிகையிலும், (2) 'இல்லஸ்ட் ரேடட்' என்ற பிரிட்டிஷ் பத்திரி கையிலும் வெளியான விவரம்.

எல்லா நாட்டுத் தலைவர்களையும் போலவே எகிப்துக் குடியரசுத் தலைவர் ஜெனரல் முகம்மது நகீபும் நாடு முன்னேற ஒற்றுமை, ஒழுக்கம், உழைப்பு இவை வேண்டும் என்று முழங்கி வருகிறார்; தொழிலாளர்கள் சிப்பாய்களைப் போலக் கட்டுப்பாட்டுடன் வேலை செய்ய வேண்டும் என்கிறார். சிப்பாய்களிடமும் தொழிலாளிகளிடமும் அவர் கடுமையாகவே பேசுவதில்லை; குழந்தைகளுடன் பேசுவது போலவேதான் பேசுகிறார்.

ஒரு சமயம் நகீப் ரெயிலில் பிரயாணம் செய்துகொண்டிருந்தார். அப்பொழுது ஒரு விவசாயியைச் சிப்பாய் ஒருவன் துன்புறுத்துவதை ஜன்னல் வழியாக அவர் பார்த்துவிட்டார். உடனே ரெயிலை நிறுத்தி அந்தச் சிப்பாயைக் கடுமையாக எச்சரித்து அனுப்பினார்.

சென்ற ஆண்டு எகிப்து மன்னர் ஃபரூக் நாட்டைவிட்டு வெளியேறும்படி செய்தவர் நகீப்தான். தாய் நாட்டை விட்டுப் புறப்படுவதற்காக ஃபரூக் அலெக்ஸாந்திரியா துறைமுகத்தில் இருந்தபோது ஜெனரல் நகீபும் பக்கத்திலேயே இருந்தார்.

"மிஸ்டர் ஃபரூக், 1943-இல் பிரிட்டிஷார் தங்கள் அரண்மனையை டாங்கிகளுடன் சூழ்ந்துகொண்டு நஹாஸ் பாஷாவைப் பிரதம மந்திரியாக நியமனம் செய்யும்படி வற்புறுத்தியது நினைவிருக்கிறதா?" என்று நகீப் எகிப்தின் மாஜி மன்னரைக் கேட்டார்.

"நன்றாக நினைவிருக்கிறது" என்றார் ஃபரூக் நிதானமாக.

"அப்பொழுது ராணுவத்தில் நான் ஆபீஸராக இருந்தேன். என் மன்னருக்கு அன்று ஏற்பட்ட அவமானத்தைப் பொறுக்க முடியாமல் என் பதவியை நான் ராஜீநாமாச் செய்தேன். அப்போது நாங்கள் ராஜ விசுவாசத்துடன்தான் இருந்தோம்" என்று வருத்தத்தோடு சொன்னார்.

1942-க்குப் பிறகு 10 ஆண்டுகள் கடந்துவிட்டன. எகிப்தின் மன்னர் முடி துறந்து அயல் நாட்டில் தஞ்சம் புகுந்துவிட்டார்.

அன்று ராணுவத்தில் சிறிய பதவியில் இருந்த நகீப் இன்று எகிப்தின் சர்வாதிகாரி ஆகிவிட்டார். இந்த இடைக்காலத்தில் எகிப்தில் நடந்த அரசியல் சம்பவங்களே இந்தப் பெரிய மாறுதல்களுக்குக் காரணம்.

நகீப் போர்வீரர்களின் பரம்பரையில் பிறந்தவர்; போர் செய்வதற்கு வேண்டிய குணங்களை இயல்பாகவே பெற்றவர். இவருடைய தாய் வழிப் பாட்டனர் 1885-இல் நடந்த கார்ட்டூம் முற்றுகையில் ஆங்கிலப் படைகளுடன் போர் புரிந்து சண்டையில் இறந்தவர். சூடானை மீண்டும் கைப்பற்றுவதற்காகக் கிச்சனர் பிரபுவின் தலைமையில் சென்ற படையில் இவர் தந்தை காப்டன் யூசப் நகீபும் ஒருவர். இந்தப் படையுடன்தான் இன்று பிரிட்டிஷ் பிரதம மந்திரியாக இருக்கும் வின்ஸ்டன் சர்ச்சில் யுத்த நிருபராகச் சூடானுக்குச் சென்றிருந்தார். காப்டன் யூசப் நகீப் சூடான் நாட்டுப் பெண் ஒருத்தியை மணந்துகொண்டார். இவர்களுக்கு 9 குழந்தைகள் பிறந்தன. முகம்மது நகீப்தான் மூத்தவர். இவருக்கு இரண்டு தம்பிமார் இருக்கிறார்கள். ஜில்லா கமிஷனராகத் தந்தை வேலை பார்த்து வந்த 'வாட் மேடானி' என்ற கிராமத்தில் நகீப் வளர்ந்தார். வகுப்பில் குர்ஆன் படிப்பதில் இவர்தான் முதல்வர். கால் பந்து விளையாடுவதில் சகாக்களைவிடச் சமர்த்தர். நகீபின் தந்தை இவரைச் சட்டப் பரீட்சைக்கோ ஆசிரியர் பயிற்சிக்கோ அனுப்பலாம் என்று நினைத்துக்கொண்டிருந்தார். ஆனால் நகீபுக்கு அவற்றில் நாட்டமே ஏற்படவில்லை.

ஒரு நாள் தம் நண்பர்கள் தூங்கிக்கொண்டிருந்தபொழுது நகீப் கிராமத்தை விட்டே ஓடிவிட்டார். நடந்தும் படகிலுமாக 1,000 மைலுக்கு அப்பால் இருந்த கெய்ரோவை அடைந்தார். எப்படியாவது மேற்கு எகிப்தில் உள்ள ராணுவக் கழகத்தில் சேர்ந்து விட வேண்டும் என்பது நகீபின் நோக்கம். நகீபின் உற்சாகத்தையும் சுறுசுறுப்பையும் கண்ட 'அட்மிஷன் டிரிபியூனல்' என்ற ராணுவ அதிகாரிகள் இவரை ராணுவத்தில் சேர்த்துக்கொள்ளவே நினைத்தார்கள். ஆனால் நகீப் ராணுவத்திற்கு வேண்டிய உயரத்துக்கு ஓர் அங்குலம் குட்டையாக இருந்தார். இதனல் நகீபை ராணுவத்தில் சேர்த்துக்கொள்ள மறுத்துவிட்டார்கள். நகீப் மறுபடியும் தம் கிராமத்துக்குத் திரும்பினர். பிரார்த்தனைகளுக்குப் பிறகு இடைவிடாமல் தேகப்பயிற்சி செய்தார். ஒரு நாளைக்கு 5 தடவையாக ஒரு வருஷம் நகீப் உயருவதற்காக உடற்பயிற்சி செய்தார். அன்று அவர் உழைத்த உழைப்பு நல்ல பலனைத் தந்தது. ½ அங்குலம் உயர்ந்தார். ராணுவத்துக்கு அது போதாதென்று தெரிந்தும் நகீப் மீண்டும் கெய்ரோ சென்றார். அதிகாரிகள் நகீபின் இடைவிடா முயற்சியையும் அறிவுத்திறமையையும் கண்டு பாராட்டி ராணுவத்தில் சேர்த்துக்கொண்டார்கள். உறுதியும் கட்டுப்பாடும் நிறைந்த நகீப் ராணுவதந்திரம், சட்டம், சரித்திரம் முதலிய 2½ வருஷப் பாடங்களை 9 மாதங்களிலேயே நன்ருகக் கற்றுக்கொண்டார். சகாக்களைவிட எல்லாத் துறைகளிலும் உயர்ந்தவராக இருந்த நகீபை ராணுவ அதிகாரி

கள் ஒரு படைக்கு இரண்டாவது லெப்டினெண்டாக நியமித்தார்கள். அப்பொழுது நகீபுக்கு வயது 19; எகிப்து ராணுவம் பிரிட்டிஷாரின் ஆதிக்கத்தில் இருந்ததால் நகீபைப் போன்றவர்களுக்குப் பதவி உயர்வுகள் எளிதில் கிடைக்கவில்லை. ராணுவத்தில் இருக்கும்பொழுதே நகீப் சட்ட அரசியல் பொருளாதார அறிவு பெற்றார். ஓய்வு நேரத்தை வீணாக்காமல் தாமாகவே ஜெர்மன், பிரெஞ்சு, இத்தாலியன், ஆங்கிலம் ஆகிய மொழிகளைக் கற்றுக்கொண்டார். இப்பொழுது நகீப் ஹீப்ரூ மொழியைக் கற்றுக்கொண்டு வருகிறார்.

இரண்டாவது உலக யுத்தத்தின்போது பிரிட்டிஷ் படைகளே எகிப்தின் பாதுகாப்பை மேற்கொண்டன. அப்போது அட்ஜுடன்ட் ஜெனரல் காரியாலயத்திலே நகீப் தங்கிவிட்டார். 1948 வரை இவர் போர்க்களத்துக்கே சென்றதில்லை. அரபு லீக் நாடுகளுக்கும் இஸ்ரேலுக்கும் ஏற்பட்ட கொந்தளிப்பில் கடைசியில் இரு தரப்பாருக்கும் போர் மூண்டது. பாலஸ்தீனத் தாக்க எகிப்துப் படைகளை அனுப்பக்கூடாது என்பது நகீபின் கொள்கை. இஸ்ரேலியர்களின்மேல் உள்ள அநுதாபத்தால் அல்ல; பாலஸ்தீனத்தின்மேல் படையெடுத்தால் முடிவு என்னவாகும் என்பதை நகீப் அறிந்திருந்தார். பாலைவனப் போரில் எகிப்துப் படைகளுக்குப் பழக்கம் இல்லை. இது நகீபுக்குத் தெரியும்.

ராணுவத்தைக் கலந்துகொள்ளாமலே பாலஸ்தீனத்துக்குச் செல்லும்படி எகிப்து மன்னர் உத்தரவிட்டது பெரும் பிசகு என்று நகீப் வருத்தப்பட்டார். எகிப்தியப் படை சினாய் பாலைவனத்தில் இஸ்ரேலியர்களுடன் போரிட்டது. அப்பொழுது நகீப் பிரிகேடியராக இருந்தார். சண்டையில் நகீபின் தோளை ஒரு குண்டு துளைத்துச் சென்றது. மற்றொரு குண்டு இவர் மார்பில் லேசாகப் பட்டுவிட்டது. கடைசியில் இஸ்ரேலியர்கள் போரில் வென்றார்கள். மரணப் படுக்கையில் கிடந்த நகீபுக்கு இவர் சகோதரர் டாக்டர் முகம்மது நகீப் வேண்டிய சிகிச்சைகள் செய்தார். கடைசியில் அதிருஷ்டவசமாக நகீப் பிழைத்தார்.

பாலஸ்தீனத்தில் நடந்த போரையும் தம்முடன் சேர்ந்து போரிட்ட சகாக்களையும் நகீப் மறக்கவே இல்லை. சென்ற ஆண்டு நகீப் ராணுவ ஆஸ்பத்திரி ஒன்றுக்குச் சென்றிருந்தார். அப்பொழுது சூடான் தேசத்துச் சிப்பாய் ஒருவன் நகீபின் முன் மண்டியிட்டு வணக்கம் செலுத்தி அவர் கையை முத்தமிட முயன்றான். இதைக் கண்ட நகீப் அப்படியே அந்தச் சிப்பாயைத் தழுவிக்கொண்டார். பிறகு தம் அருகிலிருந்த பெரிய அதிகாரிகளிடம், "என்னுடன் சேர்ந்து பாலஸ்தீனத்தில் போரிட்ட சிப்பாய் இவன்" என்று அறிமுகம் செய்து வைத்தார்.

நகீப் எளிய வாழ்க்கை நடத்தி வருபவர். ராணுவப் புரட்சிக்கு முன்னும் இவர் சாதாரண வீட்டில் தம் மனைவி, மூன்று குழந்தைகளுடன் வசித்து வந்தார். அதிகமாகப் பேச மாட்டார்; பிறர்சொல்வதைக் கவனித்துக் கேட்பார். இவர் குர்ஆனில் சொல்லியிருக்கும் விதிகளை அப்படியே கடைப்பிடித்து வருபவர். இத்தகையவர்

எப்படி ஒரு பெரிய ராணுவப் புரட்சியை முன் நின்று நடத்தினார் என்று ஆச்சரியமாகத்தான் இருக்கிறது.

எகிப்தில் ஃபரூக் மன்னரின் நிர்வாகத்தில் லஞ்சம், ஊழல், காடு முழுவதும் வறுமை, நோய் இவை மலிந்துவிட்டன. "என்றுமே இந்த நிலையில்தான் இருக்க வேண்டுமா? வேறு வழியே இல்லையா?" என்று மக்கள் குமுறினார்கள். 1948 - இல் பாலஸ்தீனத்தில் எகிப்துப்படை இஸ்ரேலியர்களிடம் அடைந்த படுதோல்வி வேறு, எகிப்து மக்களுக்கு வேதனையையும் எரிச்சலையும் தந்தது.

இந்தத் தோல்விக்கு ராணுவத்தில் இருந்த ஊழலே காரணம் என்பது 1950 - இல் வெளியாயிற்று. பாலஸ்தீனத்துக்கு அனுப்பிய ஆயுத, வெடி மருந்துகள் மோசமாக இருந்ததால்தான் எகிப்து ராணுவம் அங்கே படுதோல்வி அடைந்தது என்று தெரிந்தது. 'விடுதலை அதிகாரிகள்' என்ற முக்கியமான வாலிப வீரர்கள் ஃபரூக் மன்னரிடம் ராணுவ ஊழலைப்பற்றி விசாரிக்க வேண்டும் என்று விண்ணப்பித்துக் கொண்டார்கள். ஆனால் அதை ஃபரூக் சட்டையே செய்யவில்லை. "ஃபரூக்கின் காதுகள் அப்பொழுது செவிடாக இருந்தன. கண்கள் இருண்டிருந்தன. இந்த விண்ணப்பம் ஃபரூக் மன்னருக்குக் குழந்தைகளின் விளையாட்டாகத் தோன்றியது" என்று நகீப் ஓர் இடத்தில் குறிப்பிட்டார்.

மன்னரின் அசட்டையைக் கண்ட 'விடுதலை அதிகாரிகள்' ராணுவப் புரட்சியை நடத்திவிடத் தீர்மானித்துத் திட்டமும் தயாரித்துவிட்டார்கள். மதிப்பும் நம்பிக்கையும் வாய்ந்த நகீபையே ராணுவப் புரட்சிக்குத் தலைமை வகிக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். நாட்டு நன்மையையும் மனச் சாட்சியையும் எண்ணினார் நகீப். எவ்வளவோ யோசனைகளுக்குப் பிறகு நகீப் ராணுவப் புரட்சிக்கு இணங்கினார். சென்ற ஆண்டு ஜூலை மாதம் 23 - ஆம் தேதி இரவு 1-30 மணிக்கு எகிப்தில் ராணுவப் புரட்சி நடந்தது. கெய்ரோவின் முக்கியமான இடங்களை நகீபின் ராணுவம் கைப்பற்றி விட்டது. 'விடுதலை அதிகாரி'களின் வீரர்கள் மன்னரின் 11 ஜெனரல்களையும் மற்றப் படைத் தலைவர்களையும் கைது செய்தார்கள். அரண்மனையை முற்றுகையிட்டார்கள்.

ஜெனரல் நகீபின் சகோதரர் அலி முகம்மது ராணுவப் புரட்சியின்போது கெய்ரோவில்தான் முக்கியமான ராணுவப் பதவி ஒன்றில் இருந்தார். அவரையும் கைது செய்த பிறகு ஒரு ராணுவ உத்தியோகஸ்தர், "அலியின் மனைவிக்கு இந்தச் செய்தியைத் தனியாகச் சொல்ல வேண்டாமா?" என்று ஜெனரல் நகீபைக் கேட்டார். "கைதான எல்லா ஜெனரல்களின் மனைவிகளுக்கும் தனித் தனியாகச் செய்தி அனுப்பினீர்களா? பின் ஏன் அலியின் மனைவிக்கு மட்டும் தனிச் செய்தி அனுப்ப வேண்டும்? மற்றவர்கள் விஷயத்தில் என்ன நடந்ததோ அதுவே நடக்கட்டும்" என்று பதில் அளித்தார் நகீபு. ராணுவ உத்தியோகஸ்தரும் மற்றவர்களும் நகீபின் உறுதியைக் கண்டு வியந்தார்கள்.

நாட்டில் ஓரளவு அமைதி ஏற்பட்டதும் 8 நாட்களுக்குப் பிறகு அலி முகம்மதை நகீப் விடுதலை செய்தார்; ராணுவத்திலிருந்து முற்றும் ஓய்வு பெறும்படி நகீப் அவருக்கு உத்தரவிட்டார். ஜெனரல் நகீபும் அலி முகம்மதும் சந்தித்தார்கள். "அண்ணு, உன்னை நான் மிகவும் பாராட்ட வேண்டும். ராணுவப் புரட்சியின்போது நீ நடந்துகொண்ட விதத்தைத்தான் நான் உன்னிடம் எப்பொழுதும் எதிர்பார்க்கிறேன்" என்று சொல்லி அலி முகம்மது நகீபின் கைகளைக் குலுக்கினர்.

ஃபரூக் மன்னர் முடி துறந்ததும் எகிப்தின் அரசியலை இனி அரசியல்வாதிகளிடமே ஒப்படைக்கப் போவதாக நகீப் பிரகடனம் செய்தார். ஆனாலும் எகிப்தில் இருந்த அரசியல் நிலையை எண்ணித் தாமே நாளடைவில் முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டுவிட்டார். ஃபரூக் மன்னர் எகிப்தை விட்டுச் சென்ற 6 வாரங்களில் நகீப், நாட்டில் பல புரட்சிகரமான மாறுதல்களைச் செய்தார். மன்னராட்சியைச் சட்ட பூர்வமாக ஒழித்தார்; லஞ்ச ஊழலை நீக்கினர்; பெரிய பெரிய நிலங்களை நிலமில்லாதவர்களுக்குப் பிரித்துத் தர ஏற்பாடு செய்தார்.

ஓரளவுக்கு மேல் செல்வம் குவித்தவர்களின்மீது அதிக வரிகளை விதித்தார். ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக விலைவாசிகளைக் குறைத்தார்.

ராணுவத்தின் உதவியால் நடுத்தர வகுப்பினர் நடத்திய எகிப்திய ராணுவப் புரட்சியை நாட்டில் உள்ள வியாபாரிகளும் மாணவர்களும் தொழிலாளர்களும் ஆதரித்தார்கள். சூயஸ் கால்வாய்ப் பிரதேச சம்பந்தமாக பிரிட்டிஷாருக்கும் நகீபுக்கும் மன வேற்றுமை இருந்தாலும், "பல ஆண்டுகளாக லஞ்சமும் பஞ்சமும் மிகுந்து குழப்பத்தால் என்ன செய்வது என்று திகைத்திருந்த மக்களுக்கு வழி காட்டக் கடைசியில் ஒரு நல்ல மனிதர் கிடைத்தார்" என்று நகீபைக் கெய்ரோவில் உள்ள ஒரு பிரிட்டிஷ் பிரமுகர் பாராட்டியிருக்கிறார்.

என்ன பெயர் வைப்பது?

ஜே. எம். பாரி என்ற பிரபல ஸ்காட்டிஷ் நாவலாசிரியரிடம் ஒரு சமயம் வாலிபன் ஒருவன் வந்தான். "நான் ஒரு புஸ்தகம் எழுதியிருக்கிறேன். அதற்கு என்ன பெயர் வைப்பது என்று புரியாமல் தவிக்கிறேன். நீங்கள் உதவி செய்வீர்களா?" என்று கேட்டான்.

"அதில் தாரை வருகிறதோ?"

"இல்லை."

"தம்பட்டம் வருகிறதோ?"

"இல்லை."

"சரி அப்படியானல், 'தாரை இல்லை, தம்பட்டம் இல்லை' என்று பெயர் வைத்தால் போகிறது" என்றூர் ஆசிரியர் பாரி.

—என். வி. பீல், 'போஸ்ட் ஹால் ஸிண்டிகேட்.'

பாபுராவ் பதில் சொல்லுகிறார்

கேட்பவரின் கேள்விகளுக்கு, 'ஃபிலிமிண்டியா' ஆசிரியர் பாபுராவ் அளிக்கும் பதில்கள் பிரசித்தம். இவைகளில் விறுவிறுப்பும் கேலியும் நிறைந்திருக்கும். இவை 'ஃபிலிமிண்டியா' ஆகஸ்ட் '53 இதழில் வெளியானவை.

கேள்வி: கடைகளில் எத்தனையோ சோப்புகள் வந்திருக்கின்றனவே?

பதில்: ஆம். ஆனால் தேசத்தில் அவற்றை உபயோகிக்கும் அளவுக்குத் தண்ணீர் இல்லை. அதனால் ஜனங்கள் இன்னும் அழுக்கிலும் அசுத்தத்திலும் வாழ்ந்து வருகிறார்கள்.

* * *

கே: பந்தயக்குதிரை எதைத் தின்கிறது?

ப: பந்தயக்குதிரை கட்டிப் பொன்னை லத்தியாக்கி லட்சாதிபதியைப் பிட்சு ஆக்குகிறது. அது நாலு காலையுடைய அற்புதமான ரசாயன நிபுணன்.

* * *

கே: நம் நாட்டுப் படத் தொழிலில் அயலார் எவ்வளவு பேர் இருக்கிறார்கள்?

ப: அநேகமாக எல்லோரும் அயலார்களே; நம்முடைய பண்பாட்டுக்கும் மரபுக்கும் முழுக்க முழுக்க அயலார்களே!

* * *

கே: இந்தியா-பாகிஸ்தான் வானவிளிம்பில் ஏதேனும் ஒளியைக் காண்கிறீர்களா?

ப: இன்னும் இருபது வருஷத்துக்குக் காண முடியாது.

* * *

கே: உங்கள் வாழ்க்கைக்குரிய நீதி என்ன?

ப: வேலை செய்யும்போது கீழே பார்; பிரார்த்திக்கும்போது மேலே பார்; மற்ற வேளைகளில் உலகத்தார் கண்களை நேராகப் பார். இப்படிச் செய்துவிட்டு முடிவை இறைவனிடம் விட்டுவிடு.

* * *

கே: சந்திரன் உண்மையில் அழகாக இருக்கிறானா?

ப: நான் சமீபத்தில் அவனைப் பார்க்கவில்லை. நான் சின்னக் குழந்தையாக இருந்தபோது அவன் அழகாகத்தான் இருந்தான்.

* * *

கே: ஷெர்ப்பா டென்ஸிங் சொர்க்கத்தைத் தொட்டாரா?

ப: இல்லை. அவர் மாநிலத்தின் முடியைத்தான் தொட்டார். சொர்க்கத்தைத் தொட அவர் தூங்கிக்கொண்டல்லவா ஏற வேண்டும்?

* * *

கே: அமெரிக்க ஜனாதிபதி ஐஸன்ஹோவர் நகீபுக்கு கைத் துப்பாக்கியை அன்பளிப்பாகக் கொடுத்தாரே; ஏன்?

ப: பட்டாளத்தில் இருப்பவர்கள் தற்கொலை செய்துகொள்ள விஷத்தை உபயோகப்படுத்துவதில்லை. நகீபுக்கு என்றைக்காவது ஒரு நாள் அந்தத் துப்பாக்கி வேண்டியிருக்கும்.

கே: ஜயப்பிரகாச நாராயண் விநோபா பாவேயை ஒரு மகாத்மா என்று சொல்கிறாரே; என்ன அர்த்தத்தோடு சொல்கிறார்?

ப: சோஷலிஸ்டுக் கட்சிக்கு ஒரு மகாத்மா வேண்டாமோ?

* * *

கே: என் ஆங்கிலோ - இந்தியர் இந்தியாவிலே ஒட்டிக்கொண்டிருக்கிறார்கள்?

ப: அவர்களிடம் பிரயாணத்துக்கு வேண்டிய பணம் இல்லை. இலவசமாகப் பிரயாணச் சீட்டுக் கொடுத்தால் ஒரு மாசத்தில் இந்தியாவை விட்டுப் போய் விடுவார்கள்.

* * *

கே: தாய்ப்பாலில் என்ன இருக்கிறது?

ப: மண்ணின் சாரம்.

கே: இந்திய அரசியல் திட்ட அமைப்பைப்பற்றி ஏதாவது சொல்லுங்கள்.

ப: சொர்க்க பூமிக்கு ஏற்றது அது. இந்த உலகத்துக்கு ஏற்காத அதியுத்தமமான திட்டம் அது.

* * *

கே: ஆதி மனிதன் எப்படிக் காதல் செய்தான்?

ப: அவன் கவிதையை உபயோகிக்கவில்லை; குகையைத் தான் உபயோகித்தான்.

* * *

கே: உலக சமாதானத்தை உண்டாக்குபவர்களில் முதல்வர் யார்?

ப: மாலென்கோவ்! யுத்தம் செய்யக்கூடியவன் யுத்தம் செய்யாமல் இருந்தால் அவனே சமாதானத்தை உண்டாக்குகிறவன்; தனக்குச் சண்டை போடச் சக்தியில்லாமல் சதா சமாதானத்தைப் பற்றிப் பேசுகிறவன் அல்ல.

ஒரு பரீட்சை

பிரபல விஞ்ஞானி எடிசன் தம்மிடம் வேலைக்கு வருகிறவர்களைத் தந்திரமாக ஏதாவது ஒரு பரீட்சை செய்வது வழக்கம். ஒரு முறை சில விண்ணப்பதாரர்களுக்கு அவர் போட்ட கேள்வி இது:

"உன் கையில் கடைசியாக இருந்த பத்து வெள்ளிக் காசும் போய்விட்டது. இனி வைத்து விளையாட ஒரு தம்பிடி கிடையாது. யாரோ ஓர் அந்நியனுடன் சீட்டாடுகிறாய். உன் கையில் நல்ல சீட்டுக் கட்டுகிறது. களத்தில் அரை டாலர் கிடக்கிறது. அந்நியன் கால் டாலர் களத்தில் போடுகிறான். நீ என்ன செய்வாய்?"

ஒரு விண்ணப்பதாரர், "நான் பணம் வைத்துச் சீட்டாடும் வழக்கமில்லை" என்று பதில் எழுதினான்.

அவனுக்கே வேலை கிடைத்தது.

—கார் ஷான்னன்

பச்சாத்தாபம்

சரத்சந்திரர்

வங்காளத்தில் மட்டுமன்றி இந்தியாவின் மற்ற மாகாணங்களிலும் சரத் சந்திரரின் புகழ் பரவி அங்கங்கே வழங்கும் மொழிகளின் இலக்கிய வளத்தைப் பெருக்கியிருக்கிறது. சமீபத்தில் அவருடைய நினைவுநாளைப் பல இடங்களில் கொண்டாடினார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் அவரது உருக்கமான சிறுகதை ஒன்றை வங்க மூலத்திலிருந்து இங்கே மொழிபெயர்த்துத் தந்திருக்கிறார். அன்பர் த. நா. ஸேனாபதி

அந்தப் பையன் யாரோ தெரியாது; தாய் தந்தையற்ற அநாதைச் சிறுவன். ராமதாஸ் பாபுவின் வீட்டில் ஏவலாளாக இருந்து வந்தான். "பையன் புத்திசாலியாகவும் இருக்கிறான். சொன்ன வேலையையும் சரியாகச் செய்கிறான்" என்று அக்கம் பக்கத்தில் எல்லாருமே சிறுவனைப் பாராட்டி வந்தார்கள்.

தானாகவே சிரித்த முகத்தோடு எந்தக் காரியமாக இருந்தாலும் எடுத்துப் போட்டுக்கொண்டு செய்வான். எஜமானருக்கு எண்ணெய் தேய்த்து விடுவது முதல் பசு மாட்டுக்குத் தீனி போடுவது வரை ஒவ்வொன்றையும் மறக்காமல் செய்வான். எப்போதும் சுறுசுறுப்பாக இருப்பான்.

பையன் பெயர் ஹரிசரணன். சில சமயம் எஜமானி அம்மாளே கூட, "இதென்னடா, பேய் மாதிரி வேலை செய்கிறாய்? ஒரு நிமிஷம் ஓய்ச்சல் ஒழிவில்லையா?" என்று அவனை அன்போடு கடிந்துகொள்வாள். ஆனால் ஒரே ஒரு குறை அவனிடத்தில் உண்டு; எப்போது பார்த்தாலும் இடி இடியென்று சிரிப்பான். "என்ன அம்மா பண்ணுவது? சும்மா இருந்தால் நடக்குமா?" என்பான். சில சமயம் இந்தச் சிரிப்பு எஜமானியம்மாளுக்கு ஏனோ எரிச்சலாக இருக்கும்; இருந்தாலும் உடனே அந்த அநாதைச் சிறுவனின் கபடமற்ற முகம் அவள் உள்ளத்தை உருக்கி விடும்.

சுரமா ராமதாஸ் பாபுவின் கைக் குழந்தை; வயது மூன்று இருக்கும் அவளுக்கு. பால் குடிப்பது, சாப்பிடுவது என்றால் அழுது ஆர்ப்பாட்டம் செய்வாள். தாய் என்ன அதட்டினாலும் கேட்க மாட்டாள். கடைசியில் ஹரிசரணன் வந்து இடுப்பில் எடுத்துக் கொண்டு புழைக்கடைப் பக்கமாகப் போய் அவளைத் 'தாஜா

செய்து சாப்பிட வைத்துவிடுவான். இப்படி ஒரு வருஷம் கழிந்தது.

* * *

ராமதாஸ் பாபுவின் மகன் துர்க்காதாஸ் கல்கத்தாவில் படித்துக்கொண்டிருந்தான். வீட்டுக்கு வருவதென்றால் நீராவிப் படகில் வந்து இறங்கி அங்கிருந்து பத்து மைல் நடக்க வேண்டும். இதனால் அவன் எப்போதாவது ஒரு தரந்தான் ஊருக்கு வருவது வழக்கம். இப்போது பி. ஏ., தேறி வீட்டுக்கு வந்துகொண்டிருந்தான். ஏற்கனவே மணமாகி மனைவி கல்கத்தாவில் இருந்தாள். மாமனார் பெரிய ஆசாமி; இந்த ஒரு வருஷமாக அவர் வீட்டில்தான் இருந்து படித்து வந்தான். மனைவி நோஞ்சல்; அதனால் இவ்வளவு தொலைவு அழைத்து வரவில்லை. இது தாயாருக்குக் கொஞ்சம் வருத்தமாகத்தான் இருந்தது. இருந்தாலும் என்ன செய்வது? பையன் பட்டணத்தில் வேலை பார்த்துப் பெரிய மனுஷனாக வேண்டுமோ இல்லையோ? இவ்வளவு வளர்த்துவிட்டுக் கடைசியில் நாட்டுப்புறத்தில் அவனைக் கட்டிப் போடுவதென்றால் நன்றாக இருக்குமா?

பிள்ளை ஒரு வருஷங் கழித்து வீட்டுக்கு வந்திருந்தான். அவனுக்கு எது எது பிடிக்கும் என்று அவளுக்குத் தெரியும். அன்று வீட்டில் பெரிய விருந்துக்கு ஏற்பாடாயிற்று.

வாசலில் பல்லைக் காட்டிக் கொண்டு ஹரிசரணன் நின்று கொண்டிருந்தான். "இந்தப் பையன் யார், அம்மா?" என்று விசாரித்தான் துர்க்காதாஸ்.

தாய், "யாரோ அனாதைப் பிள்ளை, பாவம். இட்ட வேலை எதுவாக இருந்தாலும் முகம் சிடுக்காமல் செய்கிறான். என்ன சொன்னாலும் கோபமே கிடையாது. இப்படியேதான் அசட்டுச் சிரிப்புச் சிரித்துக்கொண்டு இருப்பான்" என்றாள் ஆதரவுடன்.

துர்க்காதாஸுக்கும் இப்போது ஒரு வேலைக்காரப் பையன் தேவையாகத்தான் இருந்தான். ஹரிசரணன் 'பெரிய எஜமானை'க் கவனிப்பது போலவே, 'சின்ன எஜமானு'க்கும் ஒரு குறையும் இராதபடி பார்த்துக் கொண்டான். 'சின்ன எஜமான்' கல்கத்தாவுக்குப் போகும்போது தன்னையும் அழைத்துக் கொண்டு போவார், எல்லா வேடிக்கையையும் பார்க்கலாம் என்று ஹரிசரணனுக்கு ஆவல்.

* * *

அன்று துர்க்காதாஸ் பக்கத்து ஊரில் ஒரு விருந்துக்குப் போக வேண்டியிருந்தது. "இரவு வெகு நேரங் கழித்துத்தான் வீடு திரும்புவேன். அதற்குள் எல்லாக் காரியத்தையும் முடித்துக் கொண்டு படுக்கப் போ" என்று ஹரிசரணனிடம் சொல்லிவிட்டுப் போனான். துர்க்காதாஸ் வெளிப் பக்கம் படுத்துக்கொள்வது வழக்கம். அவனுக்குப் படுக்கை போடுவது, காலைப் பிடிப்பது எல்லாம் ஹரிசரணன்தான். சின்ன எஜமான் கண்ணயர்ந்ததும் ஹரிசரணன் அருகிலிருந்த வராந்தாவில் படுக்கப் போய்விடுவான்.

அன்று மாலை ஹரிசரணனுக்கு கல்ல தலைவலி. ஜுரம் வரும்

போலவும் இருந்தது. மலேரியா மிகுந்த அந்தப் பிராந்தியத்தில் அடிக்கடி அவனுக்கு இப்படிக் காய்ச்சல் வருவது வழக்கம். அவனால் உட்கார முடியவில்லை. வராந்தாவில் வந்து படுத்தான்; 'சின்ன எஜமானி'ன் படுக்கையை இன்னும் தட்டி விரித்துப் போடவில்லை என்ற நினைவு கூட அவனுக்கு இல்லை, பாவம். அவ்வளவு சோர்வு அவன் உடம்பில்.

இரவு மற்ற எல்லாரும் சாப்பிடும்போது ஹரிசரணனைக் காணவில்லையே என்று எஜமானியம்மாள் அவனைத் தேடிக்கொண்டு வந்தாள். அவன் வராந்தாவில் படுத்திருப்பதைக் கவனித்ததும் அருகில் வந்து அவன் நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள். கொதித்தது. இந்தச் சமயத்தில் அவனைச் சாப்பிடும்படி தொந்தரவு செய்ய வேண்டாம் என்று உள்ளே போய் விட்டாள்.

இரவு பன்னிரண்டு மணி இருக்கும். துர்க்காதாஸ் விருந்துக்குப் போய்விட்டுத் திரும்பி வந்தான். திண்ணையில் படுக்கை, பாய் ஒன்றையும் காணவில்லை. தூக்கக் கலக்கம்; வழி முழுதும் நடந்தே வந்த அலுப்பு. 'வந்ததும் எல்லாம் தயாராக இருக்கும்; அப்படியே ஹுக்காவில் இரண்டு இழுப்பு இழுத்துவிட்டுப் படுத்தால் காலையில் எழுந்திருக்கும்போது நிம்மதியாக இருக்கும்' என்று எண்ணிக்கொண்டிருந்தான்.

இப்போது நிலைமை அதற்கு மாறாக இருந்ததைக் கண்டு அவனுக்குக் கோபம் கோபமாக வந்தது: "ஹரி, அடே ஹரி!" என்று கூவினான். ஆனால் ஹரி, பாவம், வராந்தாவின் மூலையில் ஜுர வேகம் தாங்காமல் உணர்வற்றுக் கிடந்தான்.

இதைக் கவனித்ததும் துர்க்காதாஸ், "பயல் தூங்குகிறதைப் பார்! போர்த்துக் கொண்டே வேறு கிடக்கிறான்! திமிரைப் பார்" என்று பொறுமை இழந்தவனாய் ஹரிசரணனைத் தலைமயிரைப் பிடித்துத் தூக்கினான். அப்போதும் உணர்வின்றிப் பையன் தொங்கி விழுந்தான். "பாசாங்கைப் பார்!" என்று துர்க்காதாஸ் தன் கைப் பிரம்பால் அவன் முதுகில் ஓங்கி இரண்டு அடி கொடுத்தான்.

ஹரிசரணன் ஒரு தள்ளுத் தள்ளி மிகவும் சிரமப்பட்டு எழுந்து உட்கார்ந்தான். அன்று இரவு காலைப் பிடிக்கும்போது சுடச் சுட ஒரு பொட்டுக் கண்ணீர் அந்தச் 'சின்ன எஜமானி'ன் காலில் விழுந்தது.

* * *

இரவு முழுவதும் துர்க்காதாஸுக்குத் தூக்கமே வரவில்லை. அந்தக் கண்ணீர் அவன் காலில் பட்டபோது மிகவும் உஷ்ணமாக இருந்ததுதான் இதற்குக் காரணம். 'பாவம், பையனை அடித்துவிட்டோம்' என்று துர்க்காதாஸுக்கு வேதனை. அதற்குள் பையன் வராந்தா மூலையில் போய்ப் படுத்துவிட்டான். 'அவனைப் போய்ப் பார்த்துவிட்டு வரலாம்' என்று துர்க்காதாஸுக்குத் தோன்றிற்று. ஆனாலும் உடனே அது கவுரவக் குறைவென்று அவனுக்குப் பட்டது; இப்படியே வெகு நேரம் வரை எண்ணி எண்ணி விடிகாலையில் கண்ணயர்ந்து விட்டான்.

காலையில் வழக்கம் போல் ஹரிசரணன் எழுந்து 'சின்ன எஜமானு'க்குக் கை கழுவத் தண்ணீர், முகம் துடைத்துக் கொள்ளத் துண்டு எல்லாம் கொண்டு வந்து தயாராகக் காத்திருந்தான். பையனின் முதுகில் பிரம்புத் தழும்பு இன்னும் அப்படியே இருந்தது; முகம் சோர்வுற்றிருந்தது. அப்போதாவது பையனை அன்போடு அழைத்து, "ஏதோ ஆத்திரத்தில் செய்து விட்டேன்!" என்று சொல்லியிருக்கலாம். சொல்ல வேண்டும் என்றுதான் இருந்தது துர்க்கா தாஸுக்கும். ஆனால் அந்த 'வரட்டுக் கவுரவந்'தான் மறுபடியும் வந்து தடையாக நின்றது.

காலை மணி ஒன்பது இருக்கும். துர்க்காதாஸுக்குக் கல்கத்தாவிலிருந்து அவசரத் தந்தி ஒன்று வந்தது. கை நடுங்க அதை வாங்கிப் பிரித்துப் பார்த்தான். 'உன் மனைவிக்கு உடம்பு சரியாக இல்லை; ஆபத்தான நிலை. உடனே புறப்பட்டு வரவேண்டும்' என்று அதில் கண்டிருந்தது. துர்க்காதாவின் வயிற்றில் பகீரென்றது.

வீட்டில் விடை பெற்றுக் கொண்டு வண்டியில் ஏறும்போது ஹரிசரணன்தான் சாமான்களை அதில் எடுத்து வைத்தான்; துர்க்காதாஸ், 'ஐயோ! இந்தப் பையனை அடித்தோமே! அதற்கேற்ற தண்டனையோ இது!' என்று எண்ணிக்கொண்டானேயொழிய அந்தச் சிறுவனின் மனங் குளிர ஒரு வார்த்தை சொல்ல அவனுக்கு வாய் வரவில்லை.

* * *

துர்க்காதாவின் மனைவி கர்ப்பிணி; அதோடு அவளுக்குக் கடும் ஜுரம் கண்டிருந்தது. கடைசியில் எப்படியோ தப்பிப் பிழைத்தாள்; இரண்டொரு நாளில் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அன்று துர்க்காதாவின் மகிழ்ச்சிக்கு எல்லையில்லை.

சற்று நேரங்கழித்து ஊரிலிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில் அவன் மனைவியின் உடல் நிலையைப்பற்றி விசாரித்து எழுதியிருந்தார் ராமதாஸ் பாபு. கடைசியில் 'குறிப்பு' என்று போட்டிருந்தது. "ஒரு வாரம் கடுங் காய்ச்சல் அடித்து, பாவம், ஹரிசரணன் இறந்துவிட்டான். குழந்தை சுரமா அழுது மாய்ந்து போகிறாள். அவளுக்கு எப்படிச் சமாதானம் சொல்வதென்று தெரியாமல் தவிக்கிறோம்" என்று கண்டிருந்தது.

துர்க்காதாஸை ஈட்டி கொண்டு குத்துவதுபோல் இருந்தது, இந்தச் செய்தி. கபடமற்றுச் சிரித்துக் கொண்டு நிற்கும் அந்தச் சிறுவனின் உருவம் அவன் மனக் கண்முன் வந்தது. கொலைக் குற்றம் செய்தவனைப் போல் தவித்தான் துர்க்காதாஸ். "பகவானே, அவன் போய்விட்டான்; மகா சாது. என் குழந்தையை அந்தப் பாவம் பாதிக்காமல் இருக்க வேண்டுமே" என்று உள்ளூற வேண்டிக்கொண்டான்.

தன் பாவத்துக்குப் பிராயச்சித்தமாக அந்தக் குழந்தைக்கு 'ஹரிசரணன்' என்று பெயர் வைத்தான்.

அப்படியும் அவன் மனத்தில் நிம்மதி ஏற்பட்டால் தானே!

புத்தகப் பகுதி:

எதிரொலி

ய. கோ. ஜோஷி

★

கா. ஸ்ரீ. ஸ்ரீ. மொழிபெயர்ப்பு

'உலகத்தை உள்ளபடி சித்திரிப்பது இலக்கியத்தின் செயலா, அல்லது அது இன்னபடி இருக்க வேண்டும் என்று சொல்வது இலக்கியத்தின் செயலா?' என்ற கேள்வி மிகவும் பழமையானது. வாழ்க்கையைத் தாம் கண்டபடியே சித்திரிப்பவர் இந்த ஆசிரியர். 'எதிரொலி' என்ற இந்த நாவலின் கதையை அடிப்படையாகக் கொண்டு மராட்டியிலும் ஹிந்தியிலும் 'என் மகன்' என்ற பிரபாத் படங்கள் வெளியாகியுள்ளன. சுந்தரத்தின் குரல் எவ்வளவு தூரம் நளினியின் உள்ளத்தில் எதிரொலித்தது என்பதை இந்தக் கதையின் முடிவிலே காணலாம்.

★ ★

காப்பிரைட்: எதிரொலி (மராட்டி நாவல்), விலை ரூ. 2; ய. கோ. ஜோஷி, புனா.

எதிரொலி

★

தான் கொள்கைகளை நிறைவேற்றுவதற்காகச் சுந்தரம் அந்தப் பத்திரிகையை நடத்தினன். இரண்டு ஆண்டுகளாக அவனுக்கு மேன்மேலும் நஷ்டமே வந்தது. உடலின் எடையும் குறைந்தது. அவன் இப்போது கணக்கு எழுதுவதையே விட்டுவிட்டான். அதைச் சரியாக வைத்துக்கொள்ளும் கடன்காரர்கள் இருக்கும்போது அந்தக் கவலை அவனுக்கு எதற்கு!

நண்பன் ராமநாதன் அவனுக்குச் சில பணக்காரர்களிடமிருந்து நன்கொடை வாங்கிக் கொடுப்பதாகச் சொன்னன். சுந்தரம் அதை மறுத்துவிட்டான்; "என் பத்திரிகை என் சுதந்தரக் கொள்கைகளைக் கொண்டு பிழைக்காவிட்டால், அது இல்லாமற் போவதே நல்லது" என்ருன். ஆனல் அவன் யாரிடமிருந்தாவது கடன் பெற்றுக்கொள்ளத் தயாராக இருந்தான்.

ராமநாதன் கடனுக்கு ஏற்பாடு செய்தான். அதற்கு முன்னல், கடன் கொடுக்கும் கனவானுக்கு அச்சாபீசில் ஒரு வரவேற்பு நடந்தது. தன் விருப்பத்துக்கு மாருகச் சுந்தரம் அந்த வரவேற்புக்குச் செலவழித்தான். அந்தப் பணத்தைக் கொண்டு அவன் தொழிலாளிகளுக்கு ஒரு மாதச் சம்பளம் கொடுத்திருக்கலாம்.

வரவேற்பு முடிந்ததும் அந்தக் கனவானிடம் ராமநாதன் கடன் பேச்சை எடுத்தான். "சுந்தரத்தின் கொள்கைகளைப்பற்றி நான் முன்னமே கேட்டிருக்கிறேன். அவருடைய பத்திரிகையையும்பார்த்திருக்கிறேன். கடன் வாங்குவது உங்கள் பெருமைக்கு ஏற்றதல்ல" என்று உபதேசம் செய்து, அந்தக் கனவான் போய்விட்டார். போகும்போது, "எனக்குப் பத்திரிகை தவருமல் ஒரு பிரதி அனுப்புங்கள்" என்று சொல்லமட்டும் அவர் மறக்கவில்லை.

அவர் போனதும், தொழிலாளிகள் கும்பலாக வெளியே நிற்பதைக் கண்டான் சுந்தரம். மூன்று மாதச் சம்பளம் பாக்கி இருப்பதனல் அவர்கள் வேலை நிறுத்தம் செய்திருப்பதாகத் தெரிந்தது. ராமநாதன் அவர்களுக்குத் தலைவன் என்பதை அறிந்ததும், சுந்தரத்தின் வருத்தம் அதிகமாயிற்று.

"நாளைக்கு இதே நேரத்துக்கு இங்கே வாருங்கள். நான் ஏதாவது பணம் கொடுக்க ஏற்பாடு செய்கிறேன்" என்று சுந்தரம் வேண்டிக்கொண்டான்.

தொழிலாளிகள் ராமநாதனேடு போய்விட்டார்கள். சுந்தரம் அச்சாபீஸின் வெளிக்கதவை மூடிவிட்டு உள்ளே வந்தான். கம்பாஸிட்டர் கோந்து மட்டும் வேலை செய்துகொண்டிருந்தான். சுந்தரம் அவனைக் கூப்பிட்டு, "உள்ளே இருக்கும் பழைய பத்திரிகைகளை எங்காவது விற்றுவிட்டு வா" என்ருன்.

கோந்து அவற்றைக் கடையில் போட்டுப் பணம் கொண்டுவருவான். சுந்தரம் அடுத்த இதழைக் கொண்டு வருவதிலே ஈடுபட்டான். அவனுக்கு நல்ல உதவியும் கிடைத்துவிட்டது. நளினி தானாக முன்வந்து அவனுக்கு இரண்டாயிரம் ரூபாய் கொடுத்தாள்.

கோந்துவுக்கு ஊரில் கொஞ்சம் நிலபுலன்கள் இருந்தன. தம்பிகளோடு ஊரில் வயலிலே வேலை செய்வது அவனுக்குப் பிடிக்கவில்லை. அவனுடைய தகப்பனார் பெண்களுக்குத் தடபுடலாகக் கல்யாணம் செய்து நிறையக் கடன்பட்டிருந்தார். விளைச்சல் நிலங்களெல்லாம் அந்தக் கடனுக்குப் போய்விட்டன. ஒரு நாள் கோந்து நகரத்துக்கு ஓடி வந்துவிட்டான். பல வேலைகள் செய்து கடைசியில் அவன் சுந்தரத்தின் அச்சாபீஸுக்கு வந்தான்.

அவனுடைய வீட்டுக்கு அருகில் ஒரு பீடிக்காரி இருந்தாள். அந்தக் கடையில் கோந்து கடன் வைத்துக்கொண்டான். விட்டாபாய் அவனிடம் பணமே கேட்கவில்லை. அவனுக்காக ஊருக்கும் அவள் மாதந்தோறும் பணம் அனுப்பிவந்தாள். அவள் எவ்வளவோ வற்புறுத்தியுங்கூட, கோந்து தன் அச்சாபீஸ் வேலையை விடவில்லை. அவளிடம் சொல்லி அவன் தன் எஜமானனுக்காக நூறு ரூபாய் வாங்கிக் கொண்டான். ஆனந்தமாக அவன் அச்சாபீஸை நோக்கிப் போனான். ஆனால் அச்சாபீஸ் வாசலில் அவன் கண்டது என்ன?

சுந்தரத்தின் அச்சாபீஸ் ஒரு தெருச் சந்திலே இருந்தது. அவனிடம் சம்பளம் வாங்க வந்த தொழிலாளிகள், அவன் ஏதோ ஒரு காரில் அடிபட்டுக் கிடப்பதையும், வண்டியின் சொந்தக்காரன் வேகமாகப் போய்விட்டதையும் தூரத்திலிருந்து பார்த்தார்கள். அவர்கள் உடனே அவனை உள்ளே தூக்கிப் போய், அவனுக்கு நினைவு வரும்படி பணிவிடை செய்தார்கள்.

சிறிது நேரத்துக்கெல்லாம் சுந்தரத்துக்குச் சுய நினைவு வந்தது. கோந்து அவனருகில் நின்றிருந்தான்.

''என்ன நடந்தது, கோந்து?'' என்று சுந்தரம் கேட்டான்.

''நான் இப்போதுதான் இங்கே வந்தேன், எசமான்! எவனோ வெறி பிடித்த தொழிலாளி உங்களை அடித்திருப்பான் என்று தோன்றுகிறது'' என்றான் கோந்து.

''என் தொழிலாளிகளில் யாரும் என்னை அடிக்க மாட்டார்கள், கோந்து!—அவர்கள் எல்லாரும் வந்துவிட்டார்களா? என் கோட்டைக் கொண்டு வா, கோந்து! அதில் பணம் இருக்கிறது; எல்லாருக்கும் கொடுத்து விடுகிறேன்.''

கோந்து உள்ளே போய், தான் ஜாக்கிரதையாக எடுத்துவைத்திருந்த கோட்டைக் கொண்டு வந்தான். ''சம்பளம் எப்போது வேண்டுமானாலும் கிடைக்கட்டும், எசமான்! நாங்கள் கணக்கு அப்புறம் பார்த்துக் கொள்கிறோம். எங்களில் யாரும் உங்களுக்குத் துரோகம் செய்யவில்லை'' என்று தொழிலாளிகள் சொன்னார்கள்.

''கோந்து சும்மா எதையோ நினைக்கிறான். என்னை அடிப்பதனாலே உங்களுக்கு என்ன பயன் கிடைக்கப்போகிறது? உங்

கள் பிழைப்புக்காக நீங்கள் வேலை நிறுத்தம் செய்தீர்கள். பத்திரிகை நன்றாக இருந்தும் விற்பதில்லை. நான் யாரை எதிர்த்து வேலை நிறுத்தம் செய்வது?''

''உங்களுக்கு எங்கள்மேல் சந்தேகம் உண்டாகுமோ என்று பயந்து அப்படிச் சொன்னோம், எசமான்! ஏதோ ஒரு காரில் அடிபட்டு நீங்கள்..''

''ஆமாம், எனக்குக்கூட ஞாபகம் வருகிறது.''

''எனக்கு இப்போது எல்லாம் தெரிந்துவிட்டது, எசமான்!'' என்று கூறினான் கோந்து.

''என்ன தெரிந்துவிட்டது?''

''ராமநாதனுடைய கார்தான் இந்தப் பக்கம் திரிந்துகொண்டிருந்தது. இது அவர் வேலைதான்!''

''கோந்து, வீணுக்கு யாரையும் பழித்துப் பேசாதே'' என்று சுந்தரம் அவனைச் சமாதானப்படுத்தினான்.

தொழிலாளிகள் உடனே மனமுவந்து வேலை செய்யத் தொடங்கினார்கள்.

சுந்தரத்துக்கு அடிபட்ட செய்தியை முதலிலே கேட்டவள் நளினிதான். ராமநாதன் அந்தச் செய்தியை அவளுக்குத் தெரிவித்திருந்தான். அவள் சுந்தரத்தின் பெற்றோரையும் அழைத்துக்கொண்டு அச்சாபீஸுக்கு வந்தாள்.

தந்தையைக் கண்டதும் சுந்தரம் திடுக்கிட்டான். அவன் இந்தத் தொழிலில் இருப்பது அவருக்கு அடியோடு சம்மதமில்லை. அன்றுதான் அவர் முதல் முதலாக அந்த அச்சாபீஸுக்குள் காலடி எடுத்து வைத்தார்.

''இவ்வளவு ஆபத்தான தொழிலில் ஏன் இறங்கினாய், குழந்தாய்! பத்திரிகை நடத்தியதால்தான் திலகர் சிறைக்குப் போக வேண்டியிருந்தது. பேசாமல் இந்தத் தொழிலை விட்டுவிடு'' என்று சொல்லி அழுதாள் அவனுடைய தாய்.

''ராமநாதன் டாக்டரை அழைத்துவருவதாய்ப் போனாரே; இன்னும் வரவில்லையா?'' என்று கேட்டாள் நளினி.

சுந்தரத்தின் தகப்பனார், ''நீங்கள் எல்லாரும் வீட்டுக்குப் போங்கள். நான் அச்சாபீஸைப் பார்த்துக்கொள்கிறேன்'' என்றார். சுந்தரம் தன் பையிலிருந்த பணத்தை அவரிடம் கொடுத்து, ''தொழிலாளிகளுக்குச் சம்பளம் கொடுக்க வேண்டும்'' என்று கூறிவிட்டு, வீட்டுக்குத் திரும்பினான்.

சுந்தரத்தின் தந்தை கோந்துவைக் கூப்பிட்டார்.

''ஒவ்வொரு தொழிலாளியாக வரச் சொல்'' என்றார்.

முதலில் ஒருவன் வந்தான்.

''உன் பெயர் என்ன?''

''மகாதேவன்.''

''உனக்கு என்ன சம்பளம்?''

''நூறு ரூபாய்.''

''எவ்வளவு? நூறு ரூபாயா? நீ என்ன வேலை செய்கிறாய்?''

''நான் மெஷின் போர்மன்.''

''அதற்கு இவ்வளவு சம்பளமா? வெளியே முக்கால் ரூபாய்க்கு எத்தனையோ கூலிக்காரர்கள் அலைகிறார்கள். நீ வேலையிலே திறமையுடையவன் என்பதற்காக வேண்டுமானால் தினத்துக்கு ஒரு ரூபாய் வாங்கிக்கொள். மிஞ்சிப்போனால் ஒன்றேகால் ரூபாய் வாங்கிக்கொள். இந்தச் சுந்தரத்துக்கு ஒன்றுமே தெரிவதில்லை! கண்டபடி சம்பளம் கொடுக்கிறான்!''

இப்படியே எல்லாத் தொழிலாளிகளுக்கும் சம்பளம் கொடுத்தாயிற்று. எல்லாரும் போனதும் ராமநாதன் உள்ளே வந்தான்.

சுந்தரத்தின் தந்தை அவனைப் பார்த்து, "சரி, உன் பெயர் என்ன?" என்று கேட்டார்.

"ராமநாதன்" என்று அவரை வியப்போடு பார்த்துக்கொண்டே அவன் சொன்னான்.

"பட்டியலில் உன் பெயர் இல்லையே? உனக்கு எவ்வளவு சம்பளம்?"

ராமநாதன் சிரித்துக் கொண்டே, "நான் இங்கே வேலைக்காரனல்ல; சுந்தரத்தின் நண்பன்" என்றான்.

"அப்படியா! உங்கள் நட்புக்கு நமஸ்காரம். அவன் வியாபாரத்தில் மேன்மேலும் நஷ்டப்படும் போது நீங்கள் நட்புச் செய்து கொண்டே இருந்தீர்களாக்கும்!"

"அப்படியில்லை. நான் சொன்னால் அவன் கேட்டால்தானே! அவனுக்கு வியாபாரம் செய்யத் தெரியவில்லை."

"நீங்கள் சொல்வதுதான் சரி. இந்த அச்சாபீஸை நீங்களே வாங்கி நடத்துங்கள்."

"சேச்சே, அது சரியல்ல; சுந்தரம் என் நண்பன்."

"நண்பனுக்கு ஆபத்தில் உதவி செய்வதுதானே நட்பு? நீங்கள் வேறொருவர் பெயரால் இதை வாங்கிக்கொள்ளுங்கள். அவனை முன்போலவே இங்கே வேலைக்கு வரச் சொல்கிறேன். மாதச் சம்பளம் கொடுத்துவிடுங்கள்."

"சுந்தரம் இதற்குச் சம்மதிப்பான் என்று எனக்குத் தோன்றவில்லை."

"அவனைச் சரிப்படுத்துவதை நான் பார்த்துக்கொள்கிறேன். மாதம் இருநூறு ரூபாய் சம்பளம் கொடுக்க உங்களால் முடியுமா? அதை யோசித்துச் சொல்லுங்கள். சம்பள உயர்வைப்பற்றி அப்புறம் பார்த்துக்கொள்ளலாம்!"

"நான் நாளைக்குத் தீர்மானமாகச் சொல்கிறேன்."

"சரி. உங்கள் பெயர்தானே ராமநாதன்? நீங்கள் சுந்தரத்துக்காக டாக்டரை அழைத்துவரப் போனீர்களே, அது என்ன ஆயிற்று! டாக்டர் கிடைக்கவில்லையோ?"

"டாக்டரை அழைத்துக் கொண்டுதான் வந்தேன். வழியில் சுந்தரம் வீட்டுக்குத் திரும்புவதைப் பார்த்தேன். ஆகவே, டாக்டரை அனுப்பிவிட்டு நான் இப்படி வந்தேன். சுந்தரத்துக்குக் காயம் பலமாக இருக்கிறதோ?"

"நாலைந்து நாள் ஓய்வு எடுத்துக் கொண்டால் எல்லாம் சரியாகிவிடும். அதற்குள் இந்த விஷயத்தை முடித்துவிட வேண்டும். மறுபடி உங்களை எப்போது எங்கே சந்திக்கலாம்?"

"கிழவரான உங்களுக்கு ஏதுக்குத் தொந்தரவு? இன்றே வேண்டுமானாலும் இதை நான் எடுத்துக் கொள்கிறேன்."

"அதுதான் சரி; எனக்கு இந்த அச்சாபீஸே வேண்டாம்" என்று சொல்லி, கிழவர் மேல்துணியை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டு, வீட்டுக்குப் புறப்பட்டார்.

ஆயிரம் பிரதிகள் கூடப் போகாத பத்திரிகை ராமநாதன் கைக்கு வந்ததும் பதினாயிரக் கணக்கில் விற்க ஆரம்பித்தது. அதற்குக் காரணம் ஒன்றுதான்:

ராமநாதன் பத்திரிகையின் விஷயத்தைப்பற்றிக் கவலைப்படவேயில்லை. ஏராளமான விளம்பரங்களைச் சேகரித்தான். ஜனங்களுக்குப் பிடிக்கும் விஷயங்களை எழுதச் சொன்னான். 'உள்ளூர்க் கனவான்களின் போக்கு' என்று ஒரு விஷயம். அது ஒரு நாள் கம்பாஸிட்டரின் பிழையினால் 'உள்ளூர்க் கள்வர்களின் போக்கு' என்று அச்சாகிவிட்டது. அன்றே கிராமத்தில் சில திருட்டுக்கள் நடந்தன. ஜனங்களுக்கு அந்தப் பத்திரிகையின்மேல் அபாரமான பக்தி உண்டாகிவிட்டது.

பத்திரிகையில் இன்ன விஷயத்துக்கு மதிப்புக்கொடுக்கவேண்டும், இன்ன விஷயத்தை விலக்கவேண்டும் என்பது ராமநாதனுக்கு நன்றாகத் தெரிந்திருந்தது. அங்கங்கே நடக்கும் விபத்துக்கள், கோர்ட்டு வழக்குகள், ஜோஸ்யம், குதிரைப் பந்தய விவரங்கள் இப்படிப் பல விஷயங்கள் வெளியாயின. விளம்பரங்களும் ஏராளமாகக் குவிந்தன.

சுந்தரத்துக்கு உடம்பு குணமாகி வந்தது. அன்று காலையிலிருந்தே அவன் தகப்பனார் அவனோடு இனிமையாகப் பேசினார். அதன் காரணம் அவனுக்கு விளங்கவில்லை.

சாப்பாடு ஆனதும் அவன் சட்டையைப் போட்டுக்கொண்டு வெளியே கிளம்பினான்.

"எங்கே புறப்படுகிறாய், சுந்தரம்?" என்று கேட்டார் கிழவர்.

"சற்று அச்சாபீஸ் பக்கம் போய்வருகிறேன்."

"அங்கே உன் அச்சாபீஸில் என்ன இருக்கிறது?"

"நீங்கள் சொல்வது விளங்கவில்லையே?"

"உன் அச்சாபீஸையும் பத்திரிகையையும் நான் ஒருவனுக்கு ஏழாயிரம் ரூபாய்க்கு விற்றுவிட்டேன். பணமும் வாங்கியாகிவிட்டது. நீ கையெழுத்திடுவது தான் பாக்கி. நீ இரண்டாயிரம் ரூபாய் வரைக்கும் கடன்பட்டிருப்பது தெரிந்தது. வேறு கடன் ஏதுவும் இல்லையே?"

"அப்பா!"

"பேசாதே! இதுவரைக்கும் உன்னை உன் இஷ்டப்படி இருக்கவிட்டேன். இனி நான் செத்த பிறகு உன் விருப்பம்போல் செய்துகொள்."

"அச்சாபீஸையும் பத்திரிகையையும் பெயரோடு விற்றுவிட்டீர்களா?"

"பின்னே இப்படிச் சங்கடப்பட்டுக்கொண்டு எத்தனை நாள் நடத்துவது?"

"எனக்கு அவற்றை விற்க விருப்பமில்லை, அப்பா!"

"அப்படியா? நீ யாருடன் பேசுகிறாய் என்று தெரிகிறதா? என்னை வெளிப்படையாக அவமானப்படுத்துவதுதான் உன் எண்ணமா?"

"முன்னதாகவே நீங்கள் என்னைக் கேட்டிருக்கக் கூடாதா, அப்பா?"

"இதில் கேட்பதற்கு என்னடா இருக்கிறது? மலைபோலக் கடனை வைத்துக்கொண்டு எனக்குப் புத்தி சொல்கிறாயா?"

"அப்பா!"—சுந்தரத்தின் கண்களில் நீர் துளும்பியது.

"எதற்காகடா இப்படி அழுகிறாய்?"

"அந்த அச்சாபீஸினிடத்தும் பத்திரிகையினிடத்தும் நான் வைத்திருக்கும் அன்பு உங்களுக்

குத் தெரியாது, அப்பா! நான் அவற்றை விற்கச் சம்மதிக்க மாட்டேன்.''

இதைக் கேட்டதும் கிழவரின் கோபம் எல்லையைக் கடந்தது. ''யாரடி அது, உள்ளே! இப்பொழுதே புறப்படு. உடுத்த துணியோடு புறப்படு. இனி இந்த வீட்டில் நான் தண்ணீர்கூடக் குடிக்க மாட்டேன். சொந்த மகன் என் பேச்சைக் கேட்காத வீட்டிலே எனக்கு என்ன வேலை?'' என்று சொல்லி அவர் வெளியே புறப்படலானார்.

தாய் வெளியே வந்து கொஞ்சும் குரலிலே, ''சுந்தரம்!'' என்று கூப்பிட்டாள்.

அவனுக்குத் துயரம் தாங்கவில்லை. ''அம்மா, எனக்காக அப்பா வருத்தப்பட வேண்டாம்'' என்று கூறி அவரிடம் சென்றான். வருந்தும் குரலிலே, ''அப்பா, இனிமேல் நீங்கள் சொல்கிறபடியே நான் செய்கிறேன். என்ன செய்ய வேண்டும்? சொல்லுங்கள்'' என்றான்.

அவர் அவனை நிமிர்ந்துகூடப் பாராமல், ''நான் என்ன, உன்னை என் காலைப் பிடிக்கச் சொல்கிறேனா? செய்வதென்ன? எங்காவது ஒரு நல்ல உத்தியோகத்தைப் பார்த்துக்கொண்டு, கல்யாணம் செய்துகொள்'' என்றார்.

''எங்காவது வேலை இருந்தால் சொல்லுங்கள்.''

''நீ வேலை செய்வது நிச்சயந்தானா? சொல்லு!''

''இந்த நிமிஷமே நான் வேலைக்குப் போகத் தயார்.''

''அப்படியானால் வேலையும் தயார். மாதம் இருநூறு ரூபாய் கிடைக்கும்.''

''சம்பளத்தைப்பற்றி எனக்குக் கவலை இல்லை; கிடைப்பதை உங்களிடம் கொண்டுவந்து கொடுக்கிறேன். உங்களுக்குத் திருப்தியாக இருந்தால் போதும்!''

''உன் அச்சாபீஸிலேயே வேலை இருக்கிறது.''

''என் அச்சாபீஸில் நான் உத்தியோகம் செய்வதா?''

''அதில் என்ன தப்பு? உன்னால் அந்தப் பத்திரிகையை நடத்த முடியவில்லை. இன்று அதே பத்திரிகை முன்னைவிடப் பதினைந்து மடங்கு வளர்ந்திருக்கிறது. காரணம், விவகாரம் தெரிந்தவர்கள் அதை இப்போது நடத்துவது தான். நீ தொழிலாளிகளின் இயக்கத்தைப்பற்றிப் பக்கம் பக்கமாக எழுதிக்கொண்டிருந்தாயே, இப்போது அந்தப் பத்திரிகையில், 'இக்காலத்து வேசிகள்' என்ற தொடர் கட்டுரை ஒன்று வருகிறது. என் இப்படித் தலையிலே கைவைத்துக்கொள்கிறாய்? அடே, உனக்கு அது பிடிக்காமல் இருக்கலாம். உன் விருப்பந்தான் உலகத்தின் விருப்பமா? அவர்களிடம் கொஞ்ச நாள் பழகி விவகாரம் தெரிந்துகொள்.''

''சரி, நான் இப்பொழுதே போகட்டுமா?''

''நான் அவர்களிடம் முன்பே சொல்லி வைத்திருக்கிறேன். உன்னை வேலைக்கு வைத்துக்கொள்ளும் நிபந்தனையோடுதான் அச்சாபீஸை விற்றிருக்கிறேன். பெரிய மனிதர்கள் என்றாலே உனக்குச் சத்துருக்கள் என்று நினைக்கிறாய். என்னைப் பார்த்தால் உன் முகம் என் இப்படிக் கோணுகிறது?''

''இல்லை, அப்பா! இனிமேல் நீங்கள் சொல்கிறபடியே செய்கிறேன்.''

சுந்தரம் மேலுக்குச் சிரித்துக் கொண்டே வீட்டைவிட்டுப் புறப் பட்டான். அச்சாபீஸை நோக்கி அவன் அடியெடுத்து வைத்தான். அவன் கண்களில் நீர் நிரம்பியது.

தன் நண்பனுகிய ராமநாதனே அச்சாபீஸை விலைக்கு வாங்கி யிருப்பது தெரிந்ததும் அவனுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. ராம நாதன் அவனை வரவேற்றுத் தனக்குப் பக்கத்தில் உட்கார வைத்தான்.

“நான் இங்கே வேலை செய்ய வந்திருக்கிறேன்” என்ருன் சுந்தரம்.

“சுந்தரம், நீங்கள் இப்படி யெல்லாம் மனத்தை அலட்டிக் கொள்ளக்கூடாது. நம்முடைய பழைய நட்பு—”

“நீங்கள் அதைச் சொல்ல வேண்டியதே இல்லை. எனக்கு விவகாரம் தெரியாது. அந்தப் பளுவிலிருந்து என்னை நீங்கள் தப்ப வைத்தீர்கள். நான் இப் போது இங்கே வேலை செய்ய வந் திருக்கிறேன். நீங்கள் வேலை கொடுப்பீர்கள் என்று அப்பா சொன்னர். உங்களுடைய தீர் மானம் வேறு விதமாக மாற வில்லையே?”

“சுந்தரம், நான் என்ன சொன் னலும் உனக்கு வருத்தம் இருக் கத்தான் இருக்கும். இனி நாம் வேலையைக் கவனிப்போம்.”

“இப்போது நான் என்ன செய்ய வேண்டும்?”

“நான் சொல்கிறபடி செய்தால் போதும். இந்த இதழுக்கு ஜோஸ் யர் நம்மை ஏமாற்றிவிட்டார். பழைய இதழ்களைப் பார்த்து ஊக மாக ஜோஸ்யம் தயார் செய்து விடு. உனக்கு இது பிடிக்காது என்று தெரியும். இருந்தாலும் நீ வேலையை ஒப்புக்கொண்ட பிறகு—”

“சரி, கத்தரியைக் கொடுங் கள்!”

“ஜோஸ்யத்துக்குக் கத்தரி எதுக்கு?” என்று வியப்போடு கேட்டுக்கொண்டே ராமநாதன் கத்தரியை எடுத்துக்கொடுத்தான்.

சுந்தரம் ஏதோ ஓர் இதழி லிருந்த ஜோஸ்யப் பகுதியை எடுத்து, பன்னிரண்டு ராசிகளுக் குரிய பலன்களைத் தனக்குத் தோன்றியபடி எழுதிக் கொடுத் தான். அது அச்சுக்குப் போயிற்று.

பிறகு ராமநாதன் தன் பத்திரி கையின் கொள்கைகளைச் சுந்தரத் துக்கு விளக்கினன். “இது உன் னல் முடியுமோ இல்லையோ?” என்று கேட்டான்.

“முடியாமல் என்ன? மலைமேல் ஏறுவது கஷ்டம்; இறங்குவதற்கு என்ன? சும்மா உருண்டால்கூட மனிதன் கீழே வந்துவிடலாம்.”

“இன்னென்று சொல்ல மறந்து விட்டேன்: யாரையாவதுபற்றி விமர்சனம் செய்தால் அது மிகவும் தீவிரமாக இருக்க வேண்டும். நம்மைப்பற்றி இவன் என்றைக்கு எழுதிவிடுவானே என்று பெரிய மனிதர்கள் பயப்படவேண்டும். அப் படி இருந்தால்தான் அது ஜனங் களுக்குப் பிடிக்கும்.”

“என் சொந்தக் கொள்கைகளை மூட்டை கட்டி வைத்துவிட்டு என்னல் ஆனவரைக்கும் பார்க் கிறேன். என்னைச் சரிக்கட்டிக் கொள்வது உங்கள் பொறுப்பு!”

“இதில் சரிக்கட்ட என்ன இருக்கிறது? இந்தக் காலத்தில் பத்திரிகாசிரியருக்கும் கம்பாஸிட் டருக்கும் வித்தியாசம் கிடையாது. இப்போதெல்லாம் ஆசிரியர்கள்

தாமாக எதுவும் எழுதுவதில்லை. அக்கம் பக்கத்தில் இருக்கும் பெரிய மனிதர்கள் சொல்வதை அப்படியே நகல்படுத்தி அவர்கள் அச்சுக்கோக்கக் கொடுக்கவேண்டியது. மொத்தத்தில் பத்திரிகாசிரியன் என்றால் கம்பாஸிட்டர்களின் தலைவன்.''

அன்று சிறிது நேரம் வேலை செய்துவிட்டுச் சுந்தரம் வீட்டுக்குப் போனான்.

அவனுக்கு வீட்டில் இருக்கவே பிடிக்கவில்லை. உலகமே வெறுத்துப் போயிற்று. அவன் நேராக நளினியின் வீட்டுக்குப் போனான். ''இனி நாம் சந்திக்க முடியாது. உங்களிடம் விடை பெற்றுக்கொள்ள வந்திருக்கிறேன்'' என்றான்.

நளினிக்கு அது அதிர்ச்சியாக இருந்தது. ''நீங்கள் எங்கே போகப் போகிறீர்கள்?'' என்று கேட்டாள்.

''இன்னும் நிச்சயமாகவில்லை.''

''சரி, என்ன செய்யப்போகிறீர்கள்?''

''அதுவும் நிச்சயமாகவில்லை.''

''யாரோ பழக்கமிராதவரோடு பேசுவது போலப் பேசுகிறீர்களே! இனி இப்படித்தான் பேசுவீர்களா? நீங்கள் அந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுத்தது எனக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது. உங்களுக்குத் தேவை இருந்தால் மீண்டும் வாங்கிக்கொள்ளுங்கள்.''

''எனக்குப் பணமே தேவையில்லை.''

''பணம் இல்லாமல் நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?''

''என்ன செய்யப்போகிறேன் என்பது எனக்கே தெரியாது. ஆனல் பணம் என்றாலே எனக்குப் பயமாக இருக்கிறது. அப்பாவின் பணத்தை நான் சிறிது போக்கடித்தேன்; அதனல் நான் வீட்டில் இருப்பதே சங்கடமாக இருக்கிறது. இப்போது அன்பினலோ, ஆசையினலோ, அநுதாபத்தினலோ, வாரிசு உரிமையினலோ எப்படிப் பணம் கிடைத்தாலும் எனக்குப் பயமாகத்தான் இருக்கிறது.''

''வேடிக்கையாக இருக்கிறது, நீங்கள் பேசுவது! என் அன்பினலே உங்களுக்கு எவ்விதமான உதவியும் செய்ய முடியாதா?''

''இப்பொழுது எனக்கு அன்பைவிடச் சொந்தச் சம்பாத்தியந்தான் வேண்டும். என் சம்பாத்தியத்திலிருந்து கிடைக்கும் உணவு வயிற்றில் சென்றால்தான் எனக்கு ஆறுதலாக இருக்கும்.''

''அப்படியானல் நான் உங்களிடம் எதையுமே எதிர்பார்க்க வேண்டாமா?''

''வேண்டாம்'' என்று சொல்லிக்கொண்டே சுந்தரம் வெளியே சென்றான். நளினியின் காதில் நீண்ட நேரம் வரைக்கும் 'வேண்டாம்' என்ற சொல் விழுந்துகொண்டே இருந்தது.

அந்தச் சமயத்திலே அங்கே ராமநாதன் வந்தான். அவனைப் பார்த்ததும் நளினி கலகலவென்று நகைத்தாள்.

''வாருங்கள், ராமநாதன். நான் இப்போது உங்களிடந்தான் வருவதாக இருந்தேன். புறப்படுங்கள்'' என்றாள்.

ராமநாதன் திகைத்து நின்றான்.

''ஏன் இப்படி விழிக்கிறீர்கள், ராமநாதன்? ஓகோ, உங்களுக்கு விஷயம் தெரியாதோ? சுந்தரத்துக்கும் எனக்கும் சச்சரவு ஆகிவிட்டது. பணம் என்றாலே அவர் பயப்படுகிறார். என்னிடம் பணம்

கிறைய இருக்கிறது, ராமநாதன். நான் இனிமேல் பொது நலத்துக்குப் பாடுபடப் போகிறேன். உங்களிடம் அச்சாபீஸ் இருக்கிறது; பத்திரிகையும் இருக்கிறது. நாம் அரசியலில் ஒரு புதிய யுகத்தை உண்டாக்கிவிடுவோம்'' என்றாள்.

ராமநாதன் பேசாமல் அதைக் கேட்டுக்கொண்டு இருந்தான். நளினிக்கு ஆவேசம் வளர வளர, அவன் முட்டாள்போல நடந்து கொள்ளலானான்.

சுந்தரம் தனக்குத் தெரிந்த எல்லாரிடமும் விடை பெற்றுக் கொண்டான். நளினியைப்பற்றிய விஷயம் அவன் மனத்தை வாட்டியது. அவள் இவ்வளவு ஆவேசம் கொண்டு ராமநாதனுடைய குழுவில் சேருவாள் என்று அவன் எதிர்பார்க்கவேயில்லை. அவன் சிறிது தூரம் சென்றதும் தன்னைப் பற்றிச் சிந்திக்கலானான். இனிமேல் தான் என்ன செய்வது என்பதை அவன் தீர்மானிக்க வேண்டியிருந்தது.

அவன் ஊருக்கு வெளியே வந்துவிட்டான்.

அப்போது, ''எசமான்!'' என்ற குரல் அவன் காதில் விழுந்தது.

''யார்? கோந்துவா?''

''இந்தச் சமயத்தில் எஜமான் எங்கே போகிறார்?''

''ஏதோ வேலையாக ஊருக்குப் போகிறேன்.''

''ஊருக்கா? ஸ்டேஷன் இந்தப் பக்கமல்லவா இருக்கிறது!''

''இல்லை, நான் நாளைக் காலை வண்டியில் போகப் போகிறேன்.''

''அதற்கு இப்போதிலிருந்தே பையை எடுத்துக்கொண்டு போவானேன்?''

சுந்தரம் திகைத்து நின்றான். ''உண்மையாகத்தான் கோந்து, நாளைக் காலையில் ஊருக்குப் போவதற்கு நான் இப்போதிலிருந்தே பையைச் சுமந்துகொண்டு திரிகிறேன்! இப்போதுதான் எனக்கு இது தெரிகிறது. நான் ஸ்டேஷனுக்குப் போய் உட்கார்ந்திருக்கப் போகிறேன்.''

''எசமானுடைய மனத்தில் ஏதோ கலவரம் இருப்பதாகத் தெரிகிறது. அதை என்னிடம் மறைக்கிறீர்கள்!''

''உன்னிடம் எதற்கு மறைக்கப் போகிறேன்?''

''எசமான், நீங்கள் சொல்லவும் வேண்டுமோ? உங்கள் வீட்டிலே ஏதோ சரிப்படவில்லை என்று தெரிகிறது. இப்பொழுது நீங்கள் எங்கே போகிறீர்கள்? பையை இப்படிக் கொடுங்கள். என் வீட்டுக்கு வாருங்கள்'' என்று சொல்லி, கோந்து அந்தப் பையைத் தானே எடுத்துக்கொண்டு நடக்கலானான். சுந்தரம் தடை ஏதும் சொல்லாமல் அவனைத் தொடர்ந்தான்.

வழியில் சுந்தரம் தான் வீட்டை விட்டு வந்த வரலாற்றை அவனுக்குத் தெரிவித்தான். ''ஐயா இந்த ஊரைவிட்டுப் போகவே கூடாது. இங்கேயே இருக்க வேண்டும்'' என்று கோந்து வேண்டிக்கொண்டான். தன்னுடைய வீட்டுக்கு எசமான் வந்தது அவனுக்கு ஆனந்தமாக இருந்தது. சுந்தரமும் ஒரு புதிய வாழ்க்கையைப் பார்க்கலாம் என்ற ஆனந்தத்தில் இருந்தான். வீட்டைவிட்டு வந்த துயரத்தை அவன் சிறிது மறந்தான்.

இரவு மணி பன்னிரண்டரை ஆகிவிட்டது. எங்கும் ஒரே அமைதியாக இருந்தது. கோந்து வீட்டுக்கு வெளியே கட்டிலில் படுக்கையைப் போட்டான். சுந்தரம் அதில் உட்கார்ந்தான்; கோந்

துவையும் தன் பக்கத்தில் வற் புறுத்தி உட்கார வைத்தான்.

அக்கம் பக்கத்தில் தெருவோரத்திலே பலர் தூங்கிக்கொண்டு இருந்தார்கள். நிலாக் காய்ந்தது; சில்லென்ற காற்று வீசியது.

"எங்கும் நிச்சப்தமாக இருக்கிறது, கோந்து!" என்றான் சுந்தரம்.

"மயானத்திலும் இப்படித்தான் இருக்கும், எசமான்! வேர்வை சிந்த உழைத்து வந்திருக்கிற இவர்கள் தூங்குவதற்குக் கேட்பானேன்? இவர்கள் தூங்கவா தூங்குகிறார்கள்? உடம்பு முழுவதும் அலுத்துப் போய் உறங்கிக் கிடக்கிறார்கள். இவர்களில் பலர் ஜுரம், இருமல், காச நோய் முதலியவற்றைத் துணையாகக் கொண்டு தூங்குகிறார்கள். பசி தாங்காமல் சிலர் உடம்பைக் குறுக்கிக்கொண்டு தூங்குகிறார்கள். இந்த நிலைமையில் மனிதர்கள் எப்படி வாழ்கிறார்கள் என்று நீங்கள் நினைக்கலாம். பத்திரிகைகளில் நாம் தொழிலாளிகளைப்பற்றி நிறைய எழுதுகிறோம்; படிக்கிறோம். ஆனால் உண்மையான உலகம் எவ்வளவு பயங்கரமாக இருக்கிறது என்பதை இங்கே நேரில் பாருங்கள்."

சுந்தரத்துக்கு அன்று இரவு முழுவதும் தூக்கமே வரவில்லை. ஐந்தாறு நாட்கள் அங்கு இருந்ததில் தொழிலாளிகளின் நிஜ வாழ்க்கை அவனுக்கு நன்கு தெரிந்தது.

பொழுது விடிந்தது. சுந்தரத்தின் தகப்பனாருக்கு அன்று இரவு முழுவதும் தூக்கமில்லை. பல கனவுகள் கண்டபடியே அவர் கலவரத்தில் ஆழ்ந்திருந்தார்.

காலையில் எழுந்து டீ குடித்து விட்டு அவர் மேஜையருகில் சென்றார். அங்கே ஒரு கடிதம் இருப்பதைக் கண்டார்.

"வீட்டில் இருந்தால் என் விருப்பப்படி நடக்க முடியாது என்று நீங்கள் சொன்னதைப்பற்றி நான் ஆழ்ந்து ஆலோசித்தேன். நீங்கள் சொல்வது சரியென்றே எனக்குப் படுகிறது. எனக்கு ஆசி கூற வேண்டுகிறேன்.

தங்கள்
சுந்தரம்."

அந்தக் கடிதம் அவர் கையிலிருந்து நழுவியது. "சுந்தரம், என்னடா இப்படிச் செய்துவிட்டாயே! இப்படியா நான் உன்னைச் செய்யச் சொன்னேன்? உன் தகப்பனை உன்னால் அறிந்து கொள்ள முடியவில்லையே!" என்றார்.

அவர் குரலைக் கேட்ட அவன் தாயும் விவரம் தெரிந்து அழலானாள்.

"நான் அவனை எப்படியாவது தேடி அழைத்து வருகிறேன்" என்று சொல்லி அவர் வெளியே புறப்பட்டார்.

அவர் நேராக நளினியின் வீட்டுக்குப் போனார். அவன் அங்கே தான் இருப்பான் என்று அவர் நிச்சயமாக நம்பினார். அவர் அங்கே போய், "சுந்தரம், சுந்தரம்!" என்று கூப்பிட்டார்.

நளினி வந்து கதவைத் திறந்தாள்.

கிழவர் வறண்ட குரலில், "சுந்தரம் இங்கே வந்திருக்கிறானா? அவன் வீட்டைவிட்டுப் போய் விட்டான். என்னை அவன் புரிந்துகொள்ளவில்லை. அவன் இங்கே இருக்கிறான் அல்லவா?" என்றார்.

"இல்லையே!"

"இல்லையா? அப்படியானால் நான்தான் அவனைப் புரிந்து கொள்ளவில்லை. உங்களிடம் அவன் மிகுந்த அன்போடு நெருங்கிப் பழகுவதாக நினைத்தேனே! அவன் இல்லாத போது எனக்கு இங்கே என்ன வேலை? அவன் ஒருகால் வந்தால் நான் இங்கே வந்து தேடியதாக அவனிடம் சொல்லுங்கள். நான் செய்த பிழையை இனிச் சரிப்படுத்திக்கொள்கிறேன்" என்று நடுங்கும் குரலில் சொல்லிவிட்டுக் கிழவர் வீட்டுக்குத் திரும்பினார்.

இதற்குப் பிறகு எட்டு மாதங்கள் கடந்தன. சுந்தரம் தொழிலாளர்களோடு வசித்துவந்தான். அவர்களுக்கு அவனிடம் இருந்த அன்பு சொல்லி முடியாது. அவர்களுடைய வாழ்க்கையை அவன் கூர்ந்து கவனித்தான். அவர்களுக்கு அவன் நல்ல விஷயங்களைக் கற்பித்தான். அவர்களுடைய குழந்தைகளுக்குக் கல்வி கற்றுக்கொடுத்தான்.

அந்தத் தடவை ஊரில் தேர்தல் வந்தது. தொழிலாளர்கள் அனைவரும் சேர்ந்து தங்களுக்குப் பிரதிநிதியாகச் சுந்தரத்தை நிற்கும்படி வேண்டிக்கொண்டார்கள். அவனும் அவர்களின் அன்புக்குக் கட்டுப்பட்டு அதை ஒப்புக்கொண்டான்.

மறுபுறம் ராமநாதனுடைய முயற்சியால் நளினி அந்தத் தேர்தலுக்கு நின்றாள். அவர்களுக்கு இருந்த பிரசார வசதிகளுக்குக் குறைவே இல்லை.

"இதுவரைக்கும் பெண் சுதந்தரத்தைப் புறக்கணித்தீர்கள். இப்போதாவது குமாரி நளினிக்கு உங்கள் வாக்கை அளியுங்கள்", "தொட்டிலை ஆட்டும் பெண்மணிதான் நாட்டையும் ஆள முடியும். நாட்டின் ஆட்சிக்குத் தொட்டிலாக இருப்பது நகரசபை. எனவே, குமாரி நளினிக்கு உங்கள் வாக்கைக் கொடுங்கள்"—இப்படிச் சுவரொட்டி விளம்பரங்கள் எங்கும் பல வண்ணங்களை வீசின.

தேர்தலுக்கு ஒரு வாரம் முன்னால் ராமநாதனும் சுந்தரத்தின் தகப்பனாரும் தெருவில் சந்தித்தார்கள். சுந்தரத்தின் புதிய வாழ்வைப்பற்றிய தகவல்கள் அவருக்கும் தெரிந்திருந்தன. அவன் எங்காவது சௌக்கியமாக இருந்தால் போதும் என்று அவர் எதிலும் தலையிடாமலே இருந்தார்.

அவர் ராமநாதனைப் பார்த்ததும், "உங்கள் அச்சாபீஸும் பத்திரிகையும் எப்படி நடக்கின்றன?" என்று கேட்டார்.

"பேஷாக நடக்கின்றன! சுந்தரம் பைத்தியக்காரன். அவன் என்னிடமே இருந்திருந்தால் இப்போது உயர்ந்த நிலைக்கு வந்திருக்கலாம்!"

"அதுதான் அவனுடைய அதிருஷ்டத்தில் இல்லையே!"

"என்றைக்காவது ஒரு நாள் அவன் வழிக்கு வராமலா போகிறான்?"

"நானும் அந்த நம்பிக்கையில் தான் இருக்கிறேன். என் சுந்தரத்தைத் தவிர மீதிப்பேர் எல்லாரும் முன்னுக்கு வந்துவிட்டார்கள். நளினி தேர்தலுக்கு நிற்கிறாளாமே; பேஷ்!"

"உங்கள் மகன்கூடத்தான் நிற்கிறார்!"

"ஆமாம், என் காதில் விழுந்தது. ஆனால் இந்தப் பிக்காரிப் பயலாவது, தேர்தலில் வெற்றி பெறுவதாவது!"

"உங்கள் அநுதாபம் கிடைத்திருப்பதே எங்கள் வெற்றிக்குப் போதும்!"

அந்த நிமிஷத்திலிருந்து கிழவர் நளினிக்குத் தேர்தல் பிரசாரத்திலே முனைந்தார்.

இதே சமயத்தில் தொழிலாளர்களின் கூட்டத்தில் வேறு பேச்சு நிகழ்ந்தது.

"நம் எசமான்தான் தேர்தலில் ஜயிக்கவேண்டும்" என்றான் கோந்து.

"அதற்குப் பணம் எங்கிருந்து கொண்டு வருவாய்?" என்று சுந்தரம் கேட்டான்.

விட்டாபாய் இந்தப் பொதுச் செயலுக்கு ஏராளமாகப் பணம் செலவழிக்கப் போவதாக அவன் சொன்னான்.

அதைக் கேட்டுச் சுந்தரத்துக்கு மிகுந்த வருத்தம் உண்டாயிற்று. "இந்தத் தேர்தலில் எனக்காக நீங்கள் பணம் செலவழிக்க வேண்டாம். பொதுத் தொண்டிலே ஈடுபட வேண்டும் என்ற ஆசை எனக்கு உண்டு. என் திறமையினால் நான் வெற்றி பெறவில்லை யென்றால் அதைவிடத் தோல்வியுறுவதே நல்லது" என்றான்.

தொழிலாளிகள் ஒன்றும் பதில் சொல்லாமல் வீட்டுக்குப் போனார்கள்.

தேர்தல் முடிவு வெளியாயிற்று. கேட்பானேன்? நளினி தான் வெற்றி பெற்றாள்.

இந்த நிலைமையில் சுந்தரத்தைச் சுலபமாக வீட்டுக்கு அழைத்து வந்துவிடலாம் என்று கிழவர் அவனிடம் போனார். ஆனால் அவன் அந்த ஊரை விட்டே வெளியே போய், பரந்த உலகைப் பார்க்க ஆசை கொண்டிருந்தான். தந்தை துயரத்தோடு வீடு திரும்பினார்.

வெற்றியடைந்துங்கூட நளினிக்குத் துளியும் மகிழ்ச்சி இல்லை. பொதுத்தொண்டு ஆற்றுவதற்குச் சுந்தரந்தான் தகுந்தவன் என்று அவளுக்குத் தோன்றிற்று. வீட்டிலே அவள் ஊமைபோல் வளைய வந்தாள். 'சுந்தரத்தை நான் மறக்க முயன்றது தவறு; அவரைப் பெறுவதுதான் என் நோக்கமாக இருக்கவேண்டும்' என்று அவள் தீர்மானித்தாள்.

அவள் நேரே சுந்தரத்தின் வீட்டுக்குப் போய் அவனுடைய பெற்றோரையும் அழைத்துக் கொண்டு அவனைத் தேடிச் சென்றாள்.

அவளுடைய குரலைக் கேட்டுச் சுந்தரம் ஆச்சரியத்தோடு வெளியே வந்தான். பெற்றோரைக் கண்டதும் அவனுடைய வியப்பு வளர்ந்தது.

அவன் நளினியின் வெற்றியைப் போற்றினான்.

"என் வெற்றியைவிட உங்கள் தோல்வியே உயர்ந்தது, சுந்தரம். என் பணக்காரத்தனத்துக்காக நீங்கள் என்னைத் துறந்தீர்கள். இன்று நான் அந்த விஷத்தை ஒழித்துவிட்டு உங்களிடம் வந்திருக்கிறேன்" என்றாள் நளினி.

சுந்தரம் பெற்றோர்களைப் பார்த்தான்.

அவர்கள் ஆனந்தக் கண்ணீர் வடித்துக்கொண்டு நின்றார்கள். ★

ஒற்றுமைக் கோயில்

பவேச் சந்திர சௌதுரி

கிழக்குப் பாகிஸ்தானில் பல அருமையான பழைய இந்து பௌத்தச் சின்னங்களைப் பாஹராட்பூர் என்ற இடத்தில் பல ஆண்டுகளுக்கு முன் கண்டெடுத்தார்கள். அவை இந்தியக் கலை, சமயம் இவற்றின் உயர்வை எடுத்துக் காட்டுகின்றன.

இந்திய சரித்திரத்திலேயே 1952 நவம்பரில் சாஞ்சியில் நடைபெற்ற வைபவம் மிகச் சிறப்பு வாய்ந்த நிகழ்ச்சியாகும். புத்த தேவரின் தலைமைச் சிஷ்யர்களான சாரிபுத்திரர், மகா மொகல்லானு ஆகிய இருவருடைய சின்னங்களைச் சாஞ்சி ஸ்தூபியில் ஸ்தாபனம் செய்தார்கள். இந்தச் சின்னங்களைச் சுமார் நூறு வருஷங்களுக்கு முன்பு ஏ. கன்னிங்ஹாம் என்பவர் சாஞ்சி ஸ்தூபியிலிருந்து எடுத்தார். இதனோடு சம்பந்தப்பட்ட வேறு சில சின்னங்களை நாம் அடியோடு மறந்துவிட்டோம். அவை கிழக்குப் பாகிஸ்தானில் இருக்கின்றன. நம்முடைய புராதன நாகரிக கலாசாரச் சின்னங்களில் ஒன்றான ஒரு ஸ்தூபி பாஹராட் என்னுமிடத்தில் இருக்கிறது. பல்லாண்டுகளாகக் கவனிப்பாரற்றுக் கிடந்த இந்தக் குன்றில் இப்போது புதைபொருள் ஆராய்ச்சி நடைபெற்றதில் பல உண்மைகள் வெளியாகியிருக்கின்றன.

இந்த ஸ்தூபியின் காட்சியே நம் நெஞ்சைத் தொடுகிறது. மங்கிக் கிடக்கும் இதன் சிறப்புக்களை ஆராய்ந்து பார்க்க நம் மனம் பாய்ந்து செல்கிறது. "அந்தச் சிறப்பு வாய்ந்த புராதன நகரங்கள் எங்கே இப்போது? குறைந்த படிப்பும் நிறைந்த ஞானமும் கொண்ட அந்த முனிவர்கள் எங்கே? அன்பு, சமாதானம், சகோதரத்துவம் இவையெல்லாம் வாய்ந்த சமூக வாழ்வுக்கு வித்திட்ட அந்த வாழ்க்கை அமைப்பு எங்கே?" என்றெல்லாம் கேள்விகள் நம் மனத்தில் உதிக்கின்றன. கிழக்குப் பாகிஸ்தானத்தில் பாஹராட்பூர் ஒரு சிறிய இடந்தான். ஆயினும் அதன் நாகரிகச் சிறப்பும் கலாசார மகிமையும் காலக் கணக்கு இல்லாத நூற்றாண்டுகளாய் நமக்கு நாடிஸ்தானமாக இருந்து வந்திருக்கின்றன. அதனுள்ளேதான் இந்தப் புராதனக் கோயில் அமைந்திருக்கிறது. புத்த சமயத்தினரும் ஜைன சமயத்தினரும் ஹிந்துக்களும் வம்ச பரம்பரையாக மந்திரங்களை இங்கே கோஷித்திருக்கிறார்கள். பல நூற்றாண்டுகளாகியும் பாஹராட்பூர் அமைதியாகக் கால வெள்ளத்தைக் கடந்து அமரத்துவம் வாய்ந்து விளங்குகிறது.

இங்குள்ள மகோன்னதமான ஸ்தூபி நான்கு புறமும் மதில்

காப்பிரைட்: இண்டியன் ரெவ்யூ (ஆங்கிலம்: ஸெப்டம்பர் '53), சென்னை.

சூழ்ந்து கம்பீரமாக மேற்குத் திசை நோக்கி நிற்கிறது. முழுவதும் செங்கல்லால் ஆன இந்தக் கோயிலில் பெரிய பெரிய கூடங்கள் நிறைந்திருக்கின்றன. தெற்குப் புறத்திலுள்ள கோயில் அறைகள் வடபுறத்து அறைகளை விடச் சிறியவை. மேர்புறத்து அறைகளுக்கும் கீழ்ப்புறத்து அறைகளுக்கும் அளவில் வித்தியாசங்கள் இருக்கின்றன. ஒவ்வோர் அறையிலும் தாமரை இதழ் போன்ற பீடங்கள் நடுவில் அமைந்திருக்கின்றன. அந்தப் பீடத்தின் மேல் 'ததாகத' என்ற கற்பனை மகா புருஷனின் பாதச் சுவடு குறிக்கப்பட்டுள்ளதையும் சிலவற்றில் காணலாம். புத்த, போதிசத்தவரின் புகழ் கூறி நிற்கும் காவி உடை தரித்த மனிதர்களின் அழகிய உருவங்கள் நெடிது உயர்ந்து நிற்பது போலச் சிலவற்றில் செதுக்கியிருப்பதையும் காணலாம்.

எழுபத்தைந்து அடி உயரமுள்ள அந்த நீண்ட சதுரக் கோபுரத்தில் வெளிப்புற வழி எதுவும் இல்லாததால் ஆராய்ச்சியாளர்களுக்குத் திணறலாகப் போய்விட்டது. கைதேர்ந்த சிற்பியின் வேலைப்பாடுகள் கொண்ட வளைவுகளும் அழகிய வர்ணச் சித்திரங்களும் நாலு புறமும் தென்படுகின்றன.

கறுப்புக் கல்லிலும் சிவப்புக் கல்லிலும் செதுக்கிய சித்திரங்கள் அவர்களுடைய பழங் காலத்தை ஞாபகப்படுத்துகின்றன. அமைதியாக அமர்ந்திருக்கும் 'சஜ்ஜனர்' சித்திரமும், கம்பீரமான பார்வையோடு தென்படும் 'அமிதாபர்' சித்திரமும் தாண்டவ நடம் புரியும் சிவனுடைய சித்திரமும் இன்றுள்ள சிதிலமான நிலையிலும் நம்மைப் பரவசப்படுத்துகின்றன. காரையில் வரைந்துள்ள சில சித்திரங்கள் வான சாஸ்திர உண்மைகளைக் குறிப்பிடுவனவாக அமைந்திருக்கின்றன. அந்தக் காலத்தில் அவர்களுக்கு இருந்த மதப் பற்றும் பக்திச் சிறப்புமே இத்தகைய மகோன்னதமான கோபுரமாக உருக்கொண்டு நிற்கின்றன என்பதை யார் மறுக்க முடியும்? சிம்மாசனங்கள் பல நொடித்தும் வீழ்ந்தும் நொறுங்கியும், சாம்ராஜ்யங்கள் பலமற்றுப் போயும், மதங்களும் சீலமும் நடுக்குற்றும் நலிந்தும் பல இடையூறுகள் நேர்ந்துள்ளன. இவை எல்லாவற்றையும் தன்னுள்ளே அடக்கிக் கொண்டு இந்தப் பாஹாட்பூர் கோபுரம் ஒளி வீசி நிற்கிறது. இங்கே வருகிறவர்கள் இந்தக் கோபுரம் அமைந்துள்ள வளம் பொருந்திய பூமியே இத்தனை சிறப்புக்கும் காரணம் என்று வியப்பார்கள். அந்தப் பூமியே புத்த கலாசாலை இங்கே உதிப்பதற்கும், பாடசாலைகளும் இந்து மடங்களும் தோன்றிச் செழிக்கவும் காரணமாக இருந்திருக்க வேண்டும். இங்கே காலில் படுகிற புழுதிகூட யுவான் - த்ஸாங்கைப் போலவும் மகாவீரரையும் மகேந்திரனையும் போலவும் அத்தனை பழம் பெருமை வாய்ந்தது. பஹாட்பூர் ஸ்தூபி அமைந்துள்ள இடத்திலிருந்து பார்த்தால் ஐம்பது மைல் சுற்றளவில் பல குன்றுகளும் மேடுகளும் அங்கும் இங்குமாகச் சிதறிக் கிடப்பது தெரியும்.

புதிதாகத் தோன்றிய பாகிஸ்தானிலுள்ள தினஜ்பூர், போக்ரா, ராஜஷாஹி, மால்டா ஜில்லாக்

களில் இங்கும் அங்குமாகப் பல ஸ்தூபிகளைக் காணலாம். அவற்றுள் பாஹாட்பூர், ஹலுத்விஹார் ஸ்தூபிகளே முக்கியமானவை.

ஆலமரங்கள் சூழ்ந்த இடத்தில் அமைந்துள்ள இந்தக் கோயில் இன்னும் நமக்கு அந்த மகாதேவனின் புனிதத் தன்மையை நினைப்பூட்டிக்கொண்டிருக்கிறது. இந்த ஆலயத்தையும் சரி, ஹலுத் விஹாரிலுள்ள ஆலயத்தையும் சரி, நிர்மாணித்த கரங்கள் மரித்துவிட்டன; நந்தியும் சங்கமும், துஷ்டரப் புஷ்பமும் பல காலம் கோயிலைப் போலவே தனிமையுடன் போராடிக்கொண்டு நிற்கின்றன. அந்தப் புன்செய் பூமி வளம் நிறைந்தும் சமசீதோஷ்ணமுள்ளதாயும் பூமி மட்டத்தை விடச் சிறிது உயர்ந்தும் இருப்பதைக் காண்கிறோம். அங்குள்ளவர்கள் புத்தகப் படிப்பில்லாதவர்கள் தான்; ஆனால் அறிவிலிகள் அல்ல. தயையும் தர்மசிந்தையும் அடக்கமும் நிரம்பியவர்கள்.

ஹலுத் விஹாரைப்பற்றிய கதை ஒன்று சொல்லுவார்கள். அது ஹலுவிஹாரா என்ற அரசனின் மாளிகையாக இருந்ததென்றும் அவனுக்குச் சந்தியாவதி என்ற பேரழகு மிக்க பெண் ஒருத்தி இருந்தாள் என்றும் சொல்லுகிறார்கள். இந்த ஸ்தூபி அமைந்துள்ள பகுதிகளில் ஸந்தியாவதியைப்பற்றிப் பாடப்படும் நாடோடிப் பாடல்களை அடிக்கடி கேட்கலாம்.

இந்தப் பிரதேசத்தை வெட்டிப் பார்த்தபோது இரண்டரை அங்குல உயரமுள்ள வெண்கலக் கணேச விக்கிரகம் ஒன்று கிடைத்திருக்கிறது. இது கி. பி. 8 அல்லது 9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த விக்கிரகமாய் இருக்கலாம் என்று கணக்கிட்டிருக்கிறார்கள்.

இந்த ஸ்தூபிகள், சரித்திர ஆராய்ச்சி முழுவதும் முடிந்த பின்பு பல அரிய உண்மைகளை வெளிப்படுத்தும் என்பது நிச்சயம். அந்த மகாபுருஷர்கள் - புத்தர்கள், புத்த மதத்தினரல்லாதவர்கள் எல்லாருமே - பொதுவான ஒரே ஆலயத்தில் பேரன்பையும், அஹிம்சையையும் ஒற்றுமையையும் எப்படிப் பாமர மக்களிடையே வளர்த்து உருவாக்கினார்கள் என்ற உண்மையை நாம் அறியலாம்.

இந்த உண்மையைப் பரப்பவே அசோக சக்கரவர்த்தி நாடெங்கும் இத்தகைய ஸ்தூபிகளைக் கட்டி வைத்தார் என்று தெரிகிறது. இதற்கெல்லாம் வீணான முக்கியத்துவம் காட்டப்படுகிறது என்றும் இவற்றிற்கும் பொது மக்களுடைய வாழ்க்கைக்கும் சம்பந்தம் எதுவும் இல்லையென்றும் சொல்லக் கூடியவர்களும் சிலர் இருக்கிறார்கள். ஆனால் சமீபத்தில் சாஞ்சியில் பல நாடுகளிலிருந்தும் கூடிய பிரதிநிதிகளைப் பார்த்தவர்களுக்கு இதன் அருமை தெரியவரும். ஆகவே சாஞ்சியில் நடைபெற்ற அ... புனருத்தாரணம் உலகப் பு... தாரணமாக விளங்கி இரு... மக்களையும் தட்டி எ... பழங் காலத்தில் நிலவிய அ... பேரின்பத்தை அடைய ...சி செய்யத் தூண்டவேண்டும்.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS, MADRAS-4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று"

ஒளவையார் பார்ப்பது யாவர்க்கும் நன்று

ஜெமினி

ஒளவையார்

இப்பொழுது 60 தியேட்டர்களில்

October '53 Regd. No. M. 4975

மஞ்சரி

விஜய - ஐப்பசி

ஊரும் உலகமும்		1
கலை நிறைந்த கம்போடியா	பம்பாய்க் க்ரானிக்கிள்	3
ரமணர்: வாழ்வும் வாக்கும்		8
என்னைக் கேளுங்கள்	காப்டன் என். சேஷாத்திரிநாதன்	10
இலங்கையில் தென்னை	ஸ்ரீலங்கா	14
சக்தி மிக்க விலங்கு	ஹிந்து	17
நாகரிகம் வளர்த்த பாட்டை	ஆரியன் பாத்	22
கல்வியினால் கவர்ச்சி குறைகிறதா?	ஸ்திரீ	25
அற்புத மனோசக்தி		29
அந்தப் பூனை		34
பத்து லட்சம் ஆண்டுக்குப் பின்	ரா. ஸ்ரீ. தேசிகன்	38
கார்ட்டூன் கதம்பம்		44
ராகவேந்திரர்	பிரஜாமதம்	46
தட்ச யக்ஞம்		50
தோலைப் பாதுகாத்தல்	பிரக்ருதி	55
மலடு என்பது என்ன?		58
எகிப்தின் சர்வாதிகாரி		62
பாபு ராவ் பதில் சொல்லுகிறார்	பிலிமிண்டியா	67
[illegible] (… கதை)	சரத் சந்திரர்	69
எதிரொலி (மராட்டி நாவல்)	ய. கோ. ஜோஷி	73
ஒற்றுமைக் கோயில்	இண்டியன் ரெவ்யூ	86